ஜைன இளைஞர் மன்ற வெளியீடு

# கலிங்கத்துப் பரணி ஒரு மதிப்பீடு

க. ப. அறவாணன்
M.A., B.O.L. M.Litt.

ஜைன இளைஞர் மன்ற வெளியீடு: 7

# கலிங்கத்துப் பரணி
# ஒரு மதிப்பீடு

ஆசிரியர் :
க. ப. அறவாணன்
M.A., M.Litt.
துணைப்பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-600030
தொலைபேசி : 423791

வெளியீடு :
ஜைன இளைஞர் மன்றம்
1-A, போக் சாலை
சென்னை-600017

AN EVALUATION OF KALINKATTHUPPARANI (Tamil)

© Kadalangudi Palaniyappa Aravaanan

First Edition : Jan. 1976

Price : Rs. 4

O 31, 1. E, 78, 1 : g
N 76

Printed at : Novel Art Printers - Madras-600014

Copies also available at Paari Nilayam, Madras-600001

படையல்

டாக்டர் ந. சஞ்சீவி, M A.,M.Litt , Ph.D.

அவர்களுக்கு

# உள்ளுறை

ஆசிரியரின் முன்னுரை-3
பதிப்புரை-7

I. பரணி எழுந்த சூழல் - சயங்கொண்டாரின் ஊர் -காலம்-சமயம் - சயங்கொண்டார் என்ற பெயர் - எழுதிய பிற நூல்கள் - பரணி இலக்கிய வரலாறு - பரணி இலக்கணம் - பரணியாப்பு - பரணி உறுப்புகள் - பரணி-பெயர்க் காரணம்.

நூலாசிரியர் வரலாற்று இயல் 9-36

II. கலிங்கத்துப்பரணி பதிப்பு வரலாறு - நூலமைப்பு - தாழிசைகளின் எண்ணிக்கை - பாடபேதங்கள் - கடை திறப்பு பற்றிய ஆய்வு - கலிங்கத்துப் பரணி ஒரு வரலாற்றுக் கருவூலம் — கருணாகரத் தொண்டைமான் - கலிங்கப்போர்-பிறசெய்திகள்: அரசர், அரசியர், அமைச்சர், படைத் தலைவர், நூல்கள், மலைகள், ஆறுகள், கொடிகள், பழக்க வழக்கங்கள், உயிரியல் பயிரியல் செய்திகள், இசைக்கருவிகள், அணிகலன்கள், ஓவியக்கலை, கட்டிடக்கலை — கலிங்கத்துப் பரணியின் மொழி நிலை-நாடகப்போக்கு.

நூல் பற்றிய விளக்க இயல் 37-83.

III. சயங்கொண்டாரின் பாத்திறம்: வீரம், அச்சம், நகை, காதல் — சில ஒப்பியல் கருத்துகள்—பரணியில் ஓசைநயம்.

திறனாய்வும் மதிப்பீடும் 84-112.

IV. பரணி இலக்கியப்பட்டியல் — மறைந்து போன பரணி நூற்கள் —பரணி பற்றிய நூல்கள் அடைவு - பொருட் குறிப்பு அகர வரிசை.

இணைப்புகள் 113-128

## அறிஞர் முன் அரங்கேற்றம்

12-2-74

சென்னைப் பல்கலைக் கழகக் கருத்தரங்க மேடை!

என் பெருமதிப்பிற்குரிய சிலம்புச் செல்வர் மாண்புமிகு, ம.பொ.சி. அவர்கள் தலைமையில் பரணி பற்றிய என் உரை அரங்கேறியது. அந்த நல் வாய்ப்பை எனக்கு நல்கிய பெருந் தகை, தமிழர் நல்வாழ்வில் பேரீடுபாடு கொண்ட பேரா. டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் ஆவார். அன்றைய அரங்கில், என்னிடம் இருந்த எல்லாச் செய்திகளையும் வழங்க முடிய வில்லை. காலம் போதாமையே காரணம். அன்று பேசிய என் உரை மட்டும், பல்கலைக் கழக வெளியீடான பெருந்தமிழில் (பக்கம்—107—126) சயங்கொண்டார் என்ற தலைப்பில் வெளி வந்துள்ளது. எஞ்சிய கருத்துகளையும், மேலும் சேர்த்தவற் றையும் திரட்டி இந்நூல் வழி தந்துள்ளேன்.

பரணி ஆராய்ச்சியில், பல புதிய பார்வைகளையும், செய்தி களையும் இந்நூல் தருகிறது. கவிதையை அழகுறுத்த சயங் கொண்டார் கைக்கொண்ட முறைகளை ஆராய்ந்துள்ளேன்.

கலிங்கத்துப் பரணியின் சிறப்பு, அது கவிதைக்கும், அரசிய லுக்கும் ஒரு சேர மூலமாய் இயங்குவது. கவிதை அழகை, அரசியல் செய்தி வேகம், அமுக்காமல் காப்பாற்றி இருக் கிறுர் ஆசிரியர். இரண்டையும் இந்நூலில் நீங்கள் காண லாம்.

அக்கு அக்காக அறுத்துக் காட்டுவது ஆராய்ச்சியின் ஆன்மா. அப்படியே வைத்து அனுபவித்துத் துய்ப்பது கவிதைச் சுவைஞனின் கடமை. இவ்விரண்டையும் ஒரு சேரக் காட்டுவது கடினம்--எனினும், இந்நூலில் முதற்பகுதி ஆய்வாகவும், பிற்பகுதி திறனுய்வாகவும் அமைக்கப்பட்டிருக் கிறது.

'இலக்கியங்களில் இன உணர்ச்சி' என்ற கண்ணேட்டத் தில், சிலம்புச் செல்வர், கலிங்கத்துப் பரணியைத் தம் அண்மை நூலான 'கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி'யில் அலசு கிறுர். அவரது ஆய்வின் மையம்—கவிஞன் கைக் கொண்ட பொருளைப் பற்றியதாகும். ஒரு கவிஞனைக் கவிஞன் எனத் தீர்மானிப்பது அவன் கையாளும் பொருள் அன்று. ஆகவே சயங்கொண்டாரை ஒரு கவிஞர் என அணுகும் இந்நூலில் அப்பார்வை இடம் பெறவில்லை.

போர்க் களத்தை மையமாகக் கொண்டு தனி நூலைப் படைக்கும் பான்மை, தமிழில் 'களவழி நாற்பது' என்ற நூலில் தொடங்குகிறது. அதனது கனிந்த நிலையே கலிங்கத் துப் பரணி. இத்தகு போக்கு வேறு மொழிகளில் இன்று தோன்றியுள்ளது எனினும், பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இல்லை. அண்மையில், போர், ஆங்கிலக் கவிதைகளை எப்படிப் பாதிக்கிறது என்பதையே 'The Poetry is in the Pity' எனும் தலைப்பில் மில்டிரட் டேவிட்சன் (Mildred Davidson, Chetto & Windus' London 1972) எழுதிய நூல் காட்டுகிறது. தமிழில் அத்தகு முயற்சிகள் செய்யப்படவில்லை. செய்யப் படுகிறுற்போல, உலகப் போர்களும், சீன இந்தியப் போரும், பாகிஸ்தான்—இந்தியப் போர்களும், தமிழ்க் கவிதைகளைப்

பேரளவு பாதிக்கவில்லை. வங்க மொழி எந்த அளவு போர்த் தாக்கம் பெற்றிருக்கிறது என்பதற்கு அண்மையில் (1974-இல்) வெளி வந்த 'The Rebel And Other Poems' என்ற காசி நசுருல் இசுலாம் (Kazi Nazrule Islam) கவிதைத் தொகுப்புச் சாட்சியம்!

பரணியைத் தோற்றுவித்த இனத்தில் போர்க் கவிதைகள் தொடர்ந்து பெருகாமை போனது வருந்தத் தக்கதே. கவிஞர்கள், சமூக உணர்வு பெற்றாலன்றி, அந்த நிலை உருவாகாது போலும். போர்கள், தமிழகத்தை நேர்முகமாகத் தாக்காமையும் இதற்குக் காரணம்.

தமிழ்க் கவிதையின் சீர்மையையோ, சீர்மை இன்மையையோ, வேறு மொழிக் கவிதைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். ஒப்பாய்வே உண்மை காண்டலின் மூலக் களம். இப்போக்கில், அங்கங்கே ஆங்கில வழி அறிந்த செய்திகளை ஒப்பிட்டுக் காட்டியுள்ளேன். அவை முடிவானவை அல்ல. ஒப்பாய்வின் ஒரு சில முதல் படிகளைத் தொட்டுக் காட்டியுள்ளேன். அவ்வளவே!

கலிங்கத்துப் பரணி பற்றிய முழுமையான சான்று நூலாக (Source book) இதனை அமைக்கப்பெரிதும் முயன்றுள்ளேன். அதனாலேயே கலிங்கத்துப்பரணி பற்றிக் கட்டுரை அடைவு, நூல் அடைவு, பதிப்படைவு ஆகியவற்றையும், ஆங்கிலத்தில் வந்துள்ள கட்டுரைகளையும் அரிதில் முயன்று திரட்டிச் சேர்த்துள்ளேன்.

பள்ளு, குறவஞ்சி என்ற பிரபந்த இலக்கியங்கள் ஒரு காலத் தமிழ்நாட்டில், நடிக்கப்பட்ட நாடகங்களே! இப் பட்டியலில், பரணியையும் சேர்க்கலாம் என்று படுகிறது. அதனால் கலிங்கத்துப் பரணி ஒரு நாடகமாக எவ்வாறு அமைகிறது என்று காட்டியுள்ளேன்.

தனி மனிதத் துதியை நோக்கமாகக் கொண்டு கவிதை படைக்கப்படும்போது, பெரும்பாலும்கவிதை நோக்கு இரண்டாம் தரத்திற்கு இறங்கி விடுவதே வழக்கம். ஒட்டக் கூத்

தரின், குலோத்துங்க சோழன் உலா, இதற்குப் பொருந்திய சான்று. ஆனால் இந்தப் போக்கில், தன் நூலைத் தானும் நடத்தி தன் கவிதையைச் சாகடிக்காமல் காப்பாற்றிக் கொண்ட பெருமை சயங்கொண்டார்க்கு உண்டு. எனவே தான், சயங்கொண்டார்க்கு அறுநூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த கவிஞன் ஒருவன், 'பரணிக்கோர் செயங்கொண் டான்' என்று போற்றினான். இந்தப் போற்றுதல், சயங் கொண்டானின் நிலை பேற்றைக் காட்டுகிறது.

கலிங்கத்துப் பரணி வெற்றிக்கு ஒரு காரணம், அந் நூலில் அமைந்துள்ள ஓசை அழகே! உள்ளடக்கத்திற்குத் தக, கவிதைகள் துடிப்பதைக் கேட்கலாம். சயங்கொண்டார் தம் ஓசை வெற்றிக்குரிய காரணங்களைத் தெளிவாக 'ஓசை நயம்' எனும் தலைப்பில் காட்டியுள்ளேன். இதனைப் பகுத்துக் காட்ட நான் எடுத்துக் கொண்ட உழைப்பும், காலமும் கொஞ்சமல்ல. இதனை அப்பகுதியை ஊன்றிப் படிப்பவர்கள் அறிந்து கொள்வர்.

'இலக்கிய இன்பம்' தெவிட்டாது இனிப்பது; தன்னிகர் அற்றது. அவ்வகையில் கலிங்கத்துப் பரணி உவட்டாது இனிக்கும் இன்பம் தரவல்லது. கலிங்கத்துப் பரணி மூல நூலைப் பயில்வதற்கு முன்பு ஒரு முறையும், பயின்ற பின்பு ஒரு முறையும், இந்நூலைப் பயிலுங்கள்! பரணிக் கடலைக் கடக்க, இந்நூல் ஒரு தோணியாகத் துலங்கும்! பரணிப் பூங்காவைப் பார்க்க, இந்நூல் ஒரு தொலைக் கண்ணாடியாகத் துணை நிற்கும்!

இந்நூலை வெளியிடும் பொறுப்பை மேற்கொண்ட சைன இளைஞர் மன்றத்தார்க்கும், பொருளுதவியை அணியமாக்கிய நண்பர். புலவர் சிவ. ஆதிநாதர்க்கும், அச்சக நண்பர் கவிஞர். நாரா. நாச்சியப்பர்க்கும் என் நன்றி.

பொங்கல் நாள், 
15-1-76

அன்புள்ள
க.ப. அறவாணன்

# பதிப்புரை

மெய்ப்பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகி
துக்கம் கெடுப்பது நூல்.

இலக்கியங்கள் எழுதற்குச் சமுதாயச் சூழல் அடித்தள மாக அமைந்து கிடக்கிறது. குறிப்பிட்டதொரு கால கட்டத்தில் குறிப்பிட்டதொரு வகையான இலக்கியம் தோன்றுதற்கு இந்தச் சமுதாயச் சூழலே தலையாய காரணியம் என்பதை நாம் உய்த்துணரலாம். பரணி அப்படித் தோன்றியதே. பரணி என்பது தமிழ் மொழியிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. 'தென்தமிழ்த் தெய்வப் பரணி' என ஒட்டக்கூத்தரால் பாராட்டப் பெற்ற கலிங்கத்துப்பரணி 'பரணிக்கோர் சயங் கொண்டான்' எனப்புகழப்பெறும் சயங்கொண்டாரால் பாடப் பெற்றதாகும். இவர் தீபங்குடியைச் சேர்ந்தவர் என்பர்.

நூலாசிரியர் சைனர். அவர் சமயத்தைப் பற்றி கருத்து வேறுபாடு உண்டு. அவர் சைன சமயத்தை சார்ந்தவர் என்பதற்கு அகச்சான்றுகள் இல்லை என்பர். இன்றைக்கு நமக்குக் கிடைத்துள்ள கலிங்கத்துப் பரணி பிறர் கை படாத மூல நூல் அன்று என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். நடு நிலைமையற்ற சிலர் பதிப் புத் துறையில் முதல் முதலில் ஈடுபட்டபோது நூலாசிரியர் களின் வரலாற்றைக் கெடுத்த வரலாற்றை வரலாற்று அறிஞர் அறிவர். பரணியிலேயே இடைச் செருகல்கள் பலஉள என்பது அறிஞர்தம் கருத்து. தாழிசைகளின் எண்ணிக் கையில் உள்ள வேறுபாடே இதனை வலியுறுத்தும். எடுத்துக் காட்டாக, ''அணிகொண்ட குரங்கினங்கள்'' என வரும் தாழிசை, பரணி ஏடுகளில் எதிலும் காணப் பெறவில்லை என்று பண்டித அ. கோபாலய்யர் குறிப்பிடுவதாக இந்

நூலுள்ளேயே குறிக்கப்பட்டுள்ளது. புராணக் கதைக் குறிப் பொன்றினைத் தாங்கி நிற்கும் இந்தத் தாழிசை இடைச் செருகல் என்பதால், இடைச்செருகல் மேற்கொண்டோர் நோக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இடைச் செருகலாக உள்ள தாழிசைகளை மனத்தில் கொண்டு நூலாசிரியர் சைனர் அன்று எனத்துணிவு செய்வது சரியன்று. இடைச்செருகலாக இடம் பெற்றுள்ள தாழிசைகளையும் நீக்கப்பட்ட தாழிசைகளையும் ஆயும்பணி இனித் தொடர வேண்டும். அறிஞர் பெருமக்கள் உண்மையைக் காண முயல வேண்டும்.

'கலிங்கத்துப் பரணி ஒரு மதிப்பீடு' என்னும் இவ்வரிய ஆராய்ச்சி நூல் ஒரு பழைய இலக்கியத்தைப் புதிய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்கிறது. நூலாசிரியர் திரு. க ப. அறவாணன், இன்றைய திறனாய்வாளர்கள் இலக்கியங்களை அணுகும் முறையில் அணுகாமல், சற்று மாறுபட்ட நிலையில் நின்று, நூலை அணுகியிருக்கிறார். அதனால் பரணியைப் படிக்க விரும்பும் பாமரனும், ஆய்வு செய்ய விரும்பும் அறிஞனும் ஒரு சேர விரும்பும் வகையில் நூல் அமைந்து கிடக்கிறது. ஆசிரியர் பன்முனைப்பட்ட கண்ணோட்டத்தில் நூலைப் பகுத்துச் சுவைத்துள்ள போக்கினை இந்நூலைப் படிப்போர் உணர்வர்; உவகை பெறுவர்.

இவ்வினிய இலக்கியப் படைப்பை எங்கள் ஏழாவது வெளியீடாக வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம். ஜைன இளைஞர் மன்றம் மேற்கொள்ளும் நூல் வெளியீட்டுப் பணி களில் அரிய துணையாக நின்று ஊக்கிவரும் திரு. க. ப. அறவாணன் அவர்களுக்கு, இந்நூலை வெளியிட வாய்ப்பு தந்தமைக்கு அன்பு கலந்த நன்றி கூறிக்கொள்கிறோம். நூலை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த 'நாவல் ஆர்ட்சு' நாரா. நாச்சியப்பர்க்கும் எங்கள் நன்றி.

தமிழ் கூறும் நல்லுலகமும், நூலகங்களும், கல்லூரிகளும் நூலை வாங்கி எங்கள் பணியை ஊக்கி உறுதுணையாக நிற்க வேண்டுகிறோம்,

முக்குடையான் தாள் வாழ்க!

ஜைன இளைஞர் மன்றத்தார்.

## 1. பரணி எழுந்த சூழல்

பரணி, போர் வெற்றியைப் பாடும் இலக்கிய வகை. இவ்விலக்கியவகை, பிற்காலச் சோழர் காலத்தில் (கி. பி. 10 ஆம் நூற்றாண்டு முதல்) மிகவாகப் பல்கி இருக்கிறது. இதற்கு முதற்காரணம் வேறு எக்காலத்திலும் இல்லாத போர் வெற்றியே. பழைய காலத்தில் போர்கள் தமிழகத்தில் நிகழ்ந்தன எனினும், அவை பெரும்பாலும், தமிழ் வேந்தரே, தமக்குள் நிகழ்த்திக் கொண்டவை. சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவரும் ஒருவர் மற்றொருவருடனும், ஒரு குடி வேந்தருடனும் நிகழ்த்திக் கொண்டவை. சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் போர் ஒன்று மட்டுமே இதற்கு விலக்கு. வேற்றுநாட்டு இன, மொழி வேந்தரோடு போர்தொடுக்கிற அளவிற்கு மாற்று நிலத்தவர் தமிழ் மூவேந்தர் மீது பகை கொள்ளாது இருந்திருக்கலாம். எப்படி ஆயினும், கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் இந்நிலை மாறியது. சோழர், பேரெழுச்சி கொண்டு, தமிழகத்தை ஒரு குடைக்கீழ் கொண்டு வந்தனர். அம்மட்டுமன்றி, சோழர் தென்னகம் முழுமையும், இலங்கை முதலான தீவுகளையும், கடாரம் முதலான தொலைதூர நாடுகளையும் வென்றனர். தமிழர்தம் கொடி, கடல் கடந்தும் பறந்தது. இவ்வெற்றி எளிய ஒன்றன்று. பிற்காலத்தில் வெள்ளையர் உலகெங்கும் ஏற்படுத்திய காலனி ஆட்சியை விட, அவரினும் பன்னூறு ஆண்டுகட்கு முன், ஆசியக் கண்டத்தின் பெரும் பகுதியைத் தமிழ்க் கொடியின் கீழ்க் கொண்டுவந்தது — வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இராசராசன், இராசேந்திரன் போன்ற தென்னாட்டு அலெக்சான்டர்களின் சாதனைச் சரித்திரம் இது. இவ்

வரும் பெரும் வெற்றி, பாவலர்களின் எழுதுகோலை ஈர்த்திருக்கிறது. முதலிரண்டாம் உலகப் போர்கள் அவற்றிலே பங்கு ஆற்றிய பிரிட்டனில், பல போர்ப் பாவலர்களை உருவாக்கியது.[1] அதுபோலத் தமிழகத்திலும் பரணிப் பாவலர்கள் உருவானார்கள். ஆக, இடைக் காலத்தில் பல்கிக் கிடந்த வெற்றிகளே, போர்ப்பரணி தோன்றுதற்குக் காரணிகளாகும்.

இக்காரணம் மட்டுமன்றி இன்னொரு தலைமைக் காரணமும் உண்டு. பரணி இலக்கியத்தில், காளி, யானை, பாலை, பேய் ஆகியன பெரும் பங்கு பெற்றுள்ளன; பெருகப் பேசப்பட்டுள்ளன. பரணி இலக்கணங்கள் ஒவ்வொன்றும் இந்நான்கையும் வற்புறுத்துகின்றன. இவற்றுள் **காளி** பற்றிய குறிப்பு தலைமையானது. காளி கோயில், காளிதேவி, காளிதேவி — பேய் உரையாடல்கள், குலோத்துங்கன் வரலாற்றைக் காளி, பேய்களுக்குக் கூறுதல், காளிக்குக் கலிங்கப்போர் நிகழ்ச்சியைக் கூளி கூறுதல், காளி கூழ் சமைக்குமாறு பேய்களுக்கு ஆணையிடுதல், பேய்கள், காளியையும், குலோத்துங்கனையும் புகழ்ந்து பாடுதல்— என்பன, கலிங்கத்துப்பரணி இலக்கியத்தில், காளியின் பெருஞ்செல்வாக்கைப் புலப்படுத்தும் பகுதிகளாகும். ஏனைய பிற பரணி இலக்கியங்களும் இவ்வாறே காளியை வைத்துச் சமைத்துள்ளன. பரணி இலக்கணம் கூறும் இலக்கிய நூல்களும் 'காளி'யின் பங்கைப் பகர்கின்றன. பன்னிரு பாட்டியல் காளிகோயில், காளியை ஏத்தல், காளி பீடம், காளியைப் பழிச்சுதல் என்று பலவற்றையும் (243), பிரபந்த மரபியல் காளி கோட்டம், காளிக்குப் பேய் சொல்லுதல், அப்பேய்களுக்குக்

1. அறவாணன், கவிதை கிழக்கும் மேற்கும் ப. 48-54.

*காளி சொல்வது என்றும் (19) இலக்கண விளக்கம், கொடுங்காளி கோட்டம், காளிக்கு அது சொலல், பேய்க்குக் காளிசொலல் என்றும் காளியின் பங்கைப் பறைசாற்று கின்றன. ஆக, இக்குறிப்புகள், பரணி இலக்கியத்தில் காளி பெற்ற பெருஞ்செல்வாக்கைப் புலப்படுத்துகின்றன. காளி, இதற்கு முன்னேயே கொற்றவை, காடுகிழவோள் என்று கொண்டாடப்பட்டிருந்தாலும், கி. பி. 10 ஆம் நூற்றுண்டில் இவள் கொண்டாடப்பட்ட அளவிற்கு முன்பில்லை என்று தெரிகிறது. 'காளி' என்ற பெயராட்சி முன்பே இருந்தாலும் இக்காலத்தில்தான் பேரளவு அறிமுக மாகிப் பரவி இருக்கிறது.*

*கி. பி. 1012-1044 வரை, முதல் இராசேந்திர சோழன் அரசாண்டான். இவன் இராசராசன் புதல்வன் ஆவான். நெப்போலியனுக்குப் பிறந்த நெப்போலியன். இவன் பெற்ற வெற்றிகள் பல. இவற்றுள் குறிப்பிடத் தக்கது வங்காள வெற்றியாகும்.*

**தன்ம பாலனை வெம்முனை அழித்து**
**வண்டுறை சோலை தண்ட புத்தியும்**
**இரண சூரனை முரணறத் தாக்கித்**
**திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்**
**கோவிந்த சந்தன் மாவிழித் தோடத்**
**தங்காத சாரல் வங்காள தேசமும்**
**தொடுகழல் சங்குகொடு அடல்மகி பாலனை**
**வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி**

*முதல் இராசேந்திரன் வங்காள வெற்றியை இப்பகுதிகள் குறிப்பனவாம். மெய்க்கீர்த்தியில் குறிக்கப்படும் வங்காளம் என்பது இன்றைய பங்களா தேசமாகும். மகிபாலன் என்பான் கி. பி. 11 ஆம் நூற்றுண்டில் வங்காள மாநிலத்தை ஆண்டவன் ஆவன். பால மரபினன். இவன்*

கீழ்ப் பல சிற்றரசர்கள், வங்காள நாட்டின் மேற்குப் பகுதியை ஆண்டனர். தண்டபுத்தி என்பது மிதுனபுரி மாவட்டத்தின் தென்பகுதியும், தென்மேற்குப் பகுதியும் அடங்கிய நிலப்பரப்பாகும். இதனது வேந்தன் தன்ம பாலன். தக்கணலாடம் என்பது, வங்காளத்திலுள்ள கூக்ளி (Hooghly) ஔரா(Howrah) மாவட்டங்களைக் கொண்ட நாடு, இதன் அரசன் இரணசூரன். உத்தரலாடம் என்பது மூர்சிபாத் (Murshidabad) பீர்பூம் (Birbhum) மாவட்டங்களை உள்ளடக்கியது. இதன் வேந்தன் கோவிந்த சந்தன். இம்மூவரும் மகிபாலனுக் கடங்கிய சிற்றரசர்கள் போலும். இவ்வனைவரையும் வென்றடக்கியதையே மெய்க்கீர்த்தி உணர்த்துகிறது. தோல்வியுற்ற மன்னர்களின் தலைகளில், கங்கைநீர் நிரம்பிய குடங்களையும், வைத்துக்கொண்டு தன் நாட்டிற்குத் திரும்பினர், இராசேந்திரனின் படையினர். இப்படை யெடுப்பின் பயனாகத் தமிழர் நாகரிகம் வங்கநாட்டில் புகுந்தது.[1] படையுடன் சென்ற தமிழ் நாட்டுத் தலைவர் களுள் ஒருவன் மேல் வங்காளத்தில் தங்கி விட்டான் என்றும் அவன் வழியில் வந்த சாமந்த சேனன் என்பவனே பிற்காலத்தில் வங்காளத்தில் ஆட்சி புரிந்த சேரமரபினரின் முதல்வன் என்றும் திரு. ஆர். டி பானர்ஜி என்னும் அறிஞர் கூறுகின்றார்.[2] சேலம் மாவட்டத்தில், வைத்தியர், வங்காளர் என்ற பெயர் படைத்த சாதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்விருவரும் வங்காளத்திலிருந்து வந்து தங்கிய தலைமுறையினராதல் கூடும். மிதிலையை ஆண்ட கருநாடரும் அவ்வாறு சென்றவர்களாக இருத்தல் வேண்டும் என்று பேரா. கே. ஏ. என் சாஸ்திரி

1. சதாசிவ பண்டாரத்தார் தி.வை. பிற்காலச் சோழர் சரித்திரம் I 1958, ப. 167.

2. Palas of Bengal PP. 73 and 99

கருதுகிறார்[1]. திரிலோசன சிவாச்சாரியாரது சித்தாந்த சாராவளியின் உரையில் இராசேந்திர சோழன் கங்கைக் கரையிலிருந்து பல சைவர்களை அழைத்து வந்து காஞ்சி யிலும், சோழ நாட்டிலும் குடியேற்றினான் என்று சொல்லப்பட்டுள்ளது[2]. கும்பகோணம் நாகேச்சுரத்துக் கோயிலில் இறைவன் திருமுன்னர் வைக்கப்பட்டுள்ள கங்கை விநாயகர் படிமமும் அப்படையெழுச்சியில் வட நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு இராசேந்திரனால் அங்குப் பிரதிட்டை செய்யப் பெற்றதே யாகும். அப்படிமம் அமைக்கப் பெற்ற கல்லும், அதன் சிற்ப அமைதியும், கங்கை விநாயகர் என்ற சிறப்புப் பெயரும் — அப்படிமத்தின் வட இந்திய வாழ்வை—வரவை வற்புறுத்துகின்றன.[3]

இவையன்றி காளி வழிபாடும் இவன் காலத்திலேயே வடபுலத்திலிருந்து தமிழகம் வந்திருத்தல் வேண்டும். வங்கநாடு காளி வழிபாட்டில் மிகச் சிறந்தது. பார்க்கும் இடமெல்லாம் காளிகோயில்களே. கல்கத்தா என்ற பெயரே, 'காளிகோட்டம்' என்ற பெயரினது. படை யெடுத்துச் சென்ற படைவீரர்களாலும் வடபுலத்திலிருந்து தமிழகம் போந்த சைவாச்சாரியர்களாலும் காளி வழிபாடு, தமிழகத்தில் அறிமுகமாகிப் பெருகியிருத்தல் வேண்டும். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் இராசேந்திர சோழ னுக்குப் பின்வந்த சயங்கொண்டார் காலத்தில், தமிழகம் எங்கும் காளிவழிபாடு பரவிப் பெருகி இருத்தல் வேண்டும். பரணியில் இடம் பெற்றிருக்கிற அளவுக்குக் காளி வழிபாடு கி. பி. 10 ஆம் நூற்றாண்டிற்கு முன் இல்லை. காளி சிற்பமும் சோழர் காலத்திற்கு முன்பு இல்லை. தலைமைப்

1. Sastri K.A.N. The Colas Vol. P. 254
2. Ibid.
3. பிற்காலச் சோழர் வரலாறு, ப. 166

பாத்திரங்களுள் ஒன்றாக, காளி இருப்பதும், அவளது தோற்றத்தைப் பற்றிய வருணனைகளும் சோழர்காலத்திற்கு முன்பு தமிழகத்தில் பெருக இல்லாதிருந்தமையும் இக் கருத்தை வற்புறுத்துகின்றன.

பாலை நிலம் என்பதே சங்ககால வழக்கு. பாலைவனம் என்பது பிற்கால வழக்கு. இவ் வழக்கையே சயங் கொண்டார் கையாளுகிறார். பாலை பற்றிய வருணனை களும் ஆராய்ச்சிக் குரியவை. கலித்தொகை முதலான சங்க இலக்கியம் காட்டும் பாலை நிலமும், பரணி இலக் கியங்கள் படம் பிடித்துக் காட்டும் பாலைநிலமும் ஒன்றல் லவோ என்று தோன்றுகிறது. பாலைக்கலி காட்டும் பாலை, வறண்ட குறிஞ்சியும், முல்லையுமே ஆகும். வளமான குறிஞ்சியிலும், முல்லையிலும் வாழ்ந்த கருப்பொருள்கள் கோடையிலே வளங்குன்றி வாடி வதங்கி இருப்பதையே சங்கப்பாலை காட்டுகிறது. ஆனால் பரணிப்பாலை வளங் குன்றிய குறிஞ்சி, முல்லை என்பவற்றைக் காட்டுவதும் அன்றி, நீண்ட மணல் வெளியைக் (Desert) காட்டுகின்றது. இத்தகு மணல் வெளிப்பாலை, தமிழகத்தில் இல்லாதது. தமிழிலக்கியங்கள் காட்டாதது. "அணிகொண்ட குரக்கு இனங்கள் அலைகடலுக்கு அப்பாலை மணல் ஒன்று காணமல் வரை எடுத்து மயங்கினவே" என்ற தாழிசையில் வரும் 'பாலைமணல்' — தமிழகம் காணாதது. இஃதன்றியும் ஒட்டகம் பற்றிய ஐந்து குறிப்புகள் கலிங்கத்துப் பரணியில் உள்ளன.[1] சோழ அரசனுக்குத் திறை செலுத்தும் மன்னர்கள் ஒட்டகங்களைத் திறைப் பொருளாக நல்கி யதையும் (344), பாலைவனத்தில் வாழும் பேய்கள், ஆங்குள்ள ஒட்டகங்களைத் தம் குழந்தைகள் என்று கருதித்

1. ஒட்டகம் 6-3, 11-23 11-122, 11-146, 12-20.

தன் இடையில் எடுத்து வைத்துக் கொண்டதையும் பரணி காட்டுகின்றது. (142)

அட்டமிட்ட நெடுங்கழை காணில் என்
அன்னை அன்னை என்றுலும் குழவிய;
ஒட்ட ஒட்டகம் காணில் என் பிள்ளையை
ஒக்கும் ஒக்கும் என்று ஒக்கலை கொள்வன

ஒட்டகம் — தமிழ்நாட்டில் இல்லாத உயிர். பாலை வனத்தில் மட்டுமே வாழும் உயிர். அத்தகு ஒன்றைப் பற்றிப் பரணி இலக்கியத்தில் குறிப்பிருப்பது சிந்தனைக் குரியது. கருணுகரன், கலிங்கத்தினின்று கவர்ந்த பொருள்களுள் ஒன்ருக ஒட்டகம் குறிப்பிடப்படுகிறது. (11-148) ''நடைவயப்பரி இரதம், ஒட்டகம், நவநிதிக்குவை, மகளிர் என்று அடைய இப்பொழுது அவர்கள் கைக் கொளும் அவை கணிப்பதும் அருமையே''

நீண்ட மணல் வெளிப்பாலையும், அதன்கண் வாழும் ஒட்டகமும், பரணி இலக்கியப் படைப்பாசிரியர்கட்கு வட புலப்பயண அறிவு இருந்ததைக் காட்டுகின்றன. சோழர் காலத்தில், வடபுலம் வரை சென்ற தமிழ் மறவர்கள் ஆங்குள்ள பாலைநிலத்தையும், ஆங்கு வாழ்ந்த ஒட்டக உயிரையும் கண்டனர் போலும், அதன் எதிரொலியே பரணியிலக்கியத்தில் பாலைநிலைப் படைப்புப் போலும்.[1]

## 2. செயங்கொண்டார் என்ற பெயர்

தமிழிலக்கிய வரலாற்றில் இடைக்காலம், அரும்பெரும் இலக்கியத் தோற்றத்திற்குத் தடைக் காலம் என்று

1. பழைய தமிழிலக்கண இலக்கியங்களிலும் ஒட்டகம் பற்றிக் குறிப்புகள் உள்ளன. தொல்காப்பியம்-மரபியல் 18-1, 53-1, அகநானூறு : 245, சிறுபாணாற்றுப்படை 154. இதுபற்றிய ஆய்வை என் நூல் ஐந்திரத்தில் பார்க்க.

கருதுவார் உண்டு. பழகிப்போன புராணச் செய்திகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுகின்ற இலக்கியங்கள் பல்கிய காலம் என்றாலும் இக்கால எல்லையில் தோன்றிய சில இலக்கியங்கள் உலக இலக்கிய வரலாற்றின் திருப்பு முனைகளாகும். வீறுமிக்க சோழர் ஆட்சி தமிழ்நாடு கடந்து தரணிவரைப் பரவி இருந்தது. வெங்கடராமா மகனை மாதவனும்; சுந்தரியும் காவிரியின் தென்கரையி லுள்ள ஒரு சிற்றூரில் தங்கி வேதத்திற்கு உரை வகுத் தார்கள். உலகத்தையே வெற்றி கண்ட வீரர்களைப் போல இன்பமான சூழலில் உரை வடித்ததாகக் குறித்துள் ளார்கள்.[1] இக்குறிப்பிலிருந்து சோழர் கால நாடு பூலோக சொர்க்கமாகப் பொலிந்து நின்றது என்பது புலனாகின்றது. இச்சூழலில்தான் சயங்கொண்டார் என்ற கவிச்சக்கர வர்த்தி பிறக்கிறார். இவரே கலிங்கத்துப்பரணி என்ற வீர இலக்கியத்தின் ஆசிரியர் ஆவார். இச்செய்தி தஞ்சாவூர் அரண்மனை சரசுவதி மகாலில் உள்ள பழையதோர் ஏட்டுச் சுவடியின் ஈற்றில் காணப்படுகிறது.

> "குலோத்துங்க சோழ பெருமாளுக்குத் தீபங்குடி கவிற் சண்டிதன் **கவிசக்கிரவர்த்தி சயங்கொண்டார்** பாடின கலிங்கத்துப்பரணி முற்றும்"

என்ற தொடரால் வலியுறுகிறது.[2] கவிற்பண்டிதன் என்பதற்கு மாறாகக் கவிராசக் கண்டிதன் என்ற பாடம், அச்சிட்ட சரசுவதி மகால் நூல்நிலைய ஏட்டில் காணப் படுகிறது.[3]

1. Sastri. The Colas P 687.
2. கோபாலய்யர் அ. கலிங்கத்துப் பரணி 1923. ப. 10.
3. பட்டியல் தொகுதி I 1925 ப. 228

## 3. சயங்கொண்டாரின் ஊர்

மேலே கண்ட குறிப்பால் தீபங்குடி என்ற ஊர் இப் பாவலரின் பிறந்தவூர் என்பது புலனாகின்றது. 'தொண்டை வளநாட்டில் துலங்கும் புகழ்வீறும் கொண்ட சீனலயங்' களைப் பட்டியலாகக் குறிப்பிடும் அப்பாண்டை நாதர் உலா (வரி 91) ''அருகந்த மங்கலமோடு ஆன திருத்தீபை' என்றோர் ஊரைக் குறிப்பிடுகிறது. தீபை என்பது தீபங்குடி அல்லது தீபனூர் என்பதன் மரூஉ ஆதல் வேண்டும். திண்டிவனத்திற்குப் பக்கத்தில் ஒன்றும், திருவாரூர்ப் பக்கத்தில் ஒன்றுமாகத் 'தீபங்குடி' உள்ளது என்பர் மு. ராகவையங்கார் (பெருந்தொகை. பா. 180 அடிக்குறிப்பு. பக்கம். 534). திண்டிவனத்திற்குப் பக்கத்தில் தீபங்குடி என்ற ஊர் எதுவும் இல்லை. தீவனூர் என்ற ஊரே உள்ளது. இப்பெயர் தீபனூர் என முன்பு வழங்கி இருத்தல் கூடும். ப > வ ஆதல் தமிழ்மரபு. உருபு > உருவு; திரிபு > திரிவு; தீபகஅணி > தீவக அணி. தீபனூரையே, 'தீபை' எனக் குறித்தனர் போலும். இங்கே குறிப்பிடப்படும் தீபனூர் வேறு சயங்கொண்டார் பிறந்த தீபங்குடி வேறு.

இவ்வூர் சோழநாட்டில் கும்பகோணம்--திருவாரூர், பேருந்துத் தடத்தில், நாச்சியார் கோயில் என்ற ஊருக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் சாலைக்குத் தென்பால் இரண்டு பர்லாங்குத் தொலைவில் இன்றும் உள்ளது. இங்கு ஐந்தாறு சைனக் குடும்பங்கள் இன்றும் உள்ளன. தீபநாயகர் என்ற பெயரில் ஒருபெரிய விருசகதீர்த்தங்கரர் கோயில் இருக்கிறது. இக்கோயில் கோபுரம், விமானம், விசாலமான பிரகாரம், பெரிய மூலவர், உற்சவர், துவார பாலகர், தருமதேவி கோயில், பிரம்மதேவர் கோயில், வர்த்தமான தீர்த்தங்கரர் கோயில் ஜீவாலினி க்ஷேத்திர

பாலர்' கோயில்கள் முதலாயின நல்ல நிலையில் உள்ளன.[1] தீபங்குடியே அவரது சொந்த ஊர் என்பது தமிழ் நாவலர் சரிதையில் இடம் பெற்றுள்ள கொளுவால் உறுதியாகிறது. அப்பாட்டு

'செயங்கொண்டார் அபயன் நுமது ஊர்யாது
எனக் கேட்டபோது சொன்ன கவி'

என்னும் தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது. அப்பாட்டு பின்வருமாறு.

' செய்யும் வினையும் இருளுண் பதுவும்
தேனும் நறவும் ஊனும் களவும்
பொய்யும் கொலையும் மறமும் தவிரப்
பொய்தீர் அறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் இதழும் விழியும்
காலும் நிறமும் போலும் கமலம்
கொய்யும் மடவார் கண்வாய் அதரம்
கோபம் கமழும் தீபங் குடியே'

இப்பாடலில் முதல் நான்கு வரிகள், சைன முனிவர்களின் வாழ்வோடு தொடர்புடையவை. இப்பாடல் சைன இல்லறத்தார்க்குரிய பத்தொழுக்கங்களைப் பேசுகிறது. இன்றும் இவ்வூரில் சைன சமயத்தின் எச்சங்கள் இருப்ப தால் தீபங்குடியே இவர் ஊர் என்பது திண்ணம். இவ் வூரைச் சுற்றி அம்மன்குடி ,புதுக்குடி, கடமங்குடி,கடலங்குடி, கீரன்குடி, மருத்துவக்குடி, தென்னன்குடி, ஏனன்குடி, சிறு குடி, மணியாங்குடி முதலான குடி என்ற ஊர்ப் பெயர்கள் எட்டுக்கல் வட்டாரத்தில் இன்றும் உள்ளன. 'குடி' என்ற ஊரைச் சார்ந்தே 'தீபங்குடி' இருப்பது பொருத்தம்.

1. கட்டுரை ஆசிரியர் நேரில் பார்த்தவை.

மருத்துவக்குடி என்ற இவ்வூர் தீபங்குடியினின்று ஏழுகல் தொலைவில் உள்ளது. இவ்வூரில் கி. பி. 1194 இல் இரண்டு ஜைனப் பள்ளிகள் இருந்தன என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. (392 of 1907)

இவையன்றித் தீபங்குடிப்பத்து என்ற ஒரு நூல் இருந்ததாகத் தெரியவருகிறது. இந்நூலின் ஏழுபாடல்களும் வேறு சில பதிகங்களும் அடங்கிய கையெழுத்து ஏடு ஒன்று ஜைன கெசட் (Jains gazette) எனும் ஆங்கிலத் திங்கள் இதழின் உரிமையாளர் திரு சி. எஸ். மல்லிநாத ஜெயின் அவர்களிடமிருந்து வாங்கிச் சென்னை மாநிலக் கல்லூரித் தத்துவப் பேராசிரியர் ஏ. சக்கரவர்த்தி நயினார் தன்னிடம் அளித்ததாகப் பண்டிதக் கோபாலய்யர் குறிப்பிடுகிறார்.[1] இந்நூற் செய்யுள்கள் தீபங்குடியினுடைய இயற்கை அமைப்பை அழகாக வருணிக்கின்றன.

'வண்டார் பிண்டிக்கு இரை முக்குடையான்
வாமன்.................. .. ......சரணை
பரிவால் நிதமும் பணிவார் தீபங்குடி மக்கள்'
(தீபங்குடிப்பத்து—6)

என்று இப்பாடல் வருவதாலும் இப்பாடலின் ஆசிரியர் சயங்கொண்டார் என்பதினாலும் இத் தீபங்குடிப்பத்தில் குறிக்கப்பட்ட விளக்கங்கள் இன்றைய தீபங்குடிக்கும் பொருந்தி இருப்பதாலும் சயங்கொண்டாருடைய பிறந்த ஊர் சோழ நாட்டுத் தீபங்குடியே என்பது தெளிவு.

## 4. சயங்கொண்டாரின் காலம்

தமிழ்நாவலர் சரிதையில் வரும் குறிப்பு அபயன் என்பானோடு ஆசிரியரைத் தொடர்பு படுத்துகிறது.

1. கோபாலய்யர், க.ப. பதிப்பு. ப. 10

கலிங்கத்துப் பரணி நூலினுள்ளும் சோழ அரசனை அபயன் என்று குறிப்பிடுகிறார் சயங்கொண்டார். இவ் அபயன் என்ற பட்டம் உடையவன் 1070 முதல் கி. பி. 1120 வரை ஆண்ட முதற் குலோத்துங்க சோழனாவான்.[1] கலிங்கத்துப் பரணியில் குறிக்கப்படுகின்ற கருணாகரத் தொண்டைமான் முதற்குலோத்துங்கன் காலத்தில் சோழ வேந்தனின் தளபதியாக விளங்கியவன்.

'ஸ்வஸ்திஸ்ரீ கோ இராசகேசரி வர்மரான திரிபுவன
சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு
யாண்டு 44 செயங்கொண்ட சோழமண்ட
லத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டு திருஅத்தி
யூர் ஆழ்வார்க்குக் குலோத்துங்க சோழவள
நாட்டு திருநறையூர் நாட்டு வண்டாளஞ்
சேரிவுடையான் வேள்ஆன கருணாகரனார்'

(S. I. I. vol. IV. No-862)

என்று வருவதனாலும், கலிங்கத்துப் பரணியில் குறிக்கப் பெறும் கலிங்க நாட்டுப் படையெடுப்பும், படையெடுப்புக்கு ஆளான அனந்தவர்மன் என்ற வடகலிங்க நாட்டு மன்னன் நிகழ்த்திய போரும் முதற்குலோத்துங்க சோழனோடு தொடர்புடையனவே.[2]

ஆக, அபயன் என்ற குறிப்பு குலோத்துங்க சோழனுக்குப் பொருந்துதல், கருணாகரன் படையெடுப்பு, பரணி இலக்கியத்திலும் முதற் குலோத்துங்க சோழன் வரலாற்றிலும் ஒத்திருத்தல், சோழனின் வடகலிங்கப் போரும் பாவலரின் கலிங்கப்போர் வெற்றியும் ஒன்றாய் இருத்தல்—

1. S.I.I. Vol. IV Nos 1338

2. பிற்காலச் சோழர். வரலாறு II. ப. 25

ஆகியன சயங்கொண்டார் முதற்குலோத்துங்க சோழன் காலமாகிய கி. பி, 1070—1120 என்பதை உறுதி செய்கின்றன.[1]

## 5. சயங்கொண்டாரின் சமயம்

சயங்கொண்டாரின் வரலாற்றைக் காட்டும் தீபங்குடிப் பத்து, தமிழ் நாவலர் சரிதைப் பாட்டு ஆகியவற்றைப் பார்க்கும் பொழுதும், அவர் வாழ்ந்த தீபங்குடி இன்றும் சைன ஊராக இருப்பதைக் கொண்டும் அவரது சமயம் சைனமே என்று கொள்ளல் தகும். ஆனல் கலிங்கத்துப் பரணியில் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்தும் கடவுள் தொடர்பான செய்திகளும் இவர் சைனர் என்று சொல்லுதற்கு எதிராக உள்ளன. உமாபதி, திருமால், நான்முகன், சூரியன், கணபதி, முருகவேள், நாமகள், கொற்றவை, சத்த மாதர்கள் ஆகிய வைதீகக் கடவுளர்களை வழிபடுவதும் அருகக் கடவுள் வணக்கத்தைக் குறிக்காமல் விடுவதும் கவனிக்கத் தக்கவை

நூலினுள்ளே அசுவினித்தேவர் (79), இந்திரன் (127, 245) இராமர் (94, 232, 464) கணபதி (9, 127, 180) கண்ணபிரான் (3, 232, 240, 543, 544) காளிதேவி (75, 88, 121) சந்திரன் (87, 123) சாயாதேவி (79) சிவன் (1, 125, 428, 299) சூரியன் (7, 79, 123, 315, 463) திருமகள் (242, 320) திருமால் (4, 182, 184, 185, 232, 234, 243) பிரம்மன் (5, 127, 186, 306, 580) முருகன் (11, 127) வாமனன் (243) வீரமகள் (196, 429, 337) என்ற தெய்வங்களைக் குறிப்பதும் பார்க்கத் தக்கவை.

1. பரிதிமாற் கலைஞருக்கு இச்செய்தி உடன்பாடில்லை. சயங்கொண்டார்—தமிழ்ப் புலவர் சரித்திரம் ப. 13-21. ஒட்டக்கூத்தர் இயற்றிய பிறிதொரு பரணியை, செயங்கொண்டார் இயற்றிய பரணியுடன் உறழ்த்தியதால் வந்த வழு.

வைதிகச் சமயத்தோடு தொடர்புடைய முனிவர்களான காசிபர் (186) நாரதர் (179) பராசதர் (180) மரீசி 186) வியாசர் (180) ஆகியோரைத் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

வைதிக இதிகாசங்களாகிய இராமாயணத்தை (170), பாரதத்தைக் (47) குறிப்பதோடு மனுதர்மத்தை இரண்டு (20, 241) இடங்களில் குறிப்பிடுகிறார்.

கடவுள் வாழ்த்தும், இறுதிப் பகுதியில் 'மனுவளர்க' என்றும் வேத நல்நெறி பரக்க (13-96) என்றும் வாழ்த்துகிறார்.

**புராண வரலாறு:-** வைதிக சமயங்களைச் சார்ந்த புராண நிகழ்ச்சிகளை இவர்தம் நூலில் பெருக ஆளுகிறார். இக்குவாகு அரங்கநாதனைக் கொணர்ந்தது (187), கண்ணபிரான் சிசுபாலனைக் கொன்றது (591) கண்ணன் தூது சென்றது. (514) கவேர முனிவன் காவிரி நீர் பெருக்கியது, (192) காஞ்சியில் பொன்மாரி பொழிந்தது (314); குரங்குகள் கடலுக்கு அணை கட்டியது (96,) சிவ பெருமான் நஞ்சுண்டது (124) சூரவர்க்கன் நாக கன்னியை மணந்தது (195), சூரியன் சாயா தேவியைத் தேடியது (79,) திரிசங்கு சொர்க்கம் புக்கது (194), திருமால் மாவலியிடம் மண் கேட்டது. (243), திலீபன் சிங்கத்திற்குத் தன் குருதியைக் கொடுத்தது (193), தேவர்கள் பாற்கடல் கடைந்தது (122, 542) என்பன இடம்பெற்றுள்ளன.

வைதிகக் கடவுளரை வணங்குதல் நூலினுள்ளே வைதிக நெறிகளைப் போற்றுதல், வைதிகச் சார்புள்ள முனிவர்கள், தேவர்கள் புராணச் செய்திகள் இவற்றைக் குறிப்பிடுதல் கொண்டு இந்நூலாசிரியரை வேதசமயத்தினர் எனக் கூற இடமுள்ளது.

எனினும், முன்னே குறித்த குறிப்புகள் இவரைத் தீபங்குடிச் சைனர் என்று காட்டுவதை முற்றும் புறக்கணித்தற்கில்லை. நூலினுள்ளே சைனர்க்கும் பௌத்தர்க்கும் இவர் மூற்றும் பரிவு காட்டுகிறார். கலிங்கப் போர்க்களத்தில் சைனர், புத்தர், என்று வேடமிட்ட அளவில் வீரர் அவரைத் துன்புறுத்தாமல் விடுவதையும் (466, 468), சைன பௌத்தப் பேய்களுக்கும் கூழ் வார்க்குமாறு பேய்கள் சிறப்பாக ஆணையிடுவதையும் (566, 567) இவர் படைப்பதிலிருந்து உணரலாம். தொடக்க காலத்தில் சைன மதம் பெருகியிருந்த ஊரில் பிறந்தவர் என்பதனால் இவரும் சைனராக இருந்திருத்தல் வேண்டும். அதனையே தமிழ் நாவலர் சரிதையும், தீபங்குடிப் பத்தும், அவ்வூர்ச் சைன இருக்கைகளும் வற்புறுத்துகின்றன. தொடக்கத்தில் சைனத்தினின்று, பின்னர் சைவத்திற்கு வந்த திருநாவுக்கரசினைப் போலச் சயங்கொண்டாரும் சைனத்தினின்று வேத சமயத்திற்கு மாறினார் என்று கொள்ளல் தகும்.

**சயங்கொண்டார் என்ற பெயர்:** அக்காலத்து வாழ்ந்த புலவரிடையே நிகழ்ந்த 'உறழ்' குறித்து எழுந்த கருத்துப்போரில் வெற்றி பெற்றமையால் சயங்கொண்டார் என்ற பெயர் பெற்றனர் இந்நூலாசிரியர். பெற்றபின் முன்பு வழங்கிய இயற்பெயர் மறைந்து சயங்கொண்டார் என்ற பட்டப் பெயரே நிலை பெற்றது; கலிங்க வாகை சூடிய பின், சோழன், இப்புலவரை நோக்கி "யானும் சயங்கொண்டான் ஆயினேன்" என்றானாம். உடனே இப்புலவர் அங்ஙனமாயின், "சயங்கொண்டான் சயங்கொண்டான் மீது பரணி புனைவான் என்று உரைத்து இவ்விலக்கியத்தை எழுதினராம். அரசன் அவைக்களத்தில் புவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டானைக் கவிச்சக்கரவர்த்தி

யாகிய சயங்கொண்டான் பாடி அரங்கேற்றிய போது ஒவ்வொரு தாழிசையின் முடிவிலும் ஒவ்வொரு பொன்னுலாகிய தேங்காயைச் சோழப் பெருவேந்தன் அன்பளிப்பாக அளித்தானும்.[17] ஆக இச்செவி வழிச் செய்தியும் சயங்கொண்டார் என்ற பெயரமைப்பும் இப்பெயர் இயற்பெயர் அன்று என்பதைச் சாற்றுகின்றன. சோழனின் பெயர் சயங்கொண்டான். அவன் ஆட்சியிலுள்ள ஒருமண்டலம் சயங்கொண்ட சோழ மண்டலம் என்றே அழைக்கப்பட்டது. செயங்கொண்டான் என்ற ஊர்ப் பெயரும் உள்ளமை காண்க.

## 6. சயங்கொண்டார் எழுதிய பிறநூல்கள்

கலிங்கத்துப் பரணி பெற்றிருக்கும் செய்யுள் அழகைப் பார்த்தால் ஒரு முழுமை பெற்ற கவினுடைய படைப்பிலக்கியம் என்பதை அந்நூல் உறுதி செய்கின்றது. எடுத்த எடுப்பிலேயே முன் யாதொரு நூலும் எழுதாமல் இத்தகு நூல் எழுதுவது என்பது அரிதே. ஆதலின் சயங்கொண்டார் என்ற பெயர் பெறுதற்கு முன்னே பின்னே வேறு இலக்கியத்தையும் இவர் எழுதியிருத்தல் கூடும். தீபங்குடிப்பத்து என்ற நூலின் பாக்கள் கலிங்கத்துப் பரணிக்கு நிகரான செய்யுள் தகைமை பெறாவிடினும் கவிதைத் தரத்திலிருந்து முற்றத் தாழ்ந்தவை அல்ல. அதரபானத்தைச் சுவைபடப் பரணியில், பாவலர் அதரபானன் (54) கனி அதரத்தினன் (130) மணியதரம் (482), என்று காட்டுவர். தீபங்குடிப் பத்தில் மகரக் குழையார் அதரம் (1) பணிசேர் மடவார் அதரம் (2),

17. செல்வக்கேசவராய முதலியார் தி. கலிங்கத்துப் பரணி கதாசங்கிரகம் A Resume in Prese கி.க.அ. சங்கத்தார் அச்சுக்கூடம் வேப்பேரி. சென்னை 195 ப. 5.

கனிவாய் அதரம் (3) கொஞ்சும் சுகம் மென்மொழியார் அதரம் (4) குனிவில் புருவப் படையார் அதரம் (5) குண்டார் முலை மென் மடவார் அதரம் (6) கொலைவேல் விழியார் செவ்வாய் அதரம் (7) என அதரத்தைத் தீபங்குடிப் பத்திலும் ஆளுகிறார். இவ் ஒற்றுமை இவ்விரு நூலின் ஆசிரியர் ஒருவரே எனக் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றது.

சயங் கொண்டார், '**இசையாயிரம்**' என்ற நூலொன்றையும் பாடினார் என்பது தமிழ் நாவலர் சரிதையால் அறியப்படுகிறது. அவர் பாடியதாகக் குறிப்பிடப் பெறும் பாடல்,

'செட்டிகள் மேல் இசையாயிரம் பாடியபோது செக்கார் 'புகார் தங்களுக்கு ஊர்' என்று பாடச் சொல்லச் சயங்கொண்டார் பாடியது, என்ற குறிப்புடன் காணப் படுகிறது. இக்குறிப்பிற்குரிய பாடல் வருமாறு:

**ஆடுவதும் செக்கே; அளப்பதுவும் எண்ணெயே**
**கூடுவதும் சக்கிலியர் கோதையே—நீடுபுகழ்க்**
**கச்சிச் செப்பேட்டில் கணிக்குங்கால், செக்கார்தம்**
**உச்சிக்குப் பின்புகார் ஊர்.**

(தமிழ் நாவலர் சரிதை 110)

செக்கார் என்பது எண்ணெய்ச் செட்டிமார்களைக் குறிக்கும் சொல்லாகும். இராசராசன் காலத்துக் கச்சிச் செப்பேடு, செக்கர் ஒழுக வேண்டிய விதிமுறைகளைப் பட்டியல் இட்டுக் காட்டுகின்றது.

'திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ஐந்தாவது...நாடும், நகரமும் கூடியிருந்து ஸ்ரீகாஞ்சி மாநகரில் செப்பேட்டுப்படி செய்யக் கடவமுறைமை' என அச் செப்பேட்டுச் செய்தி அமைந்துள்ளது.

## 7. பரணி இலக்கிய வரலாறு:

பரணியாவது காடுகெழு செல்விக்குப் பரணி நாளில் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்கு பற்றியது. அது பாட்டுடைத் தலைவனைப் பற்றிக் கூறலின் புறத்திணை பலவும் விராஅயிற்று என்று நச்சினார்க்கினியர் எழுதுவார்.[1] பரணி இலக்கியங்களில் கூறப்படுகின்ற செய்திகள் சங்க இலக்கியங்களிலும், சங்கம் மருவிய இலக்கியங்களிலும, தொல்காப்பிய உரைகளிலும், சிதறிக் கிடக்கின்றன. பொருநர்களுள் ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர் என்பாரோடு பரணிபாடுநரையும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்.[2] இக்குறிப்பால் பரணிபாடும் பொருநர் என்ற ஒருவகையார் இருந்தனர் என்பது பெறப் படுகிறது. மூவருலாக்களில்

> தனிப்பரணிக்கு எண்ணிறந்த துங்கமத யானைத்
> துணித் தோடும் (வி.சோழ.உலா)
>
> கொலையானை பப்பத்து ஒருபசிப் பேய்பெற்ற
> ஒரு பரணி கொப்பத்து ஒரு களிற்றால்
> கொண்ட கோன் (இராச இராச சோழன் உலா)

எனவரும் கண்ணிகளால் சோழ அரசர்களைச் சிறப்பிக்கும் பரணிநூல்கள் பண்டு வழங்கின என்பது புலனாகிறது. எவ்வகை இலக்கியமும் புலவர்களால் பாடப்பெற்று வரவரச் செவ்விய அமைப்புப்பெற்றுத் திகழுவது இயல்பு. கலிங்கத்துப் பரணியின் செப்பத்தைப் பார்க்கும்போது அது பல புலவர்கள் பாடிய பரணிகளைப் பயின்றதனால் வந்த பயன் என்று எண்ண வேண்டியிருக்கிறது.[3] போர் வெற்றியை

1. தொல். செய்யுளியல். 149
2. தொல். நச். புறத். 36
3. சாமிநாதய்யர். டாக்டர் உ. வே. பாசவதைப் பரணி ப. 5

மையமாக வைத்து அமைவது இவ்விலக்கியத்தின் இயல்பு. களவெற்றியைக் குறித்துப் புறப்பாக்கள் பல பண்டு அமைந்தமையைப் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியன புலப்படுத்துகின்றன. புறத்திணையில் இடம் பெற்றுள்ள துறைகளும் போர் வெற்றியைப் புனைவனவே. துண்டு துண்டாகப் போர்ச் செய்தியைப் பாடிவந்த பண்டைய மரபு பிற்காலத்தில் தனிப் பிரபந்தமாகப் பெருகியிருக்கிறது. ஆற்றுப்படை, உலா, தூது போன்றவை சங்ககாலத்தில் துறைகளாக இருந்து பிற்காலத்தில் தனிப் பிரபந்தங்களாக மலர்ந்து பெருகி இருக்கின்றன. இதுபோலப் போரைப் பற்றி இருந்த சிறுபா மரபுகள் ஒன்று சேர்ந்து பிற்காலத்துப் பரணி எனஉருக்கொண்டிருக்கின்றன. செருக்களவஞ்சி, களவழி, பரணி என்பன களவெற்றியைப் பாடுகிற பிரபந்தங்கள். மனிதர் உடலையும், யானை, குதிரை, என்பவற்றின் உடலையும், பேய், கழுகு, முதலியன பிணம் தின்று ஆர்ப்பரிப்பதையும், பூதமும் பேயும் பாடியாடுவதையும் செருக்களவஞ்சி என்ற பிரபந்தம் படம் பிடித்துக் காட்டும். இறப்புண்ட உடல் உறுப்புள்ள வீரரின் உறுப்புகளையும், யானை, குதிரை முதலியவற்றின் உடல் உறுப்புகளையும், அவை சிதறுண்டு கிடக்கும் தோற்றத்தையும் வருணித்துக் காட்டும் களவழி என்ற பிரபந்தம். இவ்விரண்டிலும் இடம்பெற்ற செய்திகளையும், இடம் பெருச் செய்திகளையும் வரலாற்றோடு கூட்டிக் குழைத்துத் தருவது பரணி இலக்கியம். எனவே பாத்திறம் அனைத்தும் தாங்கிய பாங்கு வாய்ந்தது பரணி ஆகும். கலிங்கத்துப் பரணி இந்த அமைப்பிலேயே உருவானது.

## 8. பரணி இலக்கணம்

பரணியின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் காட்டுகின்றன. பன்னிருபாட்டியல், வச்சணந்தி மாலை

நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்தத்தீபிகை, தொன்னூல் விளக்கம், சதுரகராதி ஆகிய இவ்வனைத்தும் பரணி இலக்கணத்தைக் குறிப்பிடுகின்றன. கலிங்கத்துப் பரணியின் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு. இதற்கு முன்னே 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பன்னிரு பாட்டியல் பரணி இலக்கணத்தைப் பேசுகிறது. (142, 143, 144, 145) இதனால் கலிங்கத்துப் பரணிக்கு முன்பே பரணி இலக்கியம் இருந்திருத்தல் வேண்டும்.

பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் ஆகியவற்றின் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு ஆகும். இப்பாட்டியல்களில் பரணி இலக்கணம் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்று பழையனவாகக் கருதப்பெறும் கொப்பத்துப் பரணி (காலம், கி.பி. 1055) கூடல் சங்கமத்துப்பரணி (காலம் கி.பி. 1065) கலிங்கத்துப் பரணி (காலம் கி.பி. 1070—1120) ஆகியவற்றிற்கு முன்பே தோன்றியவை மேற்கண்ட பாட்டியல் நூல்கள். பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பன்னிரு பாட்டியலில் நான்கு சூத்திரங்கள் (142—145) பரணி இலக்கணத்தைப் பேசுகின்றன. ஆதலால் பன்னிரு பாட்டியலின் காலமாகிய, கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பே, தமிழில் பரணி நூல்கள் இருந்தனவாதல் வேண்டும்.

பன்னிரு பாட்டியலில் (242—245) கூறப்படுகிற இலக்கணம் கலிங்கத்துப் பரணிக்குப் பெரிதும் பொருந்தி வருகிறது. எனினும்

> "கனாநிலை, நிமித்தம்...
> அவர்தம் பழிச்சா மன்னவன்"

என்பன இப்பரணி இலக்கியத்திற்குப் பொருந்தவில்லை.

'யானை சாய்த்த அடுகளத் தல்லது யாவரும் பெருஅர்
பரணிப் பாட்டே' —பன்னிருபாட் 242

என்று வரையறுக்கிறது. இங்கு எத்தனை யானை என்ற குறிப்பில்லை. காலப் போக்கில் ஆயிரம் யானை கொன்றவனுக்கே பரணி என்ற மரபு புதிதாகக் கிளைத்தது. பிரபந்த மரபியல் என்ற சிறு இலக்கண நூல் "யானை ஆயிரம்" என்றே சொல்கின்றது.

"படை புக்கு ஆயிரம் பகடு அற ஒன்னார்
போரில் எதிர்ந்து பொருதும் அரசன்" (பி. மா.19)

என்று கூறுகிறது. இதனை யொட்டியே பின் வந்த இலக்கண விளக்கம்

"ஆயிரம் யானை அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி"

என்று இலக்கணம் வகுக்கின்றது. யானையை வெல்வது பெரும் வீரமாகப் பண்டையோரால்(புறம்,குறள், சிந்தாமணி) கருதப்பட்டது. அதனது விரிவான நினைவே—விளைவே பரணித் தோற்றம்.

## 9. பரணியின் யாப்பு

பரணி, கலித்தாழிசைகளால் பாடப்பட வேண்டும். இத்தாழிசைகள் கொச்சக ஒரு போகின் வகையின என்பர். "தாழிசை கொச்சகமாகிய பரணிச் செய்யுளும்", "தரவுக் கொச்சகமாகிய தொடர் நிலைச் செய்யுளும்" (தொல். செய். பேரா. 156) இவை முழுதும் தேவபாணி ஆகும். பரணிப் பாட்டாகிய தேவபாணி" எனவரும் பேராசிரியர் கூற்றால் (செய்: 149) இஃது உறுதியாகிறது. தாழிசைகளில் இரு சீர் முச்சீருக்கு மேல் எத்தனை சீர்கள் வேண்டுமானாலும்

ஓர் அடியில் வரலாம். பாசவதைப் பரணியில் ஓர் அடியில் இருபது சீர்களைப் பார்க்கிறோம் (466). எத்தனை தாழிசைகள் வேண்டுமானாலும் இடம் பெறலாம்.[1]

## 10. பரணியின் உறுப்புகள்

கடவுள் வாழ்த்து, கடை திறப்பு உரைத்தல், கடும் பாலை கூறல், கொடுங்காளி கோட்டம், கடிகணம் உரைத்தல் காளிக்கு அது சொலல், அதனால் தலைவன் வண்புகழ் உரைத்தல், எண்புறத் திணையுற வீட்டல், அடுகளம் வேட்டல். இவ்வுறுப்புகள் பரணிக்குத் தகப் பேரளவு வேறு படாவிடினும் ஓரளவு வேறு பட்டிருக்கின்றன. சிறப்பாகப் பாட்டியல் நூல்கள் காட்டுகின்ற பத்து உறுப்புகளைக் காட்டிலும் கலிங்கத்துப் பரணியில் இந்திரசாலம், இராச பாரம்பரியம், அவதாரம் என்னும் உறுப்புகள் கூடுதலாக உள்ளன.

## 11. பரணி பெயர்க்காரணம்

பரணி என்ற சொல்லிற்குப் பத்துப் பொருளைக் குறிப்பிடுகிறது சென்னைப். பல்கலைக் கழகத் தமிழ்—ஆங்கிலப் பேரகராதி [2] அப்பொருள்களாவன:

1. இரண்டாம் விண்மீன், 2. போர் முகத்தைப் பற்றிப்பாடும் பிரபந்தம், 3. இரவின் பதினைந்து முகூர்த்தங்களுள் ஆறுவதான இராக்கதம், 4. அடுப்பு, 5. சிறு செப்பு, 6. சாடி, 7. சிலந்திக் கூடு, 8. ஏரி மதகு, 9. கூத்து, 10. பரண்.

1. பார்க்க. பின் இணைப்பு பரணி இலக்கியப் பட்டியல்
2. Tamil Lexicon, Vol. IV. P. 2494

இப்பொருள்களோடு தொடர்பு படுத்தியும், படுத்தாமலும் பலவேறு விளக்கங்கள் பரணி என்பதற்குத் தரப்படுகின்றன.

*1.* திணைப்புனத்தைக் காப்போர், தினையைக் கவர வரும் கிளி முதலான பறவைகளைக் கண்டறிந்து துரத்த வாய்ப்பாகவும், கான் விலங்குகளின் தாக்குதலுக்கு வாய்ப்பில்லாமலும், பரண் அமைத்து அதன் மீது அமர்ந்து கிளியோப்புவர். அதுபோலக் களவெற்றியைப் பாராட்டு முகத்தான், பாவியற்றும் பாவலன், வெற்றி பெற்ற வேந்தனது வேல், வாள் முதலான படைக்கலங்களால் ஆக்கப்பட்ட பரண்மீது இருந்து பாடுவான். ஆதலால் அந்நூல் பரணி எனப்பட்டது என்பர்.[1]

*2.* பரண் மீதிருந்து தினைக்கொல்லையைக் காப்பவர், கவணில் கல்லேற்றிக்கிளி முதலாயவற்றைவிரட்டுதல்போல, வீரர்கள் யானை மீது வீற்றிருந்து வில்லெய்தும் வேலெறிந்தும் தம்மை நோக்கி வரும் பகைவர்களை விரட்டுவர். அவ்வாறு விரட்டும் வீரச் செயலைக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்ட இலக்கிய மாதலின் பரணி எனப் பெயர் பெற்றது என்பர்.[2]

*3.* அணிகள் வைக்கப்படும் செப்பு—பரணி எனப்படும். அஃதே போல, ஒன்பான் சுவைகள், கற்பனைகள், உவமைகள் முதலான அணி நலன்களால் புனையப்பட்ட இலக்கியம் ஆதலின் பரணி எனப்பெற்றது என்பர்.

*4.* பரணின் மேல் இருந்து கொண்டு போரினைக் காண்பவர், நேர்முக வருணனையாக அப்போரினை விரித்துக்

1. க. ப. கதாசங்கிரகம் 1915; ப. 4;
2. கன்னைய நாயுடு ஆ. வீ. கலிங்கத்துப்பரணி, 1949 பு. 24

கூறுதல் போன்று நிகழ்ந்த போரினைக் கண்டோர் கூற்றாகக் கூறுதலின் இப்பெயர் ஏற்பட்டது என்பர்.[1]

6. பரணி என்ற சொல்லிற்கு வெற்றி என்றும் பொருளுண்டு. அஃது பெரும்பாலும் யானைப் போர் வெற்றியைக் குறிப்பிடுகிறது.

**காட்டிய வேழம் அணிவாரிக்**
**கலிங்கப் பரணி நம் காவலன்மேல்**
**சூட்டிய தோன்றலைப் பாடீரே!**
**தொண்டையர் வேந்தனைப் பாடீரே!** (535)

இத்தாழிசையில் கலிங்கப்பரணி என்பது கலிங்க வெற்றி என்ற பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது. கலிங்க வெற்றிக்கும் கலிங்கத்துப் பரணியைப் பாடுவித்தற்கும் கருணாகரன் காரணமாயிருந்தமை பற்றி,

**'கலிங்கப் பரணி நங்காவலன் மேற்சூட்டிய தோன்றல்'**

என உரைவிளக்கம் தருவார், ஆ. வி. கன்னையா நாயுடு (ப—281). ஆதலால் பரணி என்பது யானைப் போர் வெற்றியைக் கூறும் நூலுக்குக் கருவியாகு பெயராய் அமைந்தது என்பர்.

(6) பரணி என்பது கூத்தையும் குறிக்கும். பரணி இலக்கியங்களில், பேய்களின் கூத்து இடம் பெறுதலால் இப்பெயர் பெற்றது என்பர்.[2]

(7) பரணி என்பதற்கு அடுப்பு என்பதும் ஒரு பொருள். பரணி நூல்களில் 'பரணிக்கூழ்' என்ற சொல்லாட்சி வழங்குகிறது.

1. க. ப. கதாசங்கிரகம். ப. 4.
2. பரணி இலக்கியங்கள். மணிவாசகர் நூலகம் 1967 ப. 24.

'களப்பரணிக் கூழ் பொங்கி' (548)
'பண்டுமிகுமோர் பரணிக் கூழ்' (555)
'மணலூரில் கீழ் நாளட்ட பரணிக் கூழ்' (564)

என்றுவரும் கலிங்கத்துப் பரணியின் தொடர்கள் இக் குறிப்பை வற்புறுத்துகின்றன. பரணி என்ற சொல் கூழ் அடுதற்குக் காரணமாய அடுப்பிணையோ, மடைக்கலத்தையோ உணர்த்துதல் வேண்டும். எனவே அச் சொல்லாட்சி காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பர்.

(8) பரணி என்பது பாணி என்றே இருத்தல் வேண்டும். முற்காலத்தில் காலும், ரகரமும் ஒன்றுபோலவே எழுதப்பட்டன. பிற்காலத்தில் ஏடுபெயர்த் தெழுதியோர் 'பாணி' என்பதைத் தவறுகப் பரணி என்றெழுதி விட்டனர்.[1] ஆதலின் பரணி என்பதன் பழைய பெயர் பாணி என்பதே என்பர். தேவபாணி என்பது கடவுளைப் பரவும் இசைப்பாட்டு. அவ்விசைப்பாட்டில் அமைந்தநூல் இஃது ஆதலின் பரணி எனப்பெயர் பெற்றது என்பர். இக்கருத்துப் பொருந்தாது என்று ந. மு. வேங்கடசாமி நாட்டார் தம் கட்டுரை ஒன்றில் நிறுவியுள்ளார்.[2]

(9) பரணி என்னும் இலக்கியப் பெயர் பரணி என்னும் இரண்டாம் விண்மீன் பெயரையே காரணமாகக் கொண்டெழுந்தது என்பர்[3].

'களப்பரணிக் கூழ்'
'பண்டு மிகுமோர் பரணிக்கூழ் பாரதத்தில்
அறியோமோ' (548, 555, 564)

எனவரும் கலிங்கத்துப் பரணி வரிகளாலும்,

1. சூரியநாராயண சாஸ்திரியார். வி. கோ. கலிங்கத்துப்பரணி. தாம்சன் கம்பெனி. 1898. ப. 130
2. செந்தமிழ்ச் செல்வி. சிலம்பு. 11. பரல். 6
3. உ. வே. சா பாசவதைப் பரணி முகவுரை 1933. ப. 11

**'காடுகெழு செல்விக்குப் பரணிநாளில் கூழும்
துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்கு'**

என்ற பேராசிரியரின் தொல், உரையாலும், போர்க்களத்தில் வென்ற தலைவன், வீழ்த்திய தலைவன், தோற்ற படையினரின் உறுப்புகளையும் பிறவற்றையும் பரணி நாளில் காளிக்குப் பலியிட்டு வென்றோனை வாழ்த்தும் வழக்கினைச் சிறப்பித்தலின் இப்பெயர் வந்ததென்பது பெறப்படும். இங்கே கூறிய செய்திகள் பரணி நூல்களில் வரும் களம் காட்டல், கூழ் என்னும் உறுப்புகளில் விரிவாகக் கூறப் படும்.[1]

பரணி இலக்கியம் யானைப்போரோடு தொடர்புடையது. பரணி நட்சத்திரமும், யானையோடு தொடர்புடையது. 'பரணி நாள் பிறந்தான்' எனவரும் (சீவகசிந்தாமணி 1813) தொடருக்கு நச்சினார்க்கினியர், பரணி யானை பிறந்த நாளாதலின் அதுபோலப் பகையை இவன் மதியான் என்று உரை எழுதுவது இதனை உறுதி செய்யும்.

பரணி இலக்கியம் காளி என்ற கொற்றவையைப் பரக்கப் பேசுவது.

**'காடுகிழவோள் பூதம் அடுப்பே தாழிபெருஞ்
சோறு தருமனுள் போதமெனப் பாகுபட்டது
பரணிநாட் பெயரே'**

என்பது திவாகர நிகண்டு. இதனால், பரணி நட்சத்திரம் காளி பிறந்த நாள் என்பது புலனாகிறது.

கேரள நாட்டில், காளிக்குப் பரணி நட்சத்திர நாளன்று (மார்ச்சு மாதங்களில்) விழா எடுக்கப்படுகிறது. அதற்குப் **'பரணி உற்சவம்'** என்று பெயர். விழாவின் போது 'கள

1. மே. கா. நா. ப. 11

*மெழுதிப் பாட்டு' என்ற ஓவியமும் இசைப் பாட்டும் கலந்த நிகழ்ச்சி நிகழும். காளியின் ஓவியத்தைத் தரையிலே எழுதி, பாட்டிசைப்பர். தரையில் அமைக்கப்படும் காளியின் உருவத்தில், அதன் தனங்கள், 'ஒரு நாழி முலே', 'இருநாழி முலே; 'முந்நாழி முலே' என்று பல அளவுகளில் அமைக்கப் படும். கீழ்க்குலத்தார், இப்பரணி நாளில், நன்கு குடித்து விட்டுக் கூத்தடிப்பர். 'தெறிப்பாட்டு' என்ற ஒருவகை ஆபாசப் பாட்டைப் பாடுவர். அப்பாட்டில், பாலுறவு நிகழ்ச்சிகளும்; உறுப்புகளும் வெளிப்படையாய் இடம் பெற்றிருக்கும். இத்தகு விழா இன்றும் அங்கும் நடந்து வருகிறது. அவ்வாறு விழா நிகழும் இடங்களில் கொடுங் காளூர் குறிப்பிடத் தக்கது.*

*பரணி நட்சத்திரம், அற்றை நாளில் பிறந்தவனே ஆற்றல் உடையவனுக்கும் திறன் படைத்தது. பரணி—தரணி யாளும் என்ற பழமொழி இச்செய்தியை இன்றும் உணர்த் திக் கொண்டிருக்கிறது.*

**'பரணியான் பாரவன்'**

*என்ற மயிலே நாதர் (நன் – 150) மேற்கோளும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.*

*பரணி இலக்கியம், யானே, காளி, வீரம் என்ற* **மூன்றேடு நெருக்கத் தொடர்புள்ளது. பரணி நட்சத்திரமும்—இம்மூன்றேடு முற்றும்** *தொடர்புடை யது. ஆதலால் பரணி என்ற இலக்கியப்பெயர் பரணி என்ற நட்சத்திரத்தின் பெயர் அடிப்படையிலேயே தோன்றி நிலேத்தது எனலாம்.*

## 12. பரணி நூலின் பெயர் பற்றி ஒரு குறிப்பு

*வெற்றி பெற்றவனேப் புகழ்ந்து பாடுவதே இப்பரணி நூலின் குறிக்கோள், எனினும் இந்நூலின் பெயர் தோற்*

றவனைச் சார்ந்தே அமைந்துள்ளது என்பர்.[1] **இஃது ஓரளவுதான் சரி.** கொப்பத்துப் பரணி (கி. பி. 1054) கூடல் சங்கமத்துப் பரணி (கி.பி. 1064) கலிங்கத்துப் பரணி (1112) என்ற பெயர்களை நோக்கும்போது இக் கருத்தின் பொருந்தாமை புலப்படும். வெற்றி பெற்ற ஊர்களின் பெயர்களையே அடிப்படையாக வைத்துப் பரணி நூல்கள் பெயர் பெற்றிருக்கின்றன. இரண்டாம் இராசேந்திரன் மேலைச் சாளுக்கிய வேந்தன் ஆகவமல்லனுடன் கொப்பம் என்ற இடத்தில் போர் செய்து பெற்றவெற்றியை, வீரராசேந்திரர் மேலைச் சளுக்க வேந்தனை அதே ஆகவமல்லனுடன் கூடல் சங்கமம் என்ற இடத்தில் பெற்ற வெற்றியை, முதற் குலோத்துங்கன் வடகலிங்க வேந்தனோடு பெற்ற வெற்றியை அடிப்படையாக வைத்தே பரணி நூல்கள் பெயர் பெற்றுள்ளன. அதுவே தமிழிலக்கிய மரபுமாகும். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பது போன்ற பண்டைய பெயர்கள் இம்மரபின் தொன்மையை வற்புறுத்துகின்றன. பிற்காலப் பரணிகள் எல்லாம் முற்றும் சமய உணர்வில் எழுந்தன. ஆதலால், தட்சன், இரணியன் அஞ்ஞானம், மோகன், பாசம், சூரன், கம்சன் என்று தோற்றோர் பெயரைப் பரணிக்கு இட்டு வழங்கினர்.

## 13. கலிங்கத்துப் பரணி பதிப்பு வரலாறு

கலிங்கத்துப் பரணியின் முதற் பதிப்பு கி. பி. 1840 சார்வரி வருடம் ஐப்பசி மாதம் வெளியாயிற்று. கையடக்க அளவிலுள்ள இப்பதிப்பில் மூல பாடங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இதனைப் பதிப்பித்தவர் கா. சுப்பராய முதலியார் ஆவார். இவருக்குச் சொந்த ஊர் தென்னார்க் காடு மாவட்டம் திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்) ஆகும்.

1. அருணாசலம். மு. த.இ. வரலாறு 1973. 12ஆம் நூற். ப. 35

இவர் திருப்பாதிரிப்புலியூர் தெய்வநாயக நாயக்கரிடமும் சென்னைச் சங்கத்துத் தமிழ்ப்புலமை நடாத்தும் தாண்டவ ராய முதலியாரிடமும் பாடம் கேட்டவர். இவரது நூல் புதுச்சேரி கல்வீநிலைய அச்சுக்கூடத்தில் அச்சாகியுள்ளது. இப்பதிப்பில் கடவுள் வாழ்த்து முதலாகக் களம் பாடியது ஈறுகப் பதின்மூன்று படலங்கள் உள்ளன. இதில் 563 தாழிசைகளே உள.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் 1898–இல் கலிங்கத்துப் பரணி மூலத்தை மட்டும் வெளியிட்டுள்ளார். தாம்சன் கம்பெனியாரால் 130 பக்கங்களில் வெளியான இந் நூலின் அப்போதைய விலை எட்டு அணுவே. தாழிசை 593.

பண்டித அ. கோபாலய்யர் என்பர் 1923ஆம் ஆண்டு பதிப்பொன்றை வெளியிட்டுள்ளார். சென்னை அரசு கையெழுத்து நூலகம் தஞ்சை சரசுவதிமகால், மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆகிய இடங்களிலுள்ள பலவேறு ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து பதிப்பித்தார். மதுரைத் தமிழ்ச் சங்க ஆசிரியர் உ. வே. நாராயண அய்யங்கார் மாணுக்கர் ஆவார் இப்பதிப்பாசிரியர். இராதாமங்கலம் ஆலங்குடி இவரது சொந்த ஊர். திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர் சொக்கலிங்கத் தம்பிரான் உதவியோடு இந்நூல் பதிப்பிக் கப்பட்டுள்ளது. இப் பதிப்பிலுள்ள சில குறிப்புகள் இன்றியமையாதவை. கடை திறப்பில் இடம் பெற்றுள்ள சில தாழிசைகள் இடைச்செருகல்கள் என்பது இவரது முடிபு. காடுபாடியதின் ஈற்றிலுள்ள,

"அணிகொண்ட குரக்கினங்கள்"

என்று தொடங்கும் தாழிசைகள் கலிங்கத்துப் பரணி ஏடுகள் எதிலும் இல்லாமையால் இவரால் விடப்பட்டன. தாழிசை—118, 352, 384, 385, 531, 568, 577, 578.

ஆகியன இவரால் புதிதாகச் சேர்க்கப்பட்டவையாகும். சயங்கொண்டார் எழுதியதாகக் கருதப்படும் தீயங்குடிப் பத்து என்ற நூல் இவரால் பதிப்பிக்கப்பட்டு அச்சிடப் பட்டுள்ளது.

மூலம் மட்டுமே இருந்த பதிப்பு நிலை மாறி, முதன் முதலாக 'அரும்பொருள் விளக்கமும் அரும்பதம் முதலியவற்றின் அகராதியும்' இவரால் எழுதிச் சேர்க்கப்பட்டன. கலிங்கத்துப் பரணி பதிப்பு வரலாற்றில் முதன் முதல் வந்த சிறந்த பதிப்பு இதுவே எனினும் இப்பதிப்பில் இடம் பெற்ற பிழைபாடுகளை விரிவான முறையில் ஆராய்ந்து 'கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி' எனும் தலைப்பில் மு. இராகவையங்கார் செந்தமிழ் இதழில் கட்டுரைகள் எழுதினார்கள். இது செப்பம் பெற்று மதுரைத் தமிழ்ச் சங்க முத்திராசாலையில் அச்சிடப் பெற்று 1925இல் வெளியிடப் பெற்றது. இந்நூல் கட்டுரைகளை ஆராய்ச்சித் தொகுதி என்ற அவர் நூலிலும் பின்னர் மறு பதிப்பாக பாரிநிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். 1924இல் பண்டிதர் கோபாலய்யர் கலிங்கத்துப் பரணிச் சுருக்கம் ஒன்றைக் குறிப்புரையுடன் வெளியிட்டார். 250 தாழிசைகள் இப் பதிப்பில் இடம் பெற்றுள்ளன. 1941இல் சென்னைப் பச்சையப்பன் உயர்தரக் கல்விச்சாலை தமிழாசிரியர் ஆ. வி. கன்னையா நாயுடு இதற்குமுன் வந்துள்ள அச்சுப்படிகள் அனைத்தையும் பார்வையிட்டு, சென்னை கையெழுத்துச் சுவடி நூலகத்திலுள்ள ஏடுகளையும் பார்வையிட்டுச் செப்பம் செய்து வெளியிட்டுள்ளார். முதன் முதலாகத் தாழிசை முழுதிற்கும் பதவுரையும் விரிவுரையும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இணைப்புகளாகக் கலிங்கத்துப் பரணி நூலின் ஆராய்ச்சிச் சுருக்கமும், அரும்பொருள் அகராதி ஒன்றும் இணைக்கப் பட்டுள்ளன. இப்பதிப்பு, வரலாற்றுப் பின்புலத்தோடும் தமிழ் இலக்கிய அறிவோடும் இயற்றப்பெற்ற அருமையான

ஆராய்ச்சிப் பதிப்பாகும். 1950 இல் வித்துவான் பெ. பழனி வேல் பிள்ளை அவர்களால் கலிங்கத்துப்பரணி தெளிபொருள் விளக்கக் குறிப்பு என்ற தலைப்பில் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளது. இப் பதிப்பில் 54 பக்கங்கள் பரணி பற்றிய விரிவான குறிப்பு கள் இடம்பெற்றுள்ளன. 1958 இல் அருணா பப்ளிகேஷன்ஸ் என்ற பதிப்பாளரால் புலியூர்க் கேசிகன் தெளிவுரை யுடன் ஒரு மலிவுப் பதிப்பு வெளியாகி இருக்கிறது. 1959 இல் மர்ரே இராஜம் கம்பெனியாரால் மூலம் மட்டும் அழகான முறையில் தெளிவான தலைப்புகளுடன் பதிப்பிக் கப்பட்டுள்ளது. வை. மு. சடகோபராமானுசாச்சாரியார் கலிங்கத்துப் பரணி இராசபாரம்பரியத்துக்கு மட்டும் ஓர் உரை எழுதியுள்ளார்.[1]

இவையன்றி 1915 இல் தி. செல்வகேசவராய முதலி யார் கலிங்கத்துப் பரணி கதாசங்கிரகம் எனும் பெயரில் ஒரு வசனத்தை எழுதியுள்ளார். 1938 இல் ந.சி. கந்தையாப் பிள்ளை கலிங்கத்துப் பரணி வசனம் ஒன்றை எழுதியுள்ளார்.

பேராசிரியர் ஆ. முத்துசிவன் கலிங்கத்துப் பரணிக்கு அழகியதோர் இலக்கிய விளக்கம் 1958 இல் வெளியிட் டுள்ளார். 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்னும் நூல் எழுதிய அறிஞர் வி. கனகசபைப் பிள்ளை 1890 இல் கலிங்கத்துப் பரணியை இந்தியன் அன்டிகொரி (Indian Antiquary Vol. XIX-1890) என்ற இதழில் ஆங்கிலத்தில் சுருக்கமாக வெளியிட்டுப் பெருமை படுத்தினர். ஜி. அருள் என்பார் கடை திறப்புப் பகுதியை அழகான ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து,

> 'The Chapter on the opening of the portals in Kalingathu Barani'

எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், ஏ. வி. சுப்பிரமணிய அய்யர், இரா. நாகசாமி ஆகியோர், தமிழில் உள்ள போர் இலக்கியம் என்ற பார்வையில் கலிங்கத்துப் பரணியைப் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரைகளாக எழுதி வெளியிட்டுள்ளனர்.

## 14. பரணியின் அமைப்பு

கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய் முறைப்பாடு. அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது களம் பாடியது. என்பன கலிங்கத்துப் பரணி உட்பிரிவுகள். பதின்மூன்று படலங்களைக் கலிங்கத்துப்பரணி பெற்றிருக்கிறது. இந்திரசாலம், இராச பாரம்பரியம், அவதாரம் என்னும் உறுப்புகள் வேறு பரணி இலக்கியங்களில் இல்லாதவை. இவற்றுள் இந்திரசாலம் என்னும் உறுப்பு பிற பரணிகளில் காளிக்குக்கூளி கூறியது என்னும் பிரிவில் அல்லது பேய் முறைப்பாடு என்ற பகுப்பில் அடங்கும். இராச பாரம்பரியம் என்ற பிரிவு வரலாற்றுச் சிறப்பை உணர்த்துவதற்காகக் கலிங்கத்துப்பரணி ஆசிரியரால் படைத்து மொழியப்பட்டது. பிற பரணிகளில் இவ்வுறுப்பின் அமைப்பு காளிக்குக்கூளி கூறியது என்னும் பிரிவில் பேசப்பெறும். அவதாரம் என்னும் உறுப்பும், கலிங்கத்துப் பரணி என்னும் நூலைத் தவிர ஏனைய நூற்களில் இடம் பெறவில்லை. ஆயினும் இப்பிரிவில் கூறப்பெற்ற செய்திகள் காளிக்குக் கூளி கூறியது என்னும் பிரிவில் ஓரளவு கூறப்பெறும். கலிங்கத்துப் பரணியில் போர்பாடியது எனும் பிரிவு ஒன்றுளது. இதுவும் காளிக்குக் கூளி கூறியதில் அடங்கும் பதின்மூன்றும் பிரிவைப் பதிப்பாசிரியர்

அனைவரும் களம்பாடியது என்றே குறிப்பர். கோபாலய்யரும் (1923). மர்ரேயும் (1960) அப்பிரிவைக் களம் காட்டியது என்று பொறித்துள்ளார்கள். மூன்றும் உறுப்பு பாலை பாடியது என்றும் இலக்கணங்களில் குறிக்கப்பெறும். பன்னிரு பாட்டியல், பிரபந்த மரபியல், என்ற இலக்கண நூற்கள் பாலை என்றே அம்மூன்றும் பிரிவின் பெயரைக் குறிக்கின்றன ஆனால் பரணி இலக்கியங்களில் காடு பாடியது என்றே காட்டப்படுகின்றது. **கலித்தொகை, பாலைக் கலிப்பாடல்களில் பாலை, காடு என்று குறிக்கப்படுவது இங்கே ஒப்பிட்டு ஓரத் தக்கது, பாலைவனம் என்னும் பெயரும் கேரளத்திலும், ஆந்திராவிலும் உள்ள பாலக்காடு என்ற ஊர்ப் பெயர்களும், பாலைக்காடு** என்ற பெயரும் இங்கே இணைத்துப் பார்க்கத் தக்கவை.

படலங்களின் பெயர்களில் கோயில் பாடியது, தேவியைப் பாடியது, இந்திரசாலம், காளிக்குக் கூளி கூறியது ஆகிய நான்கும் காளியோடு தொடர்புடையன. பேய்களைப் பாடியது, இந்திரசாலம், பேய் முறைப்பாடு, போர் பாடியது களம்பாடியது ஆகிய ஐந்தும் பேய்களோடு தொடர்புடையவை. இராச பாரம்பரியம், அவதாரம் ஆகியன சோழன் குலோத்துங்கனோடு தொடர்புடையன.

## 15. கலிங்கத்துப் பரணிப் பாக்களின் தொகை

**தாழிசை எண்ணிக்கை :—** தாழிசைகளின் எண்ணிக்கை பதிப்புக்குத் தக வேறுபடுகிறது. பழைய பதிப்பில் (1840) 580 தாழிசைகளும் பரிதிமாற்கலைஞர் பதிப்பில் (1898) 593 தாழிசைகளும், கோபாலய்யர் பதிப்பில் (1923) 585+13 தாழிசைகளும், கழகப்பதிப்பில் (1950)596 தாழிசைகளும், புலியூர்க் கேசிகன் பதிப்பில் (1959) 596, தாழிசைகளும், மர்ரே பதிப்பில் (1960)599 தாழிசைகளும்

காணக்கிடக்கின்றன. இவற்றை நோக்க பரணியில் இடைச் செருகல் பாடல்களும் இடம் பெற்றுள்ளன என்பது தெளி வாகிறது. எனினும் அவற்றில் எவையெவை இடைச்செரு கல்கள் என்று கண்டு அறிவது எளிதன்று.

## 16. பாட பேதங்கள்

*1923*-இல் வெளிவந்த பண்டிதர் கோபாலய்யர் பதிப்பு கலிங்கத்துப்பரணி பாடலுக்குள்ள பாடபேதங்கள் அத்தனை யையும் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் தந்துள்ளது. கடை திறப்பில் மட்டும் பதின்மூன்று தாழிசைகள் இடைச்செருக லாகக் காட்டப்பட்டுள்ளன (பக் 9, 10). கோபாலய்யர் பதிப்புக்கு மாறுன சில பாடங்களை இராகவையங்கார் தம் கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி என்ற அரிய நூலில் காட்டி யுள்ளார். சான்ருக 372 ஆம் தாழிசை 'அளத்தில்' என்று கோபாலய்யர் பதிப்பில் அமைந்துள்ளது. இது தவறு என்று நிறுவி 'அளத்தி' என்பது சோழன் வெற்றிகொண்ட ஊர் என்று நிறுவுகிருர் மு. இராகவையங்கார் (ஆராய்ச்சித் தொகுதி பக்கம்—25,26) வேழம் என்ற பாடத்திற்கு மாருக "வேளம்" (Lovers, Lodge) என்பதைக் காட்டுவர்.

## 17. கலிங்கத்துப்பரணி படிப்பு

இக் கலிங்கத்துப்பரணி பற்றிய பயிற்சி ஆர்வம் 1898 வரை குறைந்தே இருந்திருக்கிறது. அவ்வாண்டுவரை மூன்றே அச்சுப்பதிப்புகளைப் பெற்றிருந்ததும், அவையும் உரைக்குறிப்போ, ஆராய்ச்சியோ இல்லாது இருந்ததும், அக்கால இடைவெளியில் இப்பரணி பேரளவில் போற்றப் படாமல் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. கி.பி.1898 இல் பல்கலைக்கழக நுழைமுக வகுப்பிற்குப் (F.A.) பாடமாக் கப்பட்டது. இதன் பின்புதான் சூரியநாராயண சாஸ்திரியா

ரும் கோபாலய்யரும், வை. மு. சடகோபராமானுசாச்சாரியா ரும், மு. இராகவையங்காரும், கலிங்கத்துப்பரணி பதிப்பிலும், குறிப்பிலும் ஆய்விலும், பேரளவு ஈடுபட்டனர் என்பது இங்கே குறிக்கத்தக்கது.[1]

## 18. கடை திறப்பு பற்றிய ஆய்வு :—

பரணி இலக்கியம் தலைவரின் பெயரை வெளிப்படுத்தி இயற்றப்பட்ட புற இலக்கியமாகும். இப்புற இலக்கியத்துக்குள்ளே ஓர் அக இலக்கியமாகக் கடைதிறப்பு என்ற பகுதி நின்று பொலிகிறது. கடை என்றால் கதவு. கதவைத் திறக்குமாறு வேண்டுதலை உணர்த்தும் செய்யுட்களின் பகுதி என்பது இதன் பொருளாகும். யார் கதவைத் திறக்கச் சொல்கிறார்கள் ? யாரைத் திறக்கச் சொல்கிறார்கள் ? இவ்விருவருக்கும் போர் பற்றிப்பாடும் பரணி இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு என்ன ? இவ் வினாக்களுக்கு மூவகையான விடைகள் அறிஞர்களால் அளிக்கப்பட்டுள்ளன. போருக்குச் சென்ற வேந்தனும் அவ்வேந்தரின் படைமாந்தரும் விட்டுப்பிரிந்த மகளிரிடம், குறித்தபடி உரிய காலத்தில் வராமல் காலம் தாழ்ந்து வருகின்றனர். கணவர்தம் காலத் தாழ்ச்சி கண்ட மனைவியர் ஊடல் உற்றுக் கணவர் வரும்பொழுது கதவைத் தாழிட்டுக் கொள்கின்றனர். அதனைக் கண்ட புலவர் அப்பெண்டிரை அணுகி அப்பெண்களின் இயற்கை அழகு, செயற்கை அழகு, கடந்த காலத்து அவர்கள் ஊடியும், கூடியும் பெற்ற இன்பம் முதலியவற்றை நினைவுபடுத்தித் தாழிட்ட கதவைத் திறக்குமாறும் அவர்தம் வெற்றியின் சிறப்பைக் கேட்டு மகிழ்வு எய்துமாறும் அம்மகளிரை இன்மொழிகளால் வேண்டுதல்போல் புனைந்

1. இப்பதிப்பை மு. ராகவையங்கார் தன் 'கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். 1925 ப. 11.

துரைத்தல் இப்பிரிவின் இலக்கணம். இவ்விளக்கத்தை முத லில் நல்கியவர் பண்டித, அ. கோபாலய்யர் ஆவர்.[1]

(2) அரசனும் வீரரும் போரின் பொருட்டுத் தம் உரிமை மகளிரைப் பிரிந்து செல்வர். பிரியும்போது திரும்பி வரும் காலத்தைக் குறிப்பிட்டுத் தம் மனைவியரிடம் சொல்வர். குறித்த காலத்தில் வாராதிருக்கவே, ஊடி, பிரிவால் துன்புற்று நலிந்து மெலிந்திருப்பர். அப்போது பிரிந்து சென்றவர்கள் வர, அம்மகளிர் ஊடிக்கொண்டு கதவைத் திறக்கமாட்டார். இச்சமயத்தில் பரணிபாடும் கவிஞர்கள் தலைவர்க்குத் துணை செய்ய முன்வருவார்கள். பிரிந்து சென்ற தலைமக்கள் புலவரை வாயிலாக விடுப்பர். புலவர் அப்பெண்டிரை நயமொழிகளால் சினந் தணிவித்துக் கடை திறக்குமாறு செய்வர்.[2]

(3) அபயன் அடைந்த கலிங்க வெற்றியைக் கொண்டாடுதற்கு நகரத்தில் உள்ள பலவேறு மகளிரும் காலையில் எழுந்து ஒருவரை ஒருவர் துயில் எழுப்புவதே கடைதிறப்பின் பொருள் என்பர். இவ்விளக்கத்தை முதன் முதலாகக் கூறியவர் மு. இராகவையங்கார் ஆவர்.

இம்மூன்று கருத்துகளுள் முதல் இரண்டும் அத்துணைப் பொருத்தம் உடையனவாகத் தெரியவில்லை. போருக்குச் சென்றிருந்த தம் கணவர் திரும்பி வரக் காலந்தாழ்த்தினமையால் அவர்தம் மனைவியர் கதவுகளை அடைத்துக்கொண்டனர் என்பதற்குக் கடைதிறப்பில் சான்று எதுவுமில்லை. ஆனல் தம் கொழுநரோடு ஊடியும், கூடியும், இன்பமாய் இருக்கும் நிலையில் அம்மகளிரைக் கதவு திறக்கும்படி வேண்

1. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், கோபாலய்யர் தம் பதிப்பு முகவுரையில் இதனைக் குறிக்கின்றனர்.

2. கோபாலய்யர். க. ப. பதிப்பு ப. 83

டும் பாடல்கள் மிகுதியாக உள்ளன. பிரிந்த நிலையில் மகளிர் கணவருடன் துய்த்த ஊடல் முதலிய முன் செயல்களை நினைப்பூட்டிச் செயங்கொண்டார் அவர்களைக் கதவு திறக்கும்படி வேண்டினர் என்று இதற்குப் பொருள்கூறுதல் பொருந்தவில்லை. பழைய செய்திகளை நினைவூட்டியிருப்பின் "குழைந்தீர்", "புனைந்தீர்". என்று இறந்த காலத்தால் சொற்கள் அமைந்திருக்கவேண்டும். அவ்வாறு அமையாது "குழைவீர்", "புணர்வீர்" என்றே அமைந்துள்ளமை காண்க.

பரணிபாடும் புலவர்கள் வீடுதோறும் சென்று, மகளிரின் கலவி, புலவிகளை எடுத்துக் கூறி, கதவு திறக்க வேண்டினார்கள் என்பது பொருத்த மற்றதாகும். பிரிந்து சென்ற தலைவர் வாயில் வந்து நிற்க அங்குச் சென்ற கவிஞர்கள், அத் தலைவியரின் வாயில் நோக்கி இன்ப நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினார் என்பது பொருந்துவதாயில்லை. புலவர் பேச, தலைவர்கள் என்ன செய்தனர் என்ற வினாவிற்கு விடை இல்லை. அன்றியும் கடை திறப்பில் உள்ள பாடல்கள் ஒன்றிலேனும்,மகளிரது கணவர், வாயிலில் காத்திருந்ததாகச் சான்று இல்லை.

தக்கயாகப் பரணி, மோகவதைப் பரணி, இரணியன் வதைப் பரணி ஆகியவற்றின் கடை திறப்புகளில் வானர மகளிர், நீரர மகளிர், மேருமலையில் வாழும் மகளிர் ஆகியோர் கடை திறக்குமாறு அழைக்கப்படுகின்றனர். பரணிப் பாவலரே அவ்வாறு அழைக்குமாறு கொண்டால் அப்பாவலர்கள் அவ்வாறு வானுலகம், கயிலை, மேரு ஆகிய இடங்களுக்குச் சென்று, அங்குக் கதவடைத்துக்கொண்டு தூங்கும் மகளிரை நோக்கிக் கடை திறமின் எனப் பாடியதாகக் கொள்ளவேண்டியிருக்கும்.

ஆதலின் முதலிரு கருத்துகளும் பொருந்தவில்லை' மூன்றாவது கருத்தே பெரிதும் பொருந்தி நிற்கிறது. தானைத்

தலைவனும், சேனை மறவரும் அடைந்த கலிங்க வெற்றியைப் பாடுதற்குத் தலைநகரத்துப் பல்வேறு மகளிரும் வைகறைப் போதில் எழுந்து தம் தோழியர் வீட்டு வாசலில் நின்று அவரைத் துயில் எழுப்பினர் என்பதாம்.

**'நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்திக்**
**கேசவனைப் பாடவும் கேட்டே கிடத்தியோ**
**தேசமுடையாய் திற'**

எனவரும் திருப்பாவையும், **'அத்தன், ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்'(3)** எனவரும் திருவெம்பாவையும், மாயன் பேர் பாடவும், சிவபெருமான் பேர் பாடவும் மற்றைய தோழியரை அழைக்கின்றன. இதைப்போல மகளிர் அபயன் பேர்பாட-போர் பாட ஒருவரை ஒருவர் சென்று அழைத்தனர்.

**''காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த**
**களப்போர் பாடத் திறமினோ''**
**கலிங்கம் எறிந்த கருணாகரன் தன்**
**களப்போர் பாடத் திறமினோ**

எனக் கடை திறப்பின் இறுதியில் கலிங்க வெற்றியைப் பாடுதற்கே இங்கு அழைக்கப்படுகின்றனர் என்பதை மு. இராகவையங்கார் சொல்கிறார்.[1]

பாவை நோன்பு நோற்பவர், வைகறைப் போதில் எழுந்து, நீராடி மாயனைப் பாடுதற்காக ஒருவரை ஒருவர் எழுப்புவர். அதுபோலக் கடை திறப்பு நிகழுகிறது.

**'போக அமளிக் களிமயக்கில், புலர்ந்தது**
**அறியாதே கொழுநர் ஆக அமளிமிசைத்**
**துயில்வீர் அம்பொன் கபாடம் திறமினோ'**

**என்றும்**

1. செல்வக் கேசவராய முதலியார், க. ப. கதாசங்கிரகம் ப. 15

**'வீடிவளவும் பொய்யே உறங்கும் மடநல்லீர்'**

என்று வரும் கலிங்கத்துப் பரணித் தொடர்கள், வைகறைப் போதில் எழும்புவதின் நோக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன.

தம் வேந்தனது வெற்றியைக் கேட்டதும், அச்செய்தியைத் தம் தலைவியர்க்கு விடியலில் சென்று துயில் எழுப்பி உணர்த்துவதும், அதனைப் பாட்டொடு தொடுத்து வாழ்த்துவதும் தோழிமார் பின்பற்றிய மரபுகள் என்பதைச் சிலப்பதிகாரமும் புலப்படுத்துகின்றது. செங்குட்டுவனது வடபுலத்து வெற்றியைத் தெரிந்த ஆயச் செவிலியர் அதனை அவன் தேவிக்கு உணர்த்தியதைத்

**துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு**
**எறிந்து களம்கொண்ட வியல்தேர் கொற்றம்**
**அறிந்து உரைபயின்ற ஆயச் செவிலியர்**
**தோள் துணைத் துறந்த துயர் ஈங்கு ஒழிகஎனப்**
**பாட்டொடு தொடுத்து பல்லாண்டு வாழ்த்த**

என்று சிலம்பு (27, 195-213) கூறும்.

இங்ஙனம் நிகழும் கடைதிறப்பு, பரணி நட்சத்திரத்தன்று வைகறைப் போதில் நிகழும்.

மகளிர் பலர் பரணி நாளன்று நாட்காலையில் நீராடி, உலர்ந்த ஆடை அணிந்து, தம்மை அணி செய்துகொண்டு, வீடு தோறும் சென்று ஆங்காங்கு உள்ள மகளிரைத் துயில் உணர்த்தி தாம் காளி தேவியின் முற்றத்திலே ஆவேசம் உற்றுக் குரவைக் கூத்தாடி ஆடும் பரணிப் பாட்டைக் கேட்டு மகிழுமாறு வாயிலைத் திறந்து வரும்படி அழைப்பர். அவர்கள் முன்னிலையில் பாடி ஆடுவதாகப் பரணிப் பிரபந்தத்தை இயற்றுதல் மரபு. இங்ஙனம் பாடி ஆடுதல் உண்டு என்று, பரணியில் வரும் வள்ளைப் பாட்டுகளால் உறுதியாகின்றது.

## 19. கடைதிறப்பின் இன்றியமையாமை

கடை திறப்பு என்ற பகுதி இல்லாமல் இருந்தால் இவ்விலக்கியத்தின் நோக்கும் போக்கும் கெட்டா போய்விடும்? நூல் முழுதிலும், வீரச் சுவையும், அச்சச் சுவையுமே விஞ்சி இருக்கின்றன. ''நெஞ்சு பறை அடிக்கும்படியான பயங்கர வருணனைகளுக்கு ஓர் அளவே இல்லை. இடறிவிழும் போதெல்லாம் பிணத்திலும், நிணத்திலும், பேய் முன்னும் காளி முன்னும் தான் விழவேண்டிவரும்''. ஆதலின் காதல் சுவை இடம் பெறவேண்டிய வாய்ப்பே நூலுக்குள்ளே இல்லாமல் போய் விடுகிறது.

பிற உணர்வுகள் விஞ்சியிருக்கும் இலக்கியத்தில் அக உணர்வுகள் அற்றுப்போய் இருக்கின்றன என்பது முழுமையான இலக்கியத்திற்கே இழுக்கு என்பதால், இப்பாவலர் இப் பகுதியைப் படைத்தனர் போலும். எனினும் இக் கடை திறப்பு நூலின் முதலில் முகப்பாக இடம் பெறுமல் முடிப்பாக இடம் பெற்றிருந்தால் பொருத்தமாக அமைந்திருக்கும்.

நூலின் போக்கின்படி கடைதிறப்பு கடை நிகழ்ச்சியே. பின் ஏன் முதலில் அமைக்கப்பட்டிருக்கிறது. காடு பாடியது தொடங்கி களம் பாடியது வரை உருவாக்கப்பட்ட வீர உணர்ச்சியின் விறுவிறுப்பு கடை திறப்பால் சிருங்கார உணர்ச்சி, குன்றிக் குலைந்து போய்விடக் கூடும்.

நூலின் அமைப்பு, இரண்டே கூறுகப் பிரிந்து கிடக்கிறது. (1) மனித நிகழ்ச்சியை மனிதர் வாயிலாகக் கூறுவது. (2) மற்றொன்று மனித நிகழ்ச்சியைப் பேய்கள் வாயிலாகக் கூறுவது, கடை திறப்பு என்பது முன்னதாகக் குறிப்பிட்ட வகுப்புள் வருவது. கலிங்கத்துப் போர் இல் வாழ்வோராலேயே நிகழ்த்தப்பட்ட போர். ஆகவேதான் மனைவியரைப் பிரிய நேரிடுகிறது. பிரிவு நீள்கிறது. அதன்

காரணமாக ஊடல் நிகழ்கின்றது. அந்த ஊடலைத் தணிப்ப தற்கு உரிய முகாந்தரத்தைக் கூறுவதன்வாயிலாகவே போர் நிகழ்ச்சியும் வெளியாகின்றது. நடப்புக் காட்சி ஒன்றைக் காட்டி அதிலிருந்து கடந்தகால நிகழ்ச்சிகளைக் காட்சிப் படுத்துவது நாடகத்தில் ஒரு முறை. அந்த முறையே இங் கும் பின்பற்றப்பட்டு, அமைக்கப்படுவதால், கடை திறப்பு முடிப்பாக அமைவதை விட முகப்பாக அமைவதில் பொருத்தமும் திருத்தமும் பொதிந்துள்ளன.

## 20. கலிங்கத்துப்பரணி வரலாற்றுக் கருவூலம்

**'கலிங்கம் எறிந்த கருணாகரன் தன் களப்போர்**
**பாடக் கடை திறமின்'** (2;44)

என்ற தாழிசையே கலிங்கத்துப் பரணியின் கரு ஆகும். கி.பி 12ஆம் நூற்றாண்டில் வரலாற்றைத் தழுவி எழுந்த இலக் கியங்கள் இரண்டு. ஒன்று திருத்தொண்டர்களின் வர லாறு கூறும் பெரியபுராணம். மற்றொன்று முதற்குலோத் துங்கனின் வரலாறு பாடும் கலிங்கத்துப்பரணி. அன் பென்னும் இழைகொண்டு தொடுக்கப்பெற்ற பக்திப் பனு வல் பெரிய புராணம். வீரம் என்னும் இழைகொண்டு பின்னப்பட்ட தீரப்பனுவல் கலிங்கத்துப்பரணி. கலிங்கத் துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் முதற் குலோத்துங்க சோழன். இவனை ஒட்டி, சோழர் தலைமுறையின் வரலாற் றையே தருகின்றது இராச பாரம்பரியம். குலோத்துங்க னின் தலைமுறையை இருபத்தேழு வேந்தர்களின் பெயரை யும் பெருமையையும் சொல்லிப் பட்டியல் போட்டுக் காட்டு கின்றது இராசபாரம்பரியம். குலோத்துங்கனின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, வெற்றி அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது அவதாரம் என்ற பகுதி. சோழன் முதற் குலோத்துங்கனைப் பற்றி இந்நூல் கூறும் செய்திகள் பெரும்பாலானவை கல்வெட்டுச் சான்றுகளால் உறுதியா கின்றன.

## 21. கலிங்கத்துப் பரணி இராச பாரம்பரியம் காட்டும் சோழர் தலைமுறை

மால்
|
அயன்
|
மரீசி
|
காசிபன்
|
சூரியன்
|
மனு
|
இக்குவாகு
|
காகுத்தன்
|
மாந்தாதா
|
முசுகுந்தன்
|
பிரிதுலாட்சன்
|
சிபி
|
சூராதிராசன்
|
இராசகேசரி
|
பரகேசரி
|
கிள்ளிவளவன்
|
கவேரன்
|
மருத்யுசித்து
|
சித்திரன்
|
சமுத்திரசித்து
|
பஞ்சபன்
|
வாதராசனைப் பணிகொண்டவன்
|
தூங்கெயில் எறிந்தவன்
|
உபரிசரன்
|
பாண்டவன் படைக்கு உதவிசெய்தவன்
|
சாளீசுகன்
|
செங்கணான்
|
கரிகாலன்
|
விண்ணில் வேழம் உகைந்தவன்
|
பராந்தகன்
|
இராசராசன்
|
இராசேந்திரன்
|
இராசாதித்தன்
|
இராச ராசேந்திரன்
|
இராச மகேந்திரன்
|
வீரமகேந்திரன்
|
குலோத்துங்கன்

## 22. பரணியில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகள்

*1.* குலோத்துங்க சோழன் மகுடம் சூடுவதற்கு முன்பு சோழநாடு கலகத்தால் நிலைகுலைந்து போயிருந்தது என்பது கல்வெட்டு காட்டும் உண்மை.

'பொன்னியாடை நன்னிலப்பாவை தனிமையும்
தவிரவும் வந்து புனிதத் திருமணி மகுடம்
உரிமையில் சூடி தன்னடி இரண்டும் தட
முடியாகத் தொன்னில வேந்தர் சூடமுன்னை
மனுவாறு பெருக கலியாறு வறப்ப செங்
கோல் திசைதொறும் செல்ல'

என்பன கல்வெட்டுத் தொடர். இச்செய்தியையே பரணி 'மறையவர் வேள்வி குன்றி மனுநெறி அனைத்தும் மாறி' (345) என்று கூறுகிறது.

*2.* சக்கரக்கோட்டம் என்பது வடநாட்டில் உள்ள வத்சமாநிலமாகும். இம்மாநிலத்தை வென்ற செய்தியைச் 'சக்கரக் கோட்டத்துத் தாரா அரசனைத் திக்கு நிகழ திறை கொண்டருளி, (S.I.I. Vol. III. No-65) என்றும், 'சக்கரக் கோட்டத்து விக்கிரம தொழிலால் புதுமணம் புணர்ந்து' என்றும் (S I I. Vol. III No-72) கல்வெட்டுகளில் வருகின்ற வரலாற்றுச் செய்தி கலிங்கத்துப்பரணி தாழிசைகளால் *6-14, 10-23, 11-73*, உறுதி செய்யப்பெறுகிறது.

*3.* சோழன் குலோத்துங்கன் இளமையில் திக்கு விசயம் செய்தான் என்ற குறிப்பு.

'திக்கு நிகழத் திறை கொண்டருளி'

என்னும் மெய்க்கீர்த்தியால் பெறப்படுகிறது. இச் செய்தி பரணியாலும் நிலை நிறுத்தப்பெறுகிறது, *(18-20)*

4 அளத்தி என்ற ஊரில் சோழனுக்கும் மேலைச்சாளுக்கியனுக்கும் போர் நடந்தது. இப்போரில் சாளுக்கியரின் யானைகளைச் சோழன் கைப்பற்றிக்கொண்டான். இச் செய்தியை 'வில்லது கோடா வேள்குலத்து அரசர் அளத்தியில் இட்ட களிற்றினது ஈட்டமும்' என்று அவனது மெய்க்கீர்த்தி குறிக்கின்றது. இதனை

**'அளத்திபட்டது அறிந்திலை ஐய நீ'** (11-74)

என்று பரணி குறிப்பிடுகின்றது.

5. பாண்டி நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்து ஆண்ட பஞ்ச பாண்டியரைப் பஞ்சவர் ஐவர் என்று இவனது மெய்கீர்த்தி குறிப்பிடுகின்றது. இச்செய்தியைப் பரணி.

**'விட்ட தண்டினில் மீனவர் ஐவரும்**
**கெட்ட கேட்டினை கேட்டிலை போலும் நீ'** (11:70)

என்கிறது. சிதம்பரத்தில் வடமொழியில் வரையப் பெற்றுள்ள கல்வெட்டொன்று இவன் பாண்டியர் ஐவரையும் வென்ற செய்தியைக் கூறுகிறது.

6. வடகலிங்க வேந்தனாகிய அனந்தவர்மன் என்பவனோடு குலோத்துங்கன் நிகழ்த்திய போரைப்பற்றித் திருச்சி மாவட்டம் சீனிவாச நல்லூரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றும் தஞ்சை மாவட்டம் ஆலங்குடியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றும் கலிங்கப்போரைக் குறிப்பிடுகின்றன. இச்செய்தியே கலிங்கத்துப்பரணியின் உயிர்ச் செய்தியாகும்:

7. கருணாகரனை எதிர்த்த கலிங்கநாட்டு அரசன் அனந்தவர்மன் சோழகங்கன் என்பவனைப் பற்றி அந்நாட்டுச் செப்பேடு ஒன்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. இவன் 1078-1150 வரை அரசாண்டவன். இச்செய்தியையே கலிங்கத்துப்பரணி,

**'அந்தரம் ஒன்று அறியாத குலவேந்தன் அந்தவன்மன்'**

என்று குறிப்பிடுகின்றது. இவ்வரசனைக் குலோத்துங்கனின் மகள் இராச சுந்தரியின் மகன் என்று வரலாற்று அறிஞர் குறிப்பிடுகிறார்[1] தன் மகள் வயிற்றுப் பேரன் மீதே சோழன் படையெடுத்தான் என்பதே பொருந்துவதாய் இல்லை. கலிங்கப்பேர் போர் நடந்த முறைகளையும் அதனால் ஏற்பட்ட பேரழிவுகளையும் கலிங்க நாட்டில் இருந்து கவரப் பட்ட

**'நடை வயப்பரி ரதம் ஒட்டகம் நவநிதிக்குவை**
**மகளிர்'**

முதலான பொருள்களையும் நோக்கும்பொழுது தன் பேரனுக இருந்தால் இவ்வளவுச் சீரழிவுகளுக்குக் குலோத்துங்கன் அனுமதித்திருக்கமாட்டான். ஆதலின் அனந்த பத்மன் சோழன் உறவினன் என்பது அத்துணைப் பொருத்தமாய் இல்லை.

## 23. கருணுகரத் தொண்டைமான் :—

பேரும் புகழும் பெற்ற கருணுகரத் தொண்டைமானை முதன் முதலில் அறிமுகமாக்கியவர் சயங்கொண்டாரே. கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் குலோத்துங்கன் என்ருலும் கலிங்கப்போரின் நாயகன் கருணுகரனே: வண்டை நகர் அரசன் என்று பரணி பாடுகிறது. இவ்வண்டை நகரம் தொண்டை நகரம் என்று கருதிக் கருணுகரனைப் பாராட்டுகிறது, தொண்டை மண்டல சதகம். கருணுகரனுக்குரிய இவ்வண்டை தொண்டை நாட்டிலுள்ள வண்டலூர் என்று குறிப்பர் வீ. கனகசபைப் பிள்ளை

1. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி. சங்கோத்திரம் ப. 57

யும், டாக்டர் அல்ஸ் (Hultzsch) அவர்களும்[1]. இக்குறிப்பு சரியன்று.

சோழ நாட்டில் திருநறையூருக்கு அண்மையிலுள்ள வண்டாழஞ்சேரியே இவனது ஊராகும். இதனைப் பரணி ஆசிரியர் வண்டை எனச் சுருக்கி வழங்குகிறார். இவ்வூர் இப்போது வண்டுவாஞ்சேரி என்னும் பெயருடன் உள்ளது. கும்பகோணம் குடவாசல் பேருந்துத் தடத்தில் நாச்சியார் கோயிலுக்குத் தெற்கே ஒருமைல் தொலைவிலுள்ளது. இச் செய்தியை முதற் குலோத்துங்கனது 43 ஆம் ஆண்டுக் கல் வெட்டு தெளிவுபடுத்துகின்றது. "குலோத்துங்க சோழ வளநாட்டு திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி உடையான் வேளான் கருணாகரர் இன தொண்டைமானார்" என்பது அக்கல்வெட்டு மொழியாகும்.[2]

## 24, கலிங்கப்போர் :—

வட கலிங்கப் போரைப் பற்றி இவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும் தருவது கலிங்கத்துப்பரணியே ஆகும். இவ் வரலாற்றுச் சிறப்பை உணர்ந்து, கல்வெட்டு ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பரணியில் கூறப்பட்ட வரலாற்றுப் படையெடுப்புச் செய்திகளை அப் படியே சுருக்கித் தந்து இருக்கிறார்.[3]

இதிலிருந்து பரணி தரும் செய்தி எத்துணை வரலாற்று முதன்மை வாய்ந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

1. Sastri. The Cholas. Vol. P. 37
2. S. I. I. Vol. II P. 113. Foot Note.
3. S. I. I. IV No. 862

## 25. பரணியால் அறியப்படும் பிற வரலாற்றுச் செய்திகள்.

*1. அதிராசேந்திரன் கொலையுண்டது. (264)*

*2. அனந்தபத்மன் தோல்வியுற்றது. (446)*

*3. ஆரும் விக்கிரமாதித்தன் வீர ராசேந்திரன்பால் தோல்வியுற்று அம்மன்னவன் மகளை மணந்தது (226)*

*4. இக்குவாகு அரங்கநாதரைக் கொன்றது. (157)*

*5. இராசகேசரி பரகேசரிகள் புலிக் கொடியை ஏற்படுத்தியது. (191)*

*6. இராசமகேந்திரன் திரு அரங்கத்திற்குப் பணி செய்தது. (205)*

*7. இராசராசன் அம்மங்கை தேவியை மணந்து முதற் குலோத்துங்கனைப் பெற்றெடுத்தது. (234)*

*8. இராசேந்திர சோழன் கங்கை நீரைக் கொணர்ந்தது. (202)*

*9. இராசேந்திர தேவன் ஆகவ மல்லமனை வென்று தன் மகளை முதற் குலோத்துங்கனுக்கு மணம் செய்வித்தது. (204)*

*10. இராசேந்திர மிருத்யுசித் ஆட்சி புரிந்தது (192)*

*11. உபரிசரன் தன் விமானத்தை விண்ணில் செலுத்தியது. (194)*

*12. காகுத்தன் அசுரரை வென்றது. (188*

*13. கரிகாலன் இமய மலையில் புலிக்கொடி பொறித்தது. (188)*

*14 கரிகாலன் காவிரிக்குக் கரையெடுத்தது. (197)*

15. கரிகாலன் சேர பாண்டியரை வென்று அவர்கள் தலையில் ஏரி விளக்கு ஏற்றியது. (199)

16. கரிகாலன் நெடுஞ்செழியனையும் பெருஞ்சேரலாதனையும் வென்றது. (196)

17. கரிகாலன்மேல் பட்டினப்பாலை பாடப்பட்டது. (198)

18. கிள்ளி வளவன் எமனுக்கு நீதி உரைத்தது. (192)

19. கிள்ளி வளவன் நாககன்னியை மணந்தது. (195)

20. சமுத்திரசித்து கடல்களை ஒன்று சேர்த்தது. (193)

21, சயசிங்கன் தோல்வியுற்றது, (103, 355, 564)

22. சித்திரன் இந்திரனைப் புலிக் கொடியாகக் கொண்டது. (193)

23. சிபிச்சோழன் தன் உடலை அரிந்து கொடுத்தது. (190)

24. சுரகுரு தூது விட்டது. (157)

25. சுராதிராசன் சோழ மண்டலத்தை ஏற்படுத்தியது. (190)

26. சூரவர்க்கன் நாக கன்னியை மணந்தது (195)

27. சேரமான் கணைக்கால் இரும்பொறை தோற்றது. (195)

28. சோழன் செங்கண்ணன் பொய்கையாரால் பாடப் பெற்றது. (195)

29. தருமன் படைக்கு உதவி செய்தவன் (194)

30. தாராவருஷன் தோல்வியுற்றது. (147, 254, 384)

31. திரிசங்கு தன் விமானத்தைச் செலுத்தினது. (194)

32. திரிலோசனன் நெற்றிக்கண்ணை இழந்தது. (197)

33. திலீபன் தன் குருதியைச் சிங்கத்திற்கு அளித்தது. (193)

34. தூங்கெயில் எறிந்த சோழன் மூன்று அரண்களை அழித்தது. (194)

35. பஞ்சவர் இயக்கர்களுக்குத் தன் குருதியை அளித்தது. (193)

36. பிருதுலாட்சன் வானவர்க்கு அமுது அளித்தது. (190)

37. மனுநீதிச் சோழன் நீதி வழங்கியது, (187)

38. மாந்தாதா முறை பிறழாமல் அரசு புரிந்தது.(189)

39. முசுகுந்தன் இந்திரனுக்கு உதவி புரிந்தது. (189)

40. முதல் இராசராசன் சதய விழா ஏற்படுத்தியது. (201)

41. முதல் இராசாதிராசன் தும்பிலியில் வெற்றித் தூண் நிறுவியது. (209)

42. முதற் குலோத்துங்கன் இளவரசு பட்டம் பெற்றது. )249)

43. முதற் குலோத்துங்கன் சக்கரக்கோட்டம் வென்றது. (254)

44. முதற் குலோத்துங்கன் சேர, பாண்டியரை வென்றது. (381, 382, 383)

45. முதற் குலோத்துங்கனின் பிறப்பு வரலாறு (237)

46. முதல் சோமேஸ்வரன் உயிர் இழந்தது (206)

47. முதல் பராந்தகன் தன் பகைவரை வென்றது(200)

48. வரதராசனைப் பணி கொண்டது. (193)

49. விகுட்சிவேந்தன் இக்குவாகுவின் புதல்வன் என்பது. (188)

50. விஜயாதித்தன் வேங்கி நாட்டுக்குப் பிரதிநிதியாய் இருந்தது. (147)

51. வீரராஜேந்திரன் தன் பகைவரை வென்றது.(206)

—கன்னைய நாயுடு ஆ. வி. கலிங்கத்துப் பரணி பதிப்பு, பக்கம் 19-20.

## 26. பரணியால் அறியப் பெறும் அரசியர்

1. அம்மங்கைதேவி (234) 2. இராசசுந்தரி (375) 3. ஏழிசை வல்லபி (255) 4. குந்தவை (201, 234) 5. தியாகவல்லி, மதுரசுந்தரி (286)

## 27 பரணியால் அறியப்பெறும் அரசர்கள் (329—332)

## 28. அமைச்சர்களும், படைத் தலைவர்களும்

1. எங்கராயன் (377) 2. கருணாகரத் தொண்டைமான் (363) 3. பல்லவர்கோன் (364) 4. முடிகொண்ட சோழன், வாணகோவரையன் (365)

## 29. புலவர்கள்

கடியலூர் உருத்திரங் கண்ணனார் (198) முடத்தாமக் கண்ணியார் (198) பொய்கையார் (195)

## 30. நூல்கள்

1. இராமாயணம் (401) 2. களவழி நாற்பது (165) 3. பட்டினப்பாலை (198) 4. பாரதம் (180, 471) 5. மனுநூல் (20. 241) 6. வேதம் (184, 208, 243, 596)

## 31. நாடுகளும், நகரங்களும், ஊர்களும்

1. அதிகை மானகர் (299) 2. அவந்தி(381) 3. இலங்கை (64) 4. உதகை (281) 5. கச்சி (300) 6. கடாரம் (151) 7. தும்பிலி (203) 8. கலிங்கம் (63, 64, 471) 9. சாலை (காந்தளூர்ச் சாலை) (362) 10. குருமி (198) 11. கூடல் சங்கமம் (206) 12. கொப்பை (204) 13. கோட்டாறு (95) 14. சக்கரக் கோட்டம் (146) 15. சிங்களம் (152) 16. திமிலி (149) 17. தென் மதுராபுரி (152) 18. நவிலை (385) 19. பல்லவ நாடு (364) 20. மணலூர் (562) 21. மண்ணை (202) 22. மதுரை (107) 23. மயிலை (533) 24. மலைநாடு (297) 25. மல்லை (533) 26. மிதிலை (101) 27. வண்டை நகர் (341) 28. வயிராகரம் (252) 29. விழிஞம் (382) 30. வெள்ளாறு (95)

## 32. மலைகள்

1. அத்தமனமலை (463) 2. இமயமலை (178).

3. உதய மலை (282), 4. திகிரி மலை (சக்கரவாள மலை) (207).

5. மந்தரமலை (122), 6. மேருமலை (315).

7. விந்த மலை (244). 8. வெள்ளிமலை (299)

## 33. ஆறுகள்

1. கங்கை (292), 2. காவிரி (59),

3. குசைத்தலை (367), 4. கொல்லி (367)

5. குன்றி (368), 6. கோதமை (369)
7. கோதாவரி (36''), 8 சந்தப்பேர் (காயத்திரி)(369)
9. பம்பை (369), 10. துங்கபத்திரை (103)
11. பாலாறு (278) (பரணியின்படி, காஞ்சிக்குத் தெற்கே அன்று. இன்று காஞ்சிக்கு வடக்கே) 12. பெண்ணை (367),
13. பேராறு (கிருஷ்ணு) (368), 14. பொருநை (592)
15. பொன்முகரி (367), 16. மண்ணாறு (368),
17. யமுனை (262).

## 34: அரசுக் கொடிகள்

1. அலகை (17) 2. உவணம் (17)
3. ஏறு (17), 4. கலை (18)
5. கெண்டை (18), 6. கேழல் (17)
7. கோழி (293), 8. சிலை (18).
9. தோகை (17), 10. புலி (18)
11. மாசுணம் (293), 12. மேதி (17),
13 மேழி (18), 14. யாளி (18)
15. வீணை (18), 16. வேழம் (17).

சேர, சோழ, பாண்டியரின் வில், புலி, மீன் சின்னங்களின் வடிவம் எப்படி இருந்தது என்பது இன்று தெரியாது. பாண்டியரின் மீனச் சின்னம் மட்டும் சில நாணயங்களிலும், சிதம்பரம் கோயில் மேலைக்கோபுரத்திலும் நின்ற வடிவத்தில் காணப்படுகிறது. சோழரின் புலிக்கொடி, படுத்த வடிவத்தில் இருப்பதாக இன்று காட்டப் பெறுகின்றது. சோழரின் புலிக்கொடி பாய்கின்ற புலி வடிவமாக இருந்தது என்பதையும், சீறிக் குமுறுகின்ற தோற்றத்தோடு இருந்தது என்பதையும் கலிங்கத்துப் பரணி படம் பிடித்துக் காட்டுகின்றது. இமயமலையில் கரிகாலன் புலிக்

குறி பொறித்த செய்தி இராசபாரம் பரியத்தில் குறிப்பிடப் படுகிறது. அக்குறிப்பில் **"பாய்புலிக்குறி பொறித்து"** எனச் சயங்கொண்டார் எழுதுகிறார் (இராசபாரம்பரியம் 8:1). சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பொறிக்கப் பட்டுள்ள புலிச்சின்னம் இதனையே நினைவு படுத்துகிறது. கங்கை கொண்ட சோழ புரத்திலிருந்து காஞ்சிபுரம் நோக்கிச் சோழர் சேனை செல்கிறது. அப்பொழுது சோழப் பேரரசின் தலைமையை ஒப்புக் கொண்ட சிற்றரசுகளின் கொடிகளான மீனக்கொடி, பாம்புக் கொடி, பருந்துக்கொடி, யானைக் கொடி, பன்றிக்கொடி, யாளிக்கொடி, கலப்பைக் கொடி, கோழிக் கொடி. விற்கொடி, முதலான ஆயிரக்கணக் கான கொடிகள் ஆகாயத்தில் நுடங்கி நுடங்கிப் பறக் கின்றன. அவற்றின் ஊடே அவற்றிற்கும் மேலாகப் பறக் கின்ற பாய்புலிக் கொடியைச் சயங்கொண்டார்,

**"குமுறும் வெம் புலிக்கொடி குலாவ" (10:62)**

என்று குறிப்பிடுகிறார். காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத் துள்ள காசில் புலி வல முன்காலைத் தூக்கிப்பாயும் தோற்றத் திலும், இராசேந்திரசோழன், உத்தம சோழன் காலத்தில் அமர்ந்த தோற்றத்திலும் நாணயங்களில் காணப்படுவது காண்க.

## 35. கலிங்கத்துப் பரணியால் அறியப் பெறும் பழக்க வழக்கங்கள்.

1. அரசன் ஆணையிட்டு இயக்க மறவர்களே போர் புரிதல் இயல்பு. கலிங்கத்துப் பரணியால் அரசர்களும் நேருக்கு நேர் போர் செய்து கொண்டனர் என்பது தெரி கிறது. (408)

2. சிற்றரசர்கள், தம்மிலும் வலிமை வாய்ந்த பேரரசர் களின் முன் பணிந்து ஒழுகுவர். (529)

3. எருமைக் கடாவைக் காளி தேவிக்குப் பலியிடுவர். (114)

4. குழந்தைகளை ஐவகைச் செவிலித் தாய்மார் வளர்ப்பர். (ஆட்டுவாள், ஊட்டுவாள், ஒல் உறுத்துவாள், நொடி பயிற்றுவாள், கைத்தாய் எனச் செவிலித்தாயர் ஐவகைப் படுவர்) (தாழிசை 241, சீவகசிந்தாமணி 363 உரை).

5. பஞ்சுமெத்தைகள், ஐவகை அடுக்குகளைக்கொண்ட பஞ்ச மெத்தைகளாக இருந்தன. (154)

6. குழந்தைகளைக் காளிதேவிக்குப் பலியிட்டனர். (106)

7. தமிழ்ப் புலவர்கள் அரசர்களால் நன்கு மதிக்கப் பட்டனர். (195, 198)

8. தமிழ் வேந்தர்களின் தேர்கள் அழகாக அமைக்கப் பெற்றன. (352)

9. தோல்வியுற்ற மன்னரின் மனைவிமாரை வெற்றி பெற்றோர் சிறைசெய்வர். (40, 559)

10. தோல்வியுற்ற மன்னரும் அவர்தம் மனைவியரும் வெற்றி பெற்றோருக்கு ஏவல்பணி புரிவர் (325, 326)

11. தோல்வியுற்ற வேந்தன் தலையில் வெற்றிபெற்றவர் எரி விளக்குகளை ஏந்துவர். (199)

12. நான்கு வகைப் படைகள் இருந்தன. (347)

13. நான்கு வகைப் பண்கள் இருந்தன. (221)

14. நான்கு வகை அரண்கள் இருந்தன. (377)

15. நிமித்தம் பார்க்கும் பழக்கம் உண்டு. (223, 224)

16. பகை வேந்தர் ஊர்களைக் கொளுத்துவர், சூறையாடுவர். (370)

17. மதில்களையும், சோலைகளையும் அழிப்பர். (372)

18. அக்கால அரண்மனைகளில் சுரங்கங்கள் இருந்தன. (68)

19. மகளிரையும் திறைப் பொருளாகச் செலுத்துவர் (47)

20. மகளிர் உடன்கட்டை ஏறி மடிவர். (480)

21. மகளிர் கிளிகளை வளர்ப்பர். (67)

22. பிரிந்த மகளிர் கூடலிழைத்துப் பார்ப்பர். (51)

23, மகளிர் செங்கழு நீர் மாலைகளை அணிவர். (50)

24. மகளிர் தேரில் அரசருடன் செல்வர். (290)

25. மகளிர் அரச பரிவாரங்களுடன் பெண்யானை மேல் செல்வர். (287)

26. மகளிர் போர்க்களம் அணுகுவர். (481, 484)

27. யானை, குதிரை, ஒட்டகம் முதலானவற்றையும் சிற்றரசர் திறையாகச் செலுத்தவர். (334, 336)

28. வீரர்கள் போர்க்களத்து அஞ்சுவார் மேல் படை தொடுக்க நாணுவர். (442)

29. வெற்றித் தூண்களை நடுவர். (10)

30. வீரர் தம் உறுப்புகளையும் தலையையும் அறுத்துத் தேவிக்குப் பலிகொடுப்பர். (109, 111)

31. வேதியர் (அந்தணர்) வேந்தர்க்கு மகுடம் புனைவர் (264)

32. வேந்தர் பூணூல் அணிவர். அது இரண்டாம் பிறப்பு எனப்படும். (242)

33. அமணர் தலைமழித்து நிர்வாணமாய் இருப்பர். (466) ஒரு பொழுதே உண்பர் (566) கூறைத் துணியால் வடித்து உண்பர் (566)

34. அந்தணர் முந்நூல் இட்டுக் கங்கை நீராடப் போவர் (467)

35. பௌத்தர் தலை மழித்துக் காவி உடை உடுத்தியிருப்பர். (468) பௌத்தர் தோலினால் போர்த்துக் கொண்டு சாப்பிடுவர் (567)

36. தெலுங்கர் தாளம் பிடித்துப் பாணர் எனப் பாடித் திரிவர். (469)

37. கோலால் பல் துலக்குவர். (505)

38. நாக்கை வழிப்பர் (505)

39. நீண்ட நகங்களை வெட்டுவர் (506)

40. நகம் வெட்டியை உகிர் கொல்லி என்பர் (506)

41. எண்ணெய் தேய்த்துக் களிமண்ணால் மயிர்குழப்பி நீராடுவர் (507)

42. நீராடிய பின் புத்தாடையையும், அணிகலன்களையும் அணிவர் (509—514)

43. சமையல் கூடத்தை அடுக்களை என்று வழங்குவர் (516)

44. சமையல் கூடத்தை மெழுகி, கோலமிட்டுப் பின் பானையை அடுப்பில் ஏற்றுவர் (517)

45. பானையில் நீர் ஊற்றிக் கொதிக்கவைத்து அரிசி யிட்டுக் கூழாக்குவர் (520, 524, 525)

46. அரிசியை உரலிலிட்டு உலக்கையால் சலுக்கு மொலுக்கு என்று குற்றுவர் (526)

47. குற்றும் பொழுது பாடுவர் (527-544)

48. அரிசியைச் சுளகால் புடைப்பர் (545)

49. தூணியால் அளப்பர் (546)

50 உலையில் இடுவர் (547)

51. கொதிக்கும் கூழைப் பதமாய் இருக்கிறதா என்று உள்ளங்கையில் வைத்துச் சுவை பார்ப்பர். இவ்வாறு சுவை பார்த்தலுக்கு உப்புப் பார்த்தல் என்று பெயர் (549)

52. உண்ட பின் தாம்பூலமும் போடுவர் (584)

53. ஏப்பம் வரும்பொழுது தலைமேலுள்ள மயிரை முகருவர். அதனால் ஏப்பம் நின்று போய்விடும் என்று நம்பினர் (584)

## 36. கலிங்கத்துப் பரணியில் இடம் பெற்றுள்ள உயிரியல், பயிரியல் முதலான செய்திகள்

1. **விலங்குகள் :-** ஆ-187; ஒட்டகம் 142, 334, 433, 459; குதிரை-253; குரங்கு-96; சிங்கம்-318; செந்நாய்-83, நரி-119; பகடு-272; பன்றி-164; புலி, மான்-189; மேதி-17; யானை-491; வெள்ளாடு-56.

2 **பறவைகள் :-** அன்னம்-296; ஆண்டலைப்புள்-112, ஆந்தை-140; உவணம்-17; ஊமன்-223; கழுகு-476;

*காகம்-485; கிளி-67; கோழி-293; துரிஞ்சில்-140; பருந்து-120; புறு-82; மயில்-23; வண்டு-66.*

3. **மரஞ்செடி கொடிகள்** *:-ஈகை-78; ஓமை-76; கதலி-295; கமுகு-295; கள்ளி-77; காரை-76; கூகை-78; சூரை-76; துள்ளி-77; தேறு-78; நெல்லே-77; பனே-135; பாரை-76 பாலே-76; புன்கு-78; முள்ளி-77; வள்ளி-77. வாகை-78; வெள்ளில்-77; வீரை-76; வேய்-76; வேல்-77.*

4. **துகிற்கொடிகள்** *:- அலகை - உவணம் - ஏறு-17; கலே, கெண்டை; கேழல்-18; கோழி-293; சிலே-18, தோகை-17; புலி-18; மாசுணம்-293; மேதி-17; மேழி-யாளி-வீணே 18; வேழம்-17.*

## 37. இசைக் கருவிகள்

*காளம்-324; குழல் - தண்ணுமை-323; தமருகம்-114; தாளம்-324; துடி-21; பணிலம்-240; முரசு-223; முழவு-119; யாழ்-323; வயிர்-344; வலம்புரி-283; வளே-344; வீணே-323;*

## 38. போர்க் கருவிகள்

*அம்பு-500; உலக்கை-527; கவசம்-33; குந்தம் - 499. கேடகம்-430, சக்கரம்-247; சவளம்-437; சுரிகை-99; செண்டு -178; தண்டு-240; பாராவளே-511; மழு-431, வாள்-95; வில் வேல்-464.*

## 39. அணிகலன்கள்

*இரட்டைவாளி-512; ஏகவடம்-334; ஏகாவலி-513; ஐம்படைத்தாலி-149; கலாபம்-275; காஞ்சி-63; குதம்பை-132; குழை-32; சிலம்பு-58; சூடகம்-510; பட்டம்-335; பரிபுரம்-23; பவளவடம்-30; பாகுவலயம்-513; பாடகம்-510; பொன்*

மாலை-286; மகரக் குழை-335; மணிவடம்-132; முடி-264; முத்துவடம்-30; மேகலை-53; வன்னசரம்-514; விடுகம்பி-511.

## 40. கலிங்கத்துப் பரணியால் அறியப்படும் ஓவியக்கலை

இடைக்காலத் தமிழர் ஓவியம் எழுதுவதிலும், பொறிப்பதிலும் திறம் வாய்ந்தவராய்த் திகழ்ந்தனர். இமயமலையில் பாய்கின்ற புலி உருவத்தைச் செதுக்கினர். (173) ஆரவாரத்தையுடைய திரிலோசனன் என்ற அரசனின் உருவைத் திரைச் சீலையில் எழுதி வைத்தனர் (197). எண் திக்குகளிலும் உள்ள மலைகளில் புலிக் கொடியைப் பொறித்தனர். (203) மடங்களில் உள்ள சுவர்களில் அழகான ஓவியங்கள் எழுதினர். நாட்டுக்குத் தீங்குவரும் போதில் அவற்றில் சிவந்த இரத்தம்போல் வியர்வை சுரக்கும் என்பர். (224) ஓவியங்கள் மட்டுமே எழுதப்பட்ட தனி மண்டபங்கள் இருந்தன. அவை சித்திர மண்டபம் என்றழைக்கப்பட்டன (315). பகை நாட்டை அழிக்கும் வெற்றிவேந்தரின் வீரர் அவர்கள் நாட்டில் சுவர்களில் எழுதி வைத்திருக்கும் உயிருடைய ஓவியங்களை விட்டுவைப்பர். பாண்டியர்கள் மலைக்குகைகளில் நுழைந்த வடிவம் இது போன்றதாம் என்று சொல்லும்படி யானைகளின் வயிறுகளில் பேய்கள் நுழைவது போல் துகில்களில் ஓவியம் எழுதப்பட்டிருந்தன. (588)

## 41. பரணியால் அறியப் பெறும் கட்டிடக்கலை

சோழ மன்னனின் அரண்மனை அமைப் பழகை அறிய பரணி நூல்வழிச் சான்றேதும் இல்லை. எனினும் காளிதேவி, குடியிருந்த கோயில் அமைப்பு முறையாகச் சித்தரிக்கப் பட்டு இருக்கிறது. இது கொண்டு அக்காலக் கட்டிடக் கலையின் சில கூறுகளை அறிய முடிகிறது. கோயில் பாடியது என்ற பிரிவின் வழியாகத் தெரியலாம். கட்டிட இயல்

செய்திகளாவன. 1. அடித்தளம் அமைத்தே கட்டிடம் எழுப்புவர் (98) 2. நீரைக் கொண்டு சேற்றால் சுவர் அமைப்பர் (99) 3. வலிமை வாய்ந்த மரங்களால் தூண் களும், உத்திரங்களும் நாட்டுவர் (100) 4. துலாமும், பாவும் மேல் தளத்தில் பரத்துவர் (101) 5. அதன்மேல் துணி யாலோ பிறவற்றாலோ மேல் முகட்டை அமைப்பர் (102) 6. அம் மேல் முகடு முற்றும் மறையும்படியாகத் துணி முதலியவற்றால் போர்த்துவர் (103) 7. கட்டப்பட்ட அரண் மனையைச் சுற்றி மதில் எழுப்புவர் (104) 8. வாயிலில் மகர தோரணம் கட்டுவர் (105) 9. முன்றிலில் நீர் தெளித்து, பெருக்கி, மலர் தூவி இருப்பர். இக்குறிப்புகள் அனைத்தும் காளிகோயிலுக்கு உரியதாயினும் அக்காலக் கட்டிட அமைப்பை மறைமுகமாக விளக்குகின்றன.

## 42. கலிங்கத்துப் பரணியின் மொழிநிலை

கலிங்கத்துப் பரணி, சொல் புனைவதில் மன்னரான செயங்கொண்டாரின் கைவண்ணம். தென்னகம்-முழுவதை யும் தமிழ் வேந்தர் ஆண்ட காலத்தில் எழுதப்பட்ட சிற் றிலக்கியம். தமிழ் நாட்டுக்குப் புறம்பான கலிங்க மண்ணை-கலிங்க வெற்றியை மையமாக வைத்தெழுதப்பட்ட நூல். பிற்காலச் சோழர்காலத்தில் சமஸ்கிருத, ஆதிக்கம் தமிழ கத்தில் பரவியிருந்தது. இந்த ஆதிக்கத்தின் தாக்கங்கள், கலிங்கத்துப் பரணியிலும் காணப்படுகின்றன. இஃது இயற்கையே. எனினும் சமஸ்கிருத ஆதிக்கத்திற்கு இடங் கொடுத்து பரணி-இலக்கியத்தை ஒரு மணிப்பிரவாள இலக் கியமாகச் செயங்கொண்டார் படைத்து விடவில்லை.

இந்நூலில் இடம் பெற்றுள்ள சில சொற்கள் இந்நூல் வழியாகவே முதன் முதல் அறிமுகமாயின என்று தோன்று கிறது.

அங்குலி - துதிக்கை (298); அடுக்களை - சமையற்கட்டு (516); அட்டம்-அண்மை (Near) (142): அமுதவட்டம்-முழு நிலா (87); அருவர்-தமிழர் (452); அலக்கு-முறிதல் (விலா எலும்பு முறிந்து போகும்படி சிரித்தன) (229); அலதி, குலதி-மிக்க நடுக்கம் (450); அலந்தலை-மயக்கம் (311); அறுக்கை-ஆணை செலுத்தல் (366); இலைப்புரை தடவல்-சிறிதிடம் விடாமல் தேடுதல் (461); ஈச்சோப்பி-கவரி போன்ற ஒரு கருவி (153); உகிர்கொள்ளி-நகம்வெட்டி (506); உரிமை அரிவையர்-அரசமனைவியர் (335); உவட்டல்-பெருகல் (355); உளப்பு-வருத்தம் (75), ஒக்கலை-இடுப்பு (142); ஓடி-காட்டுப் புதர் (424).

ஒறுவாய்-குறைந்தவாய் (217); கடைப்போக-முற்றும் (174); கடுஞ்சேவகம்-கொடிய வீரத்தொழில் (490); கருவிக் கட்டு-ஆயுதக்கட்டு (508); காரண காரியங்கள்-உயிரும் உடலும் (9); காளயம்-ஒப்பற்ற வீரர்களின் கூட்டம் (492); கிழான்-பாண்டம் (519); கொட்டு-மண்வெட்டி-களைகொட்டு, சோணாட்டு வழங்கு (141); கொற்றலம்-போர்க்களம் (137); சல்லவட்டம்-ஒருவகை முறம் (545), சின்னம்-தட்டு (558); திமிலகுமிலம்-பல்வகைப் பேரொலிகள் (447); தூசி-குதிரை (365); தெற்றல்-பின்னல் (414); நித்தகாரர்-ஆட்டக்காரர் (432), பதம்-அறுகம்புல் (556); பரிவிருத்தி கோயில் சுற்று (168); பவனபதம்-காற்றின் முயற்சி (415); பாரிபோகம்-சீதனப் பொருள் (255); புரவிப்படி-குதிரைகளின் அங்கவடி (510); புளகம்-சோறு (558), புளிதம்-இறைச்சி (519); புறக்கிடல்-பின்னேறுதல் (353); மண்டை-உண்கலங்கள் (558); மிறைத்தல்-கொல்லுதல் (417); வட்டணங்கள் -கேடயங்கள் (425); விடவிகள்-மரங்கள் (400); விடைத்து-கோபித்து (354); சோணாட்டு வழக்கு. வேளம்-பிறநாட்டுப் பெண்டிர் சிறைப்பட்டுள்ள அந்தப்புரம் (40).

அம்மை (164) எனும் சொல் தாய் என்ற பொருளில் வழங்குகிறது. ஔவை (176) என்ற சொல்லும் அவ்வாறே முறம் என்பதற்குச் சுளகு (545) என்று ஆளப்படுகிறது. சமையல் கட்டு, அடுப்பங்கரை, அட்டில் என்பனவற்றிற்கு அடுக்களை (516) என்ற சொல் ஆளப்படுகிறது.

குழந்தையை இடுப்பில் எடுத்து வைத்துக் கொள் வதை ஒக்கலில் கொள்வது (142) என்று பரணி குறிக்கிறது. உழப்பு என்ற சிறப்பு ழகரச் சொல்லோ உளப்பு (75) என வழங்குகிறது. உணவு முதலானவற்றை உள்ளங்கையில் எடுத்துவைத்துச் சுவைபார்க்கும் பழக்கம் 'உப்புப் பார்த்தல்' (549) எனப்படுகிறது. இவ்வழக்காறுகள் எல்லாம் சிறப்பாக, நெல்லை, குமரி மாவட்டங்களில் இன்றும் வழங்குகின்றன.

மண்வெட்டியைக் 'கொட்டு', என்று வழங்குதல் இன்றும் சோழ நாட்டில் உண்டு. களைகளை வெட்டுகின்ற சிறிய மண்வெட்டியைக் 'களைக் கொட்டு' என்றே தஞ்சை மக்கள் வழங்குவர். தன்னிடம் சினப் போரைப் பார்த்து, 'என்ன வெடக்கிற' என்று கேட்பது தஞ்சை, திருச்சி மக்களின் பேச்சு வழக்கம் சயங்கொண்டார், 'கொட்டு' என்பதையும், விடைத்தல், என்பதையும் கையாண்டுள் ளார் அவை சோணாட்டு வழக்காறுகளாம்.

சொத்தை (146) முதுகு (139, 178), உதடு (141, 217) நெற்று (218) தரை (82, 483) ஓட்டைக்கலம் (572) தாம்பூலம் (வெற்றிலைப்பாக்கு) (584) ஏப்பம் (585) உலை- கொதிக்கும் பானைநீர் (547) முண்டித்தல் (மொட்டை யடித்தல்) (468) தெலுங்கர் (469) சிரித்து (172, 229, 307) உங்கள், நங்கள் (226) ஒட்டிரட்டி (231) அடியார்கள் (177) என்ற வழக்காறுகளை முதலில் இலக்கியத்தில் ஏற்றியவர் இவராதல் கூடும்.

உங்கள், நங்கள், அடியார்கள் என்பன பன்மைமேல் பன்மை வந்து வழங்குகின்றன. இவை இடைக்காலத் தமிழின் இயல்புகளைக் காட்டுவன. இதனினும் மேலாகப், பன்மை வினைமுற்றுகளே கார்விகுதி பெற்று இவர் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. ஒழியார்கள் (379) நுழைவார்கள் (453) எறிவர்கள் என்பன வற்றைக் காண்க. காண் என்ற ஏவலே ஒருமைப் பன்மைக்குப் பொது. காண்மின் என்பது முன்னிலைப் பன்மை ஏவல். இதனினும் மேலே போய் 'காண்மின்களோ' (485–491) என்று ஏழு இடங்களில் வழங்குகின்றார்.

ஐகார ஈற்றுச் சொற்கள் விளியில் 'ஆய்' ஈறாக மாறுதல் உண்டு. தங்கை, தங்காய் என வரும். விளியேற்கும் தேவை இல்லாமலேயே மூங்கில் என்ற பொருளை உணர்த்தும் கழை என்ற சொல் கழாய் (488) என வழங்கப்பட்டுள்ளது. இச்சொல், கழை என்பதன் மாற்று வடிவமாகும்.

செய்யுள், பா, பாடல், பாட்டு என்பனவே பழைய சொற்கள். அண்மைக்காலத்தில் இவை வழக்கொழிந்து 'கவிதை' என்பது இடம் பற்றி இருக்கிறது. இச்சொல்லை முதலில் தமிழில் அறிமுகப்படுத்தி, இலக்கிய வழக்கேற்றி யவர் சயங்கொண்டாரே போலும். **'களவழிக் கவிதை பொய்கை உரைசெய'** என்பது அப்புலவரின் வாக்கு. பிறிதோரிடத்தில் 'கவி' என்ற சொல்லையும், கவிவாணர் என்ற சொல்லையும் இவர் ஆளுகிறார். பரிசில் சுமந்தன கவிகள் (272), கவிவாணர், கவி, (277) என்பன இவர் கூற்றுகளாம். "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் திருப்பெயர் மகிழ்ந்த தொன்னூற் **கவிஞர்**" என்பது இவருக்கு முற்பட்ட யாப்பருங்கல விருத்தி வழக்கு (83).

ரகர முதன் மொழிகளைத் தமிழில் வழங்கும் போது இகரமோ, அகரமோ சேர்த்தே வழங்க வேண்டும் என்பது இலக்கண ஆணை. இதற்கு மாருக, ஒரே ஓர் இடத்தில் மட்டும், இராமாயண என்று எழுத வேண்டியதை, 'ராமாயண' என்றே சயங்கொண்டார் குறித்துள்ளார் (472)

திருக்குறள் உரையாசிரியர் 'காலிங்கர்' பெயர் பற்றிப் பல ஆய்வுகள் உண்டு. காலிங்கராயர் என்ற சாதிப் பெயரும், பட்டப்பெயரும் இத்தொடர்பினவே. இவை கலிங்கத்தோடு தொடர்புடையவை என்ற கருத்து உண்டு. இக்கருத்தை உறுதி செய்வது போல காலிங்கரைக் கலிங்கர் என்றே ஓரிடத்தில் (559) சயங்கொண்டார் குறிக்கிருர். இவ்வழக்காறு கலிங்கர் பெயராய்வில் தலைமையானது.[1]

## 43. கலிங்கத்துப்பரணி ஒரு நாடகம் :

இந்நூல் ஒவ்வொரு பகுதியும் நாடகக்கூறுகள் நிரம்பப் பெற்று — நாடகக்காட்சி போல வேட்கை மீதூரத் தொடர்கிறது.

### முதல் காட்சி :

அரண்மனை : அந்தப்புரம்; மகளிர் வாழ் இல்லங்கள் வாசலில் தொடங்குகிறது. வெற்றி வேந்தனின், தளபதியின், படை வீரர்களின் பெருமையைப்பாட மகளிர் ஒருவரை ஒருவர் அழைக்கின்றனர். உறக்கத்தினின்று விழிப்புற்று

1. அறவாணன், காலிங்கர் தென்மொழிக் கட்டுரை காண்க.

‘சுரிகுழல் அசைவுற அசைவுற
துயிலெழும் மயில்என மயில்என
புரிபுர ஒலி எழ ஒலி எழ’

*பனிமொழியார் எழுந்து வருகின்றனர். தூங்கியபோது ஓரழகு; விழித்து எழுந்து வருவது அதனினும் பேர் அழகு.*

*பெண்களைப் பெண்களே அழைத்துக் ‘கேட்டியா செய்தி’ என்று தொடங்குவது போல, சோழ நாட்டார் கலிங்கம் சென்று வென்ற செய்தியைச் சொல்லுவது போல அடுத்துவரும் காட்சிகள் விரிகின்றன.*

**இரண்டாம் காட்சி :**

*வெப்பத்தின் கொடுமையை மொத்தமாகச் சுமந்து கொண்டிருக்கும் நெடும் பாலைவனம், கொடும் பாலைவனம்.*

பொரிந்த காரை, கரிந்த சூரை, புகைந்த வீரை,
எரிந்தவேய்
உரிந்த பாரை, எறிந்தபாலை, உலர்ந்த ஓமை
உதிர்ந்த வெள்ளி, உனங்கு நெல்லி, உணங்கு தும்பை
உலர்ந்த வேல்
பிதிர்ந்த முள்ளி, சிதைந்த வள்ளி, பிளந்த கள்ளி
வற்றல் வாகை வறந்த கூகை மடிந்த தேறு
பொடிந்த வேல்
முற்றல் ஈகை முளிந்த விண்டு, முரிந்த புன்கு
நிரைந்தவே 3 - 2, 3- 4.

*காணுமிடமெல்லாம் வெயிலில் கருகிய மரங்கள், செடிகள், கொடிகள், தரையில் நெருப்பைத் தகடாக அடித்து நீட்டிப் போட்டது போல, கால் வைத்து நடக்க முடியாத அளவுக்குச் சூடு.*

**மூன்றாவது காட்சி:**

பாவலன் தன் கண்'காமரா'வின் மூலம் பாலைவனத்தின் உள்ளே இருக்கும் ஒருகோயிலைக் காட்டுகிறான். அக் கோயிலோ பிணங்களாலும் நிணங்களாலும் எலும்பாலும் நரம்பாலும் கட்டப்பட்டது. கோயில் வாசலிலே தோரணம் கட்டித் தொங்க விட்டிருக்கிறார்கள். என்ன தோரணம்! மகரதோரணமும் அல்ல! மாவிலைத் தோரணமும் அல்ல! குழந்தைகளின் தலைகள் யானையின் காதுகள், மயில் தலைகள் ஆகியவற்றைக் கயிற்றிலே கட்டித் 'தோரண'மாகத் தொங்க விட்டிருக்கின்றனர்.

பலிபீடம் கோயில் நுழைவாயிலில் உள்ளது. வீரர்கள் ஓமத்தீ வளர்த்து, பலிப் பொருள்களை நல்குகின்றனர். ஒரு வீரன், பலியாகத் தன் தலையையே இரத்தம் சொட்டச் சொட்ட அரிந்து தருகிறான்.

அங்குக் காளியின் பணிப்பெண்டிர் போய் வந்துகொண் டிருக்கின்றனர். கோயிலைச் சுற்றிலும் சுடுகாடு..அக்காட்டில் நிணம், தசை, பிணம், நெருப்பு. பேய். சுடுகாடு...அவற்றை இழுக்கும் நரியின் அவல ஊளைகள்.

**நான்காவது காட்சி:**

கவிஞன் நம்மைக் கோவிலுக்குள்ளே அழைத்துச் செல் கிறான். உள்ளே பெருமிதத் தோற்றத்தோடு, காளி அமர்ந் திருக்கிறாள், மலைகள் அவள் விரும்பினால் அம்மனையாகும்; கந்துகம் ஆகும், கழங்கும் ஆகும்; அத்துணைத் தோற்றப் பொலிவு.

**ஐந்தாவது காட்சி :**

காளியைச் சுற்றி ஒரே பேய்களின் கூட்டம். இளைத்து மெலிந்துபோன பெரிய உருவில் நடமாடும் பேய்கள். அவை

கன்னங் கரேர் என்று, உயரமாய், பனைகள் காலும் கையும் முளைத்ததுபோல இருந்தன.

நெடிய மூங்கில்களைக் கண்டால் குழந்தைப் பேய்கள் 'அம்மா அம்மா' என்று கூத்தடிக்குமாம். ஒட்டகங்களைக் கண்டால் தாய்ப் பேய்கள் 'என் பிள்ளையல்லவா' என்று ஒக்கலில் வைத்துக் கொள்ளுமாம்.

இத்தகு பேய்கள், நீண்டகாலமாக உண்ணாததால் வாடி வதங்கி இருப்பதாகக் காளியிடம் முறையிடுகின்றன.

அப்போது குடர் மாலையும் நிணச் சட்டையும் இட்ட ஒரு பேய், காளியின் திருமுன்பு வந்தது. இதுதான் கோயில் நாயக நெடும்பேய் இப்பேய், "தாயே முன்பு ஒருமுறை சுரகுரு என்ற சோழன் தூதாக எமனிடத்திலே செல்லவிட்ட ஒரு வீரன் செல்லுமுன்பு உமக்குப்பலிக்கொடையாகத் தனது தலையை அரிந்து வைத்தான். அத் தலையை இறைச்சி விருப்பம் தாளாத ஒருபேய் எடுத்துத் தின்று விட்டது. இதனைக் கண்டு அப்பேயின் தலையை அரிந்து விட நீ ஆணையிட்டாய். அப்பேய்க்கு உறவான வேறுசில பேய்களும் உனது கோபத்திற்கு அஞ்சி ஓடிப்போயின. இது தேவியின் திருவுள்ளத்திற்குத் தெரிந்ததே. அப்பேய்களில் ஒரு முதுபேய் இங்குத் தேவியிடம் விண்ணப்பம் செய்வதற்கு வந்துள்ளது. இப்பேய் வேறொரு குற்றமும் செய்ததில்லை. தாயின் திருவுள்ளம் எப்படியோ?" என்று பணிந்து கேட்க தேவி 'அம்முது பேயை அழைத்து வருக' என்று ஆணையிடுகிறாள். அப்போது முதுபேய் அஞ்சி அஞ்சி வந்தது. "என் குற்றத்தை மன்னித்து அருள் செய்ய வேண்டும்" என்று தேவியின் காலில் விழுந்து வணங்கி வேண்டுகிறது. காளியும், "அப்பிழை பொறுத்தனம்" என்று பதிலிறுக்கிறாள். பின்பு முதுபேய், "ஆயிரம் இந்திர ஜால வித்தைகள் கற்று வந்துள்ளேன்! அவற்றைத் தேவி கண்டருள

வேண்டும்" என்று வேண்டுகிறது. காளியின் ஒப்புதலுக் கிணங்க தான் கற்றுவந்த இந்திர ஜால வித்தைகளைக் காட்டுகிறது.

**ஆருவது காட்சி:**

காளியும், பசி எடுத்த பேய்களும் காணும்படியாகத் தான் கற்று வந்த இந்திர ஜால வித்தைகளின் மூலம் ஒரு போர்க்களத்தையே காட்டுகிறது முதுபேய்.

> "அற்ற தோள் இவை அலைப்ப பார்! உவை
> அருத நீள் குடர் மிதப்ப பார்!
> இற்ற தாள் நரி இழுப்ப பார்!
> இழுக்கும் மூளையின் வழுக்கல் பார்!
> நிணங்கள் பார்! நிணமணம் கனிந்தன
> நிலங்கள் பார்! நிலம் அடங்கலும்
> பிணங்கள் பார்!

என ஊமைப்படத்திற்கு அருகிருந்து, காட்சி இன்ன, இன்ன என்று விளக்குவதுபோல முதுபேய் விளக்கியது. வெறும் மாயத் தோற்றமாகக் கண்டு கொண்டிருந்த பேய் களுக்குப் பொறுக்க முடியவில்லை. தாம் காண்பது இந்திர ஜாலம் என்பதை மறந்து ஒன்றின்மேல்ஒன்றுவிழுந்தடித்துக் கொண்டு தம் பசிப் பிணியைத் தணிக்க முயன்றன. வெற்று நிலத்தின் மேலும், வெற்று விண்வெளியிலும், பிணங்கள், நிணங்கள் இருப்பதாக எண்ணி வாயாலும் கையாலும் பேய்கள் மேவின; தாவின.

இவ் வெற்று முயற்சிகளிடையே ஒரு சத்தம்கேட்டது. அதுயோகினி மாதர்களின் வெடிச் சிரிப்பொலி. சிரிப்பொலி கேட்டதும் பேய்களுக்குத் தம் தடுமாற்றம் தெரிந்தது. வெட்கிப் போயின. உடன் தேவியிடம் முறையிட்டு இந்திர சால வித்தையை நிறுத்த வேண்டின. வித்தை காட்டிய பேயும் நிறுத்தியது.

பின் தான் இமய மலையில் இருந்தபோது கற்று வந்த சோழர் குல வரலாற்றைக் கூடியிருந்த பேய்களுக்குச் சொல்லத் தொடங்கியது

இராச பாரம்பரியம் என்னும் பகுதி அனைத்தும் பேயின் கூற்ருக அமைந்ததே.

பேய் சொல்லி முடித்தவுடன் காளி அவ்வரலாறு கேட்டுப் பூரித்துப் போனுள்.

"ஐயனை யான் பெற்றெடுத்த அப்பொழுதும்
இப்பொழுதும் ஒத்திருந்ததில்லை"

என்று கூறினுள். அத்துடன், "பேய்களே! நீங்கள் எல்லாம் சோழன் தலைமுறை வரலாற்றைக் கற்றுக்கொள்ளுங்கள்" என்று ஆணையிட்டாள்.

பேய்களுக்குப் பசி கிள்ளியது. வயிற்றைப் பசி கிள்ளும்போது வரலாற்றைக் கேட்க முடியுமா?"

" பதடிகளாய் காற்று அடிப்ப, நிலை நிலாமல்
பறக்கின்ரேம்; பசிக்கு அலந்து பாதி நாக்கும்
உதடுகளில் பாதியும் தின்று ஒறுவாய் ஆனேம்
உனக்கு அடிமை அடியேமை உய்யப் பாராய்!"

என்று தேவியைப் பேய்கள் வேண்டின.

அப்பொழுது இமய மலையிலிருந்து வந்த முதுபேய் கலிங்க நாட்டில் தான் கண்ட தீ நிமித்தங்களை எடுத்துக் கூறுகிறது. இந் நிமித்தங்களின் விளைவை ஜோதிடப் பேய் உணர்த்தியது. கலிங்கப்போர் உண்டு என்றும், பரணிக் கூழ் உண்டு என்றும் அதனுல் பசி தீரும் என்றும் தேவி கூறினுள்.

தொடர்ந்து அவதாரம் என்ற தலைப்பில் குலோத்துங்க சோழனின் பிறப்பு வரலாற்றை எடுத்துக் கூறுகிருர்.

குலோத்துங்கன் பிறப்பு வளர்ப்பு வாழ்வுவரை சொல்லப் படுகிறது. இறுதியில் காஞ்சி மாநகரை நோக்கி அவன் மனைவியர் முதலான பரிவாரத்துடன் வந்து சேரும் காட்சி காட்டப்படுகிறது.

**ஏழாவது காட்சி:**

காளியின் கூற்றாகவே, காஞ்சிபுரக் காட்சி விரிகிறது.

**காஞ்சி அரண்மனையில்** உள்ள சித்திர மண்டபம் சிம்மாசனம்—வெண்கொற்றக் குடை—இருமருங்கும் சாமரம் வீசும் மகளிர்—அருகில் அரச மாதேவியர்—மண்டபத்தில் அமைச்சர், புலவர் கூட்டம்...அமர்ந்திருக்கும் அரசனிடம் திருமந்திர ஓலையார் வணங்கி "வேந்தர் தம் திறையுடன் வெளியே காத்திருக்கின்றனர்" என்கிறாள்.

பார்க்கும் பார்வைக் குறிப்பில் அவர்களை வரச் சொல் கிறான் அரசன். பல தேசத்து அரசர்கள் முண்டியடித்து நெருக்கிக் கொண்டு உள்ளே வருகின்றனர். கையிலும் பையிலும் அரசனுக்குச் செலுத்த அன்பளிப்புகள், கப்பப் பொருள்கள்.

தென்னவர், வில்லவர், கூபகர், சாவகர், சேதிபர் யாதவரே! கன்னடர், பல்லவர், கைதவர், காடவர், காரியர், கோசலரே! கங்கர், கராளர், கவிந்தர், துமிந்தர், கடம்பர், துளும்பர்களே! வங்கர், இலாடர், மராடர், விராடர், மயிந்தர், சயிந்தர்களே! சிங்களர், வங்களர், சேகுணர், சேவணர், சீயணர், ஐயணரே! கொங்கணர், கொங்கர், குலிங்கர், அவந்தியர், குச்சரர், கச்சியரே! வத்தவர், மத்திரர், மாளுவர், மரகதர், மச்சர் மலேச்சுக்களே! குத்தவர், குத்தர், குடக்கர், பிடக்கர், குருக்கர், துருக்கர்களே!

இவ்வாறு திரண்டுவரும் மாமன்னர்கள் அனைவரும் ஆரம், பொற்கலங்கள், யானைகள், ஒட்டகங்கள், பல்பொருள் பெட்டகங்கள், புதுமுத்துக் குவை, மணிகள், மாணிக்கங்கள், பதக்கங்கள் எனப் பல பொருள்களைக் கொண்டுவந்து குவிக்கின்றனர்.

அவற்றைப் பெற்ற சோழன் பேசுவது—விரிவான நன்றியுரை அன்று. "அரசர்களே! அஞ்சாதீர்கள்" என்று சொல்கின்றான். மன்னர்களும், அமைச்சர்களும், தளபதிகளும் நிரம்பி வழிகிற அச்சபையைப் பார்த்து சோழன் ஒன்று கேட்கிறான். **'வரி கொடுக்காத மன்னர்கள் யாரேனும் உளரா?'**

திருமந்திர ஓலை, பதில் சொல்கிறான். **'வடகலிங்க மன்னர் இரண்டுமுறையாகத் திறை செலுத்தவில்லை"**

அந்த அளவில் அந்த அரச சபையே அச்சத்தில் நடுங்குகிறது. மாமன்னர் என்ன சொல்வாரோ என்று குழுமி இருக்கும் அரசர்கள் உயிர் குலைகிறார்கள்.

சோழப் பேரரசனின் முகத்தில் ஒரு புன்முறுவல்! அவ்வளவுதான். கோபமோ தாபமோ அவன் முகத்தில் இரேகையிடவில்லை.

அந்த அச்ச அமைதியைக் கிழித்துக் கொண்டு விசயதரன் வீர ஆணை பிறக்கின்றது.

**"எளியன்! என்றிடினும் வலிகுன்று; அரணம்;**

(அவை) இடிய, நம்படை ஓர் சென்று

**அளி அலம்பு மத மலைகள் கொண்டு அணைமின்**

**அவனையும் கொணர் மின்"**

சோழன் கூறிய அடுத்த கணத்தில் கருணாகரத் தொண்டைமான் எழுகிறான். "ஏழு கலிங்கம் அவை எறிவன்! விடை

*கொடுக்க'' என வீறு கொண்டு வேண்டுகின்றான். சோழ மன்னன் பேசவில்லை. அவன் கைகள் விடை கொடுக்கின்றன.*

**எட்டாவது காட்சி:**

*சோழ மகாராசனின் கடற்படை புறப்படுகின்றது.*

**எழுந்தது சேனை! எழலும் இரிந்தது பாரின் முதுகு;**
**விழுந்தன கானும் மலையும்! வெறுந்தரை ஆன நதிகள்**
**அதிர்ந்தன நாலு திசைகள்! அடங்கின ஏழுகடல்கள்**
**பிதிர்ந்தன மலைகள்! பிறந்தது தூளிப்படலம் 11-47-48**

*பார்க்கும் இடமெல்லாம் படை! கடல் போல, மலை போலத் திரண்டு செல்லும் இலட்சக் கணக்கான தேர், யானை, குதிரை, காலாட்படைகளின் சுமை தாங்க முடிவதா? பூமியின் முதுகே வளைந்து விடுகிறது. காடுகளின் ஊடே படைகள் கடந்த பின் காடுகள் சமவெளி ஆகிவிடுகின்றன. மலைகள் சமமட்டம் ஆகி விடுகின்றன. ஆறுகளில் நீர்வற்றி விடுகின்றது. 'பார் சிறுத்தலின் படை பெருத்ததோ? படை பெருத்தலின் பார் சிறுத்ததோ!' 11-37*

**ஒன்பதாவது காட்சி: கலிங்க நாடு—அரண்மனை**

*சோழனின் படை, கடல் போல் வந்தது. கடல் வந்தால் எங்கே புகலிடம்? எங்கே இனி அரண்? யாரே அதிபதி இங்கு? 'இடிகின்றன மதில்! எழுகின்றன புகை! பொழில் எல்லாம் மடிகின்றன! குடி கெடுகின்றன!'' என்று கலிங்க மன்னனிடம் மக்கள் முறையிடுகின்றனர். வட கலிங்கனின் அமைச்சரவை ஆலோசனையில் மூழ்குகின்றது. கலிங்க மன்னன் கோபத்தினால் வெய்து உயிர்த்து கை புடைத்து வியர்த்து ''மலர்க்கவிகை அபயர்க்கு அன்றி அவனது படைக்கும் நான் எளியவனோ?' என்று சீறுகிறான்.*

*எதிரிருந்த அமைச்சன் எழுந்து, "நான் ஒன்று கூறுவன் கேள்" என்று குலோத்துக்க சோழனின் வெற்றிப் பட்டியலை விவரிக்கின்றான். அரசன் கேட்கவில்லை. தன் படைகளுக்கு ஆணையிடுகிறான்.*

**பண்ணுக வயக்களிறு! பண்ணுக வயப்புரவி!**
**பண்ணுக கணிப்பில் பல தேர்!**
**நண்ணுக படைச் செருநர் நண்ணுக செருக்களம்** 11-{3

## பத்தாவது காட்சி: கலிங்க நாட்டுப் போர்க்களம்

*கலிங்கப் படைக்கும், சோழப் படைக்கும் இடையே நடந்த போர்! கடும் போர்! கொடும் போர்! போர் முடிகிறது. கலிங்கர் தோற்கின்றனர். குருதி ஆறாக ஓடுகின்றது! குடல்கள் ஆயிரக்கணக்கில் மிதக்கின்றன. இரத்த ஆற்றின் கரை போல யானைகளின் உடலங்கள்! குதிரையின் சடலங்கள்! அறுபட்ட கைகள்! கால்கள்! துதிக்கைகள்!*

*கருணாகரன், யானை மீதமர்ந்து அங்கும் இங்கும் போரிடுகிறான்.*

*கலிங்க வீரர்கள் மாறு வேடங்களில் தப்புகிறார்கள். குதிரைகள், தேர், ஒட்டகம், நிதிக்குவை, மகளிர் என்பன போன்ற பொருள்களைக் கவர்ந்து கொண்டு சோழப் படை திரும்புகிறது.*

## பதினோராவது காட்சி: காஞ்சி அரண்மனை

**கடற் கலிங்கம் எரிந்து சயத்தம்பம் நாட்டி**
**கடகரியும் குவிதனமும் கவர்ந்து"**

*வந்த கருணாகரன் அவற்றைச் சோழனின் கால்களில் வைத்து வணங்குகிறான்.*

## பன்னிரண்டாவது காட்சி: தேவியும் பேய்களும்

களத்தையும் களக்காட்சியையும் பேய் காட்டக்கண்டு வருகிறாள் தேவி. அப்போது தேவி சொல்கிறாள். "போர்க் களத்தை முற்றும் காட்டுதல் என்பது முடியாது. நீங்கள் விரைவில் இரத்த ஆற்றில் குளித்து விட்டு கூழ்சமைத் திடுங்கள்" என்று ஆணையிடுகிறாள். பேய்கள் கூழ் சமைக் கின்றன. சமைத்த கூழை எல்லார்க்கும் பங்கிட்டு வயிறு முட்ட உண்கின்றன. உண்ட பின் எல்லாம் ஆடுகின்றன. சோழனை வாழ்த்திப் பாடிக் கொண்டே ஆடுகின்றன.

இவ்வளவில் கலிங்கத்துப் பரணி நாடகம் முற்றுப் பெறுகிறது.

கலிங்கத்துப் பரணியின் அமைப்பையும் கதை கொண்டு செல்லும் முறையையும் ஆராயும்போது இதுவும் குறவஞ் சியைப்போன்று, பள்ளுவைப்போன்று ஒரு நாடகமோ என்று கருத வேண்டியிருக்கிறது.

## இவ்வாறு கருதுவதற்குக் காரணங்கள்:

1. கலிங்கத்துப் பரணி முழுவதும் கடை திறப்பு வழி யாக அறிமுகமாகி அதுவே ஒரு முகாந்தரமாகி அதிலிருந்து மேற்கண்ட பதினொரு காட்சிகளும் நாடகப் பின்னோக்கு (Play Back) முறையில் விரிகின்றன.

2. ஆங்காங்கே தெளிவான நாடக உரையாடல் சாயல்கள் இடம் பெற்றுள்ளன. (அ) இந்திர சாலப் பேய் வருதல், உரையாடுதல், (ஆ) சோழ அரசனின் ராசசபை நிகழ்ச்சி (இ) கலிங்கவேந்தன் —அமைச்சன் உரையாடல், (ஈ) தேவி, பேய் உரையாடல்கள்.

3. மற்றைய இலக்கியங்களைப் போலப் பாவியத்தின் இடை இடையே கவிக்கூற்று என்பதே இல்லை, இது

நாடக இலக்கியத்தின் உயிர்ப்பண்பு. நாடகத்தின் பாத்திரங்கள் பேசுமே தவிர, நாடக ஆசிரியன் பேசமாட்டான். கலிங்கத்துப் பரணியிலும் புற உறுப்பாகக் கடவுள் வாழ்த்து அமைகிறது. பாடுவாம், 3—1, விளம்புவாம் 4—1, விளம்பல் செய்வாம் 5—1, இனிப்பகர்வாம் 6—1 எனக்கவிக் கூற்ருக வருவன, படலங்களின் இணைப்புக்காகவும் இடப் பொருத்தத்திற்காகவும், காட்சி அமைய வேண்டியகருத்துக் காகவுமே பாடப்பட்டுள்ளன என்று கொள்ளல் வேண்டும்.

4. கூழ் அடுதலில் உள்ள இறுதிப் பகுதித் தாழிசை (12—89) "இனைய இனைய நாடகங்கள் முடிந்த பின்" என்று முடிகிறது. இப்பகுதி பேய்களின் கூற்று முடிவை அறிவிப்பதாயினும் அக்குறிப்பு கலிங்கத்துப் பரணி நாடகம் முடிந்தது என்று அறிவிக்கிறதோ என்று கருத வேண்டியுள்ளது.

5. நாடகப் பயனும் இலக்கியத் தலைமை குலோத்துங்கனுக்கு இருப்பதும் கருதித்தான். கருணாகரனைப் 'போர் பாடியது' என்ற பதினோராம் படலத்திற்குப் பின் விட்டு விட்டார். அதற்குப் பிறகு 124 தாழிசைகள் இடம் பெற்றுள்ளன. கலிங்க வெற்றிப் பொருள்கள் சோழனிடம் நல்கும்போது சோழன் பதிலுக்கு எதுவும் பேசுவதாகக் கவிஞர் காட்டவில்லை. காரணம் கருணாகரனைக் களத்திற்கு அனுப்பும் போது கலிங்க மன்னனையும் சிறை செய்து வருமாறு (11—29) "அவனையும் கொணர்மின்" என்று பணிக்கிருன். ஆனல் கருணாகரன் மன்னன் ஆணைக்குத்தக, கலிங்க அரசனைச் சிறை செய்யாமைக்காக அரசன் பூணும் மௌனமாம்!

## 43. சயங்கொண்டாரின் பாத்திறன்

'நான் கண்டபடைந்தபோது இந்நூலில் இடம் பெற்றுள்ள,

''எடும் எடும் எடும் என எடுத்தவேல்
இகலொலி கடலொலி இகக்கவே
விடு விடு விடு பரி கரிக்குழாம்
விடும் விடும் எனும் ஒலி மிகைக்கவே'' (404)

என்பது முதலிய சில தாழிசைகளை முடுக்காகச் சில நிமிடம் படிப்பேன். அதனால் களைப்பு தீர்ந்து விடும்' என்பர் **மோசூர் கந்தசாமி முதலியார்.** அத்துணையளவு வீறு படைத்தது இப்பரணி. இந்நூல் ஒன்றாலேயே சயங் கொண்டார் பரணிக்கோர் செயங் கொண்டார்'' எனப் பெயர் பெற்றுவிட்டார். 'தமிழ்த் தெய்வப் பரணி' என ஒட்டக் கூத்தரால் புகழுரையும் வாங்கி விட்டார். 'பாடல் பெரும் பரணி தேடற்கருங் கவி கவிச்சக்கரவர்த்தி பரவ' என்பது குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில், சயங் கொண்டாருடைய கவித்திறனைப் பெரிதும் உருகிப் போற்றுவர் ஒட்டக் கூத்தர். தோன்றிய இருபதாவது ஆண்டில், கலிங்கத்துப் பரணி பிறி தொரு கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தரால் பாராட்டப்படு கிறது என்றால் ஏன்? அதன் சிறப்புத்தான் அனைத்திற்கும் காரணம். இவருக்குப் பின்வந்த உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கலிங்கத்துப் பரணி யிலிருந்து மூன்று தாழிசைகளை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார். ஒரே நூலால் பெரும்பேர் பெற்ற இவர் 'கவிச்சக்ரவர்த்தி' என்ற தனிப்பெயர் பெற்றுள்ளார். இத்துணைப் பெயர் சயங்கொண்டார் பெறுதற்குக் காரணம் என்ன? அவரது கவிதையும், கவிதைக்காக **எடுத்துக் கொண்ட கருப்பொருளும், கருப் பொருளை நடத்திச் சென்ற முறையுந்தான் முதன்மைக் கார ணங்கள். போர்க்களத்தின் கொடுமைகள் இவருக்கு முன்னும் பாடப்பட்டுள்ளன. ஆனால் இவர் அளவிற்கு யாரும் பாடவில்லை. காதல் பாக்கள் இவருக்கு முன்பும்** இயற்றப் பட்டன. **ஆனால் இவர் வடிக்கும் அளவிற்கு**

யாரும் காதற் காட்சிகளை வடித்ததில்லை. தமிழிலக்கிய வரலாற்றில் நகைச்சுவை ததும்பும் பாடல்கள் மிகக்குறைவே. அக்குறையை அகற்றி நிறைவு செய்த பெருமை இப்பாவலருக்குண்டு. இவருக்கு முன்பிருந்தோர், பேய்களைக் குறித்துள்ளனர். ஆனால் இவரைப் போல் யார்க்கும் அங்கம் அங்கமாகப் படிப்போர் பதறும்படியாகப் படைக்கவில்லை.

கதையைக் கவர்ச்சியான முறையில் காளி, பேய்கள் கூற்றாக மாற்றி மாற்றி அவர்கள் வாயால் சொல்ல வைத்த உத்தி இவர் வெற்றிக்கு முதற்காரணம்.

பாடல்களின் சிரிப்பும், அவலமும், காதலும் மோதலும், வீரமும் கோழைத்தனமும, வியப்பும், சினப்பும் மிகச் சுவையாக இடம் பெற்றுள்ளன. இவற்றுள், வீரமும், அச்சமும். நகையும், காதலும் இவரைப் போல இவர் காலம் வரை வேறு யாரும் பாடவில்லை என்று அடித்துச் சொல்லலாம்.

## 44: வீரம்:

மேற்கு மண்டல நாடுகளில் இரத்தக்கறை படிந்த கைகளோடு, நூற்றுக் கணக்கான கவிதைகளைப் படைத்திருக்கிறார்கள் அந்நாட்டுக் கவிஞர்கள். போர் வெறியூட்டும் கவிதைகளும், போர் நெறிகாட்டும் கவிதைகளும் அந்தக் குளங்களில் பூத்திருக்கின்றன. ஹோமர் என்ற பெருங் கவிஞர் 'டிராயில்' நடந்த போரை மையமாக வைத்துத் தன் இதிகாசத்தையே வரைந்தார். சேக்ஸ்பியர் போர்ப் பாட்டுகளைத் தனித்து எழுதவில்லை. எனினும் அவரது நாடகங்களான 'ஐந்தாம் ஹென்றி வேந்தன்', 'சிம்பலின்' 'குறியோலான்ஸ்', 'மாக்பத்' 'ஒத்தெல்லோ' ஆகியவற்றுள் போரின் கோரக் காட்சிகளையும் அதன் கொடுமைகளையும் பாவடிவில் படைத்து அளித்திருக்கிறார்.

"போர் முரசங்களின் கோர ஒலி என் பாட்டுக்களில் வருவதை நான் வெறுக்கிறேன்" என்கிறார் கவிஞர் கூப்பர்.

''அபூவின் ஆதம்'' என்னும் கவிதைக் கதை மூலம் போர் அமைதியைக் காட்டுகிறார் கவிஞர் ஹண்ட்.

ஆனால் இந்தக் கவிஞர்களெல்லாம் போர்க்களப் பார்வையாளர்களாய் இருந்து எழுதினவர்களே தவிர, பங்குதாரர்களாக இருந்து எழுதினோர் அல்லர். முதல் உலகப் பெரும்போர் போர்க்கள கவிதாவீதியில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது. கவிஞர்களே களவீரர்களாகவும், களவீரர்களே கவிஞர்களாகவும் தொண்டாற்றியிருக்கின்றனர்.

இவர்களுள் இராபர்ட் புரூக் என்பவர் குறிப்பிடத் தக்கவர். ஓயாமல் பயணம் செய்வதிலும் படிப்பதிலும் காலம் கழித்தவர். போர்க்களத்தில் இருக்கும்பொழுதே நச்சுத் தேள் கொட்டி இறந்துவிட்டார். இறப்புக்குப் பின் இவரது போர்ப் பாட்டுக்கள் வெளிவந்தன. 1914இல் வெளிவந்த இந்நூல் மட்டும் இருபதாயிரம் படிகள் விற்பனையாயிற்றாம். இந்நூலுக்கு முன்னுரை எழுதிய வின்ஸ்டன் சர்ச்சில் ''இங்கிலாந்தில் மதிக்கத்தக்க ஒரு மாவீரன் பாட்டு'' என எழுதியுள்ளார்.

''நான்—

ஆங்கில மண்ணிற்கு அப்பால் ஆவி துறந்து விடுவேனாயானால் தாயகத்து மண் புழுதியைக் கொண்டு வாருங்கள்; தாயகத்துப் பூக்களை நுகரவிடுங்கள், தாயகத்து வீதிகளில் எடுத்துச் செல்லுங்கள்; தாயகத்துக் காற்றை வீசவிடுங்கள்; தாயகத்து ஆற்றில் கரைய விடுங்கள்; தாயகத்து சூரியனை வாழ்த்தவிடுங்கள்'' என்று இன்னொரு போர்க்களக் கவிஞன் ஷஸுன் பாடுகிறான். 'அழகே! என் அருகே இரு' என்று இயற்கையைப் புனைய வேண்டிய பாவலன் போர்க்களக் கொடுமைகளைச் சித்திரிக்கிறான். இக்கட்டான போர்ச் சூழலில், காலை வேளையில், தானைத் தலைவனிடம் இருந்து

இறுதி விடைபெறும் காட்சியை அவலம் தொனிக்க எழுதி இருக்கிறான். "போர்க்களத்தில் என் அருகு இருந்த ஒருவன்" எனும் கவிதையில் போர் நடந்த காலத்தில் தானும், தன் உடனிருந்த அவனும் சேர்ந்து நிகழ்த்திய வீரச் செயல்களை நினைவு கூர்கிறான்.

'விழுப்புண் படாத நாட்களெல்லாம் வீணான நாட்கள்' என்று கலங்கும் வீரக் கலக்கத்தை இப்பாட்டில் பார்க்கிறோம்.

வில்ப்ரட் ஓவன் ஆங்கில இலக்கிய உலகில் புகழ் பெற்ற இன்னொரு களக் கவிஞன். குழுத் தளபதியாகப் பணியாற்றிய தீரன் இவன். "அமர்க்களத்தில் அழுகைக்கு இடமில்லை" என்று நூல் முன்னுரை ஒன்றில் ஓவன் எழுதுகிறான். நேரில் போரில் பங்கெடுத்துக் கொண்ட ஓவனுக்கு களத்தின் அவல அனுபவங்களெல்லாம் நினைவு முட்களாக இருந்து உறுத்தின. "போர் வேதனைக்கு உரியது. போர்க் கவிதைகள் இந்த வேதனை வயிற்றில் பிறப்பெடுக்கின்றன" என்று எழுதும் ஓவன், போர் வெறிக்கு எதிராகப் புதுநெறி காட்டுகின்றான்.

யுத்தக் களத்தில் இரத்தக் குளங்களை ஓவன் வடித்துக் காட்டும்போது படிக்கும் இதயங்கள் அழும்; கேட்கும் இதயங்கள் அழும். ஆனால் ஓவன் அழமாட்டான். "சாவின் வெறுமை உயரத்தினின்று என் ஆன்மா கீழ் நோக்கிப் பார்க்கிறது" என்ற அவனது கவிதை வரிகள் மறக்க முடியாதவை.

மேனாட்டு இலக்கிய உலகின் ஒரு பகுதி போர் இலக்கியம். தமிழ் இலக்கிய உலகில் முழுப்பகுதியே போர் தான். தமிழ் இலக்கியத்தை அகம், புறம் என இரண்டாகப் பகிர்ந்தால், புறம் முழுவதும் போர்ப்பாட்டுக்கள் தாம்.

தொல்காப்பியம் தொடங்கி, "தோளை நிமிர்த்து; மீசை முறுக்கு" எனக் கூறும் பாரதிதாசன் வரை போர்ப் பாட்டுக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

வண்டிச் சக்கரத்தின் குடத்தை ஆரங்கள் குத்திக் கொண்டிருப்பது போல வீரனின் மேனி முழுவதும் அம்பும் ஈட்டிகளும் குத்திக் கொண்டிருக்கும் காட்சியைத் தொல்காப்பியர் காட்டுகிறார்.

புறத்திணையியல் முழுவதிலும் போர் நெறியும் போர் வெறியும் காட்டப்படுகின்றன. கொடும் போர்க்களம் ஒன்றில் ஆயிரக் கணக்கான வீரர்கள் குத்திக் கொல்லப்படுகிறார்கள். என்றாலும் இன்னும் சில வீரர்கள் ஓயவில்லை; மாயவில்லை. தரையில் விழுந்து கிடக்கும் பிணங்களின் மேல் மிதித்து, குதித்து போர் செய்கிறார்கள். அவ்வீரர்களின் கால் முழுவதும் சதைச் சேறு; இரத்தம். அவர்கள் காலிலே அணிந்திருக்கின்ற கருப்புக் காப்புகள் தசைச் சேற்றில் அமிழ்ந்து சிவப்புக் காப்புகள் ஆகிவிடுகின்றன. 'நிணம் பொதி கழலோடு நிலம் சேர்ந்தனர்' என்று பாடுகிறது மறம்பாடும் புறநானூறு.

போரையே மூலப் பொருளாகக் கொண்டு இலக்கியங்கள் தமிழில் எழுந்துள்ளன· பொய்கையார் பாடிய களவழி நாற்பது இப்பேர்ப்பட்டதுதான். போர்க்களக் காட்சிகளை இரத்தம் சொட்டச் சொட்ட வருணிக்கிறது, இக் கவிதை நூல். நீண்ட துதிக்கையை விளைக்குறி போல் சுழற்றி வளைத்துப்பிளிறிக்கொண்டு ஓடிவருகிறது ஒரு யானை. ஈட்டி முனை போன்ற அதனது தந்தமும் இரும்புத்தூண் போன்ற அதனது கால்களும் வீரனை அச்சுறுத்திவிடவில்லை. கையில் வைத்திருந்த கொடு வாளால் பலம் கொண்ட மட்டும் தூக்கி வெட்டி விடுகிறான். துதிக்கை குளிர்காலப் பாம்புபோலச் சுருண்டு கீழே விழுந்து விடுகிறது. சிவப்புப்

பவளங்களைக் கருப்புப் பையில் போட்டுக் கட்டிவிட்டு, மேலே தூக்கி, அவிழ்த்துவிட்டால் எப்படி இருக்கும்? அது போல யானையின் வெட்டு வாயினின்று இரத்தம் கொட்டும் காட்சி இருக்கிறதாம். இந்த இரத்தத்தில் மூழ்கி சிலிர்த்துக் குளிக்கின்றன காக்கைகள். கருப்புக் காக்கைகள் சிவப்புக் காக்கைகளாக மாறி விடுகின்றன என்று காட்டுகிறார் பொய்கையார்.

போர்மறம் இலக்கியத்தின் **ஒரு கூறாகத் தொடங்கிப் பொய்கையார் காலத்தில் போரே இலக்கியமாகப் பொலிகிறது**. இவருக்குப் பின்னால் போரைப் பற்றிய தனி இலக்கிய மரபே உருவாகி விடுகிறது. பரணி இலக்கியம் இவ்வாறு உருவானதுதான். கள நிகழ்ச்சி உண்மைகளைக் கற்பனைகளோடு சேர்த்துக் குழைத்துப் பரணிக் கவிஞர்கள் பா வடிக்கிறார்கள். கலிங்கத்துப் பரணியின் பாட்டுத் தலைமை யாருக்கு இருந்தாலும்—உண்மையில் அது காட்டும் பெருந் தலைமை கவித் தலைமைதான்.

களத்திலே வீரன்முன் பகைவீரன் எதிர்க்கிறான். இருவரும் பொருகின்றனர். எப்படி? மனைவி விட்டு வந்தோமே! குழந்தைகளை விட்டு வந்தோமே! உற்றாரைப் பெற்றாரைப் பிரிந்து வந்தோமே என்றா? தன் காதல் மனைவியரோடு அன்பால் தழுவி அணைப்பாரே அந்தப் பொழுது இந்தப் பொழுது என்று கருதி "இளமுலை எதிர்பொரும் அப்பொழுது இப்பொழுது" என்று எண்ணிப் பொருவராம்.

> **"மங்கை ஒருத்தி தரும் சுகமும் எம்**
> **மாத்தமிழுக்கு ஈடில்லை கண்டாய்"**

என்பது பாரதிதாசனின் பாட்டு. 'மங்கை ஒருத்தி தரும் சுகமும், என்றன் மாகளத்திற்கு ஈடில்லை கண்டாய்' என்பது சயங்கொண்டானின் பாட்டு.

எத்தனையோ வீரக்காட்சிகள். 'போர் பாடியதில்' உள்ள தாழிசைகள் அனைத்தும் வீரம் பேசுவனவே. அவற்றுள் ஒன்றே ஒன்று.

யானை மீது இருந்த வீரன் ஒருவனின் தொடைகள் இரண்டையும், பகைவீரன் வெட்டிவிட்டான். தொடைகள் முன்னே விழ, பின்னே, யானை மீது இருந்து போர் செய்து அவனும் விழுந்துவிட்டான். எனினும் உயிர் இன்னும் இருந்தது; ஊசலாடிக் கொண்டிருந்தது. அப்போது ஒரு யானை வந்து தன் துதிக்கையால் இவனைச் சுருட்ட நினைத்தது. அவ்வளவுதான். தன் மருங்கிருந்த ஒரு தொடையை அந்த யானையின் துதிக்கை நசுங்கும்படி தூக்கி எறிந்தானும். யானை ஓடிவிட்டது. மற்றொரு தொடையை வைத்திருந்தானும். எதற்கு? இனிவரும் யானையை அடிப்பதற்காக!

இருதொடை அற்றிருக்கும் மறவர்கள்
எதிர்பொரு கைக்களிற்றின் வலிகெட
ஒரு தொடையைச் சுழற்றி எறிவார்கள்
ஒரு தொடையை இட்டுவைப்பர், எறியவே. (11-127)

ஒரு வீரனின் தலை துண்டிக்கப்பட்டது. துண்டிக்கப் பட்ட வேகத்தில், தலை எங்கோ போய் விழுந்து துடித்துக் கொண்டிருந்தது. உடலம் மட்டும் வெட்டிய இடத்திலேயே விழுந்தது. போர் முடிந்த நிலையில் களம் சென்ற கணவனைக் காணோமே என்று தேடிக் கொண்டு வந்தாள் அவன் மனைவி. கணவனின் தலை மட்டுமே கிடைத்தது. அதை மட்டுமே அடையாளம் அறிய முடிந்தது போலும்! தலைவன் தலையை மார்பிலே அணைத்துக் கொண்டு அவள் கதறுகிருள் பாருங்கள்!

பொருதடக்கை வாள் எங்கே? மணிமார்பு எங்கே?
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத

பருவயிரத் தோள் எங்கே? எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்

*வீரத்தையும் அவலத்தையும் ஒருங்கே விளக்கும் தாழிசை இது! இதுபோல இன்னும் பல!*

*பரணி காட்டும் பாலை, நினைத்துப் பார்க்கவே நடுக்கம் தருவது. காடுபாடியது எனும் தலைப்பிலுள்ள கவிதைகள் பாலை நிலம் பற்றிய அருமையான படப்பிடிப்புகள் எனலாம். நெருப்பை அடித்து நீட்டித் தகடாக்கி பூமியிலே பரத்தி இருக்கிறார்களாம்! அப்படி இருக்கிறது தரை! (3—8) செந் நெருப்பினைத் தகடு செய்து பார் செய்தது ஒக்கும் அச்செந் தரைப் பரப்பு! அப்பரப்பில் உள்ள ஒரே ஒரு மணலை எடுத்து இந்து மகா சமுத்திரத்தில் போட்டால் கடல்நீர் முற்றும் வற்றி விடுமாம். கடல் தண்ணீர் அனைத்தையும் சுண்டி ஈர்த்து விடுகிற அளவிற்கு ஒரு மணலுக்கு அவ்வளவு வெப்பம்! வறட்சி! இத்தகு மணல் இருப்பது தெரியாமல் தான் இலங்கைக்கு இராமன் போனபோது, குரங்குகள், கடல்மேலே அணை கட்டின. இது தெரிந்திருந்தால், ஒரு மணலை எடுத்து அந்தக் கடலின்மீது போட்டிருந்தால், கடல் நீரெல்லாம் சுவறிப் போய் இருக்கும். இராமனின் குரங்குச் சேனை நடந்தே போயிருக்கும். இப்படிப் பேசுகிறது ஒரு கண்ணி.*

அணி கொண்ட குரங்கு இனங்கள்!
அலைகடலுக்கு அப்பாலை
மணல் ஒன்று காணுமல்
வரை எடுத்து மயங்கினவே (3-22)

*சயங் கொண்டார் காட்டும் கோயிலும் அதனமைப்பும் அக்கோயிலில் உள்ள பேய்களும் படிப்போர் நெஞ்சத்தைப் பதைக்கச் செய்யும் திறன் வாய்ந்தவை.*

*கோயிலின் வாசலில் இரத்த நீர் தெளித்து குதிரை வாலால் பெருக்குகிறுர்கள். பெருக்கித் தூய்மை செய்த அவ்விடத்தில் பூக்களைத் தெளித்துள்ளார்கள்! என்ன பூ? இறந்த வீரர்களின் தசைகள்தாம் பூக்கள். (4—12)*

*ஒரு வீரன் தன் விலா எலும்பைத் தானே பிடுங்கி எடுத்து, எரியும் ஓமத்தீக்கு விறகாகப் போடுகிறுன். அப்போது கொட்டுகிற குருதியை நெய்யாக வார்க்கிறுனும் (14—14). பிறிதொரு வீரன் தன் தலையைத் தானே வெட்டித் தேவிக்குப் பலியிடுகிறுன். ஒரு கை வெட்ட, மறுகை தலையை வாங்கி காளிக்குக் காணிக்கை யாக்குகிறதாம்.*

"அடிக்கழுத்தின் உடன்சிரத்தை அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின் கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ"

*இத்தகு உயிர்ப்பலிகள் உண்மை என்பதைக் கல் வெட்டுகளும் சிற்பங்களும் உறுதி செய்கின்றன. தன் தலையைத் தானே அரிந்து நல்கும் காட்சி ஒன்றைச் சிற்ப மாகச் செதுக்கியுள்ளனர் சிற்பிகள். மாமல்லபுரம், பகீரதன் தவம்—சிற்பத்திற்குச் சற்றுப் பின்னுள்ள சிறு கோயிலில் இத்தகு சிற்பம் இன்றும் உள்ளது. நெல்லூர் மாவட்டம் கரூர் என்ற இடத்தில் கம்பவருமன் காலத்துக் கல்வெட்டுப் பின் வருமாறு (I 68):*

'ஸ்ரீ கம்ப வருமர்க்கு யாண்டு இருபதாவது பட்டை போத்தனுக்கு ஒக்கொண்ட நாகன் ஒக்கந்திந்தன் பட்டை போத்தன், மேதவம் புரிந்ததென்று படாரிக்கு நவகண்டங் கொடுத்து குன்றகத் தலை அறுத்து பிடரிசை மேல் வைத் தானுக்கு, திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது.'

இக்கல் வெட்டிற்குப் பக்கத்தில் வீரன் ஒருவன் தன் தலையைத் தானே அரிந்து கையிலே தாங்கி நிற்பது போல் சிற்பமும் உள்ளது.

## 45. அச்சமூட்டும் பேய்க் காட்சிகள்:

பேய்களின் தோற்றத்தை மனத்தளவில் கற்பித்துப் பார்த்தால் பேரச்சமே வரும். பெரிய கரிய பனைமரத்திற்குக் காலும் கையும் முளைத்தது போல — ஒவ்வொரு பேயும் இருந்தன. அவற்றின் மூக்கிலேயுள்ள முட மயிர்கள் பெரும் பாம்புகள் தொங்குவது போலத் தொங்குமாம். அவற்றின் காதுகள்தாம் ஆந்தைகளின் வெளவால்களின் குடியிருப்புகள். பற்கள் மண்வெட்டியின் இலைகளைக் கோத்ததுபோல இருக்குமாம். அவற்றின் உந்தியில் (கொப்பூழ்) பாம்புகள், உடும்புகள் குடியிருக்குமாம். 'இழந்த சொர்க்கத்தில்' சாத்தனின் தோழர்களை மில்டன் வருணிக்கிறதைவிட இவை கொடூரமாக இருக்கின்றன. சேக்ஸ்பியர் நாடகங்களில் காட்டப்படும் பேய்களைவிட சயங்கொண்டார் காட்டும் பேய்த் தோற்றம் மிகுந்த பேரச்சம் ஊட்டுவது.

## களக் காட்சிகள் :

இந்திரசாலம், காளிக்கு கூளி கூறியது, போர்பாடியது, களம் பாடியது எனும் பகுதிகளில் படைக்கப் பெற்றுள்ள படை எழுச்சியும், போர்க்கள நிகழ்ச்சிகளும் அக்காலத்துப் போர்க் கிளர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றவை. சாவுக்கு அஞ்சாமல், வாழ்விற்கு அஞ்சாமல் நாட்டு மானத்திற்காகப் போரிடும் வீரர்களின் காட்சி, களங்களை நேராகப் பார்க்காத நமக்கும் பேரச்சம் தருகின்றவை.

46. நகை :

தமிழில் பிற நூல்களுக்கு இல்லாத தனிப்பெரும் சிறப்பு இது. கலிங்கத்துப் பரணியில் இடம் பெற்றுள்ள அளவு நகைச்சுவை உணர்ச்சி வேறு பிற முற்கால, இடைக் கால இலக்கியங்களில் இடம் பெறவில்லை.

பேய்களைப் பாடியது, இந்திரசாலம், கூழ் அடுதல் என்ற மூன்று பகுதிகளிலும் நகைப்பை உண்டாக்கும் தாழிசைகள் பல இடம் பெற்றுள்ளன.

1. பேய்கள் மிகப் பெரியவை பருத்தும் உயர்ந்தும் இருக்கும். நிறமோ அட்டைக் கறுப்பு. உயரமோ தென்னை மரம்! பனைமரம்! குட்டிப்பேய்-இராப் போதில் அம்மா எங்கு என்று தெரியாமல் தடுமாறுகிறது. அப்போது கோயிலுக்கு எதிரே பாலைவனத்தில் ஒரு மூங்கில் புதர். அம் மூங்கில் புதர் வான் முட்ட வளர்ந்திருக்கிறது. தன் அம்மாவைத் தேடித் தடுமாறிய குட்டிப்பேய் மூங்கில் புதரை அம்மா என்று எண்ணி மகிழ்ந்து கட்டிக் கொள்கின்றதாம்.

தன் குட்டியைக் காணுமல் இரவில் தேடுகிறது ஒரு தாய்ப் பேய். எங்கும் காணவில்லை. இறுதியில் பாலையில் போய்க்கொண்டிருந்த ஒட்டகத்தைத் தன் குட்டி என்று கருதி எடுத்து வைத்துக் கொள்கிறதாம் தாய்ப் பேய்.

**அட்டம் இட்ட நெடுங்கழை காணில், 'என்**
**அன்னை! அன்னை!' என்று ஆலும் குழவிய**
**ஒட்டல் ஒட்டகம் காணில் 'என் பிள்ளையை**
**ஒக்கும்! ஒக்கும்' என்று ஒக்கலை கொள்வன.**

2. இமயமலையிலிருந்து வந்த முதுபேய் இந்திரசால வித்தை செய்து காட்டிற்று. காளி முன்பிருந்த மற்ற பேய்களும் வித்தை மூலம் காட்டப்படும் காட்சியைப் பார்த்தன. வித்தையினாலே சோழன், முன்பு

போர்க்களத்தில் கொன்றழித்த நால்வகைச் சேனைகளின் குறைத்தலைப் பிணங்களும், அற்ற தோள்களும், குடர் களும், தாள்களும், இழுக்கு மூளைகளும், நிணங்களும், பிண மலைகளும், உதிர ஆறுகளும், பேய்களின் கொக்கரிப்பும் அவற்றின் கண் முன் தோன்றின. இவற்றைக் கண்ட பேய்கள், காண்பது பொய்க்காட்சி என்பதை மறந்தன. எதிரே இருப்பன உண்மைப் பிணத் தீனி என்று கருதி அவற்றை வாயாலும், கையாலும் விரைந்து பற்றித் தின்ன முயன்றன. வெற்று நிலமும் வெற்று ஆகாயமும், வெற்றுக் கையும் தான் கண்ட பலன். உடன் வித்தை காட்டும் முதுபேயைப் பார்த்து "தாயின் பேரில் ஆணை. உடன் நிறுத்து" என்று கூறிவிட்டன.

3. கலிங்க நாட்டில் பெரும்போர் என்ற செய்தியை ஒரு பேய் வந்து சொல்லுகிறது. சொன்னதுதான் தாமதம். செய்திகள் கேட்ட பேய்களின் உடல்கள் பருத்தன. சிரித்தன ஒன்றன்மேல் ஒன்று மகிழ்ச்சியால் விழுந்தன. போர்ச் செய்தி சொன்ன பேயைக் கட்டித் தழுவி முத்த மிட்டன. இடுப்பில் வைத்திருந்த பிள்ளைகள் கீழே விழ மறந்து கூத்தாடின. வள்ளைப் பாட்டுப் பாடின.

4. அன்னையின் ஆணைக்கிணங்க அனைத்துப் பேய் களும் கூழ் சமைக்கத் தொடங்குகின்றன. முதலிலே சமயல் வேலை தொடங்க பெண் பேய்கள் ஒன்றை ஒன்று பெயரிட்டு அழைக்கின்றன. குறுமோடி, நிணமாலை, கூரெயிறீ நீலி, மறிமாடீ, குதிர்வயிறீ என்பன அவற்றின் பெயர்கள். பின்னர் எல்லாம் பல் துலக்கி, நாக்கு வழித்து, இரத்த ஆற்றில் நீராடி, புத்தாடை அணிகலன்கள் சூடி உணவு சமைக்கத் தொடங்குகின்றன. பறக் கின்ற கழுகின் சிறகாகிய மேற்கட்டியின் கீழே அடுப்பு அமைக்கப்பட்டது. பொழி மதத்தால் நிலத்தை மெழுகி

கொம்பினின்று உதிர்ந்த முத்துப் பொடியால் கோலமிட்டு மத்தளங்களை அடுப்பு கெட்டியாக்கி ஆனைப்பானையை அடுப்பிலேற்றி, குதிரையின் குருதியை உலையாகச் சொரிந்து, வீரர்களின் கோபக்கண்களை நெருப்பாக மூட்டி, குந்தம், கோல் முதலியவற்றை விறகாக எரித்தன. கூழ் அணியமாயிற்று.

பேய்களெல்லாம் உண்ணத் தொடங்கின. அந்தப் பேய், சமணப் பேய், புத்தப் பேய் முதலியன. கூன், குருடு, ஊமைப்பேய் ஆகியன தனிக்கவனிப்பு பெறுகின்றன. சூலிப் பேய் தனியாகக் கவனிக்கப்படுகின்றது பிறவி மூடப் பேயும் அவ்வாறே. இந்தப் பேய் ஓட்டைக்கலத்தை ஏந்திக் கூழ் வாங்குகிறது. கூழ் ஒழுகியது. உடன் எங்கே ஒழுகுகிறது என்று திருப்பிப் பார்த்ததாம். இருந்த கூழும் கொட்டிப் போயிற்று.

"பொல்லா ஓட்டைக் கலத்துக் கூழ்
புறத்தே ஒழுக மறித்துப் பார்த்து
எல்லாம் கவிழ்த்து திகைத்திருக்கும்
இழுதைப் பேய்க்கு வாரீரே. (13-20)

ஒரு கூத்திப்பேய் தன் கணவன் உண்ணான் என்று சொல்லி, தனக்கும் அவனுக்கும் படைத்த கூழை எல்லாம் தானே குடித்ததாம்.

தடியால் மடுத்துக் கூழெல்லாம்
தானே பருகித் தன் கணவன்
குடியான் என்னத்தான் குடிக்கும்
கூத்திப் பேய்க்கு வாரீரே. (13-72.)

என்று நகை தோன்றக் கூறுகிறார் சயங்கொண்டார்.

**காதல் :**

கலிங்கத்துப் பரணி கருவில் காதலுக்கு இடமில்லை. காணும் இடமெல்லாம் பிணமும் நிணமும் தான். வேலும்

வாளும் தான். இதனை அறிந்தே படைக்கப்பட்டதுபோல கடை திறப்பு அமைக்கப்பட்டிருக்கிறது.

## 47: காமச்சுவை:

உலக்களத்தில் ஈக்கு வேலையில்லை என்றார் போலப் போர்ப்பாட்டில் 'சிருங்காரச்சுவை' காண்பதரிது தான். மனிதனுடைய வாழ்வோடு வாழ்வாக இரண்டறகலந்து விட்ட 'சிருங்காரம்' அந்த இனத்தின் இதய நாளத்தைத் தொட்டீர்க்கும் இலக்கியத்தில் இடம் பெறுமல் போக முடியுமா? உப்புக்கலவா உணவேது? இப்பரணியிலும்—கடை திறப்பு என்ற நுழைவாயிலாக அமைந்து—சிருங்காரம் சுவை இன்பம் தருகின்றது. இணைந்துவாழும் ஆடவர்க்கும் இன்பம்தரும் பெண்குலத்திற்கும் இக்காப்பியத்தோடு இணைந்து வாழும் நமக்கும் இன்பம் ஊட்டுகிறது.

**செக்கச் சிவந்த கழுநீரும்**
**செகத்தில் இளைஞர் ஆருயிரும்**
**ஒக்கச் செருகும் குழல்மடவீர்!**
**உம்பொன் கபாடம் திறமினோ**

என துவக்கும் வாயிலாக நின்று, காமச் சுவைக்கும் கோயிலாக நிற்கிறது இப்பகுதி.

ஆகப்பரணி முழுதும்—சுவைகள் பரவிக் கிடக்கின்றன. இலக்கியம் மருந்தாகிவிடாமல் விருந்தாக்கும் பணியைச் சுவைகள் தாம் செய்கின்றன. நேரே செல்லும் பாங்கைவிட வளைந்து, அசைந்து செல்லும் - பெண்கள் நம்மைக் கவருமாறு போல ஒரே சுவையில் செல்லாமல் எல்லாச் சுவைகளிலும் ஒய்ந்து தோய்ந்து கலிங்கத்துப் பரணி நடைபோடுகிறது. சுவை மிகுதியும் இன்பம்தராது. சுவை குறைவும் இன்பம் தராது. அளவாக சுவைகள் சரியான முறையில் தரப்படும்போது அவை—ஊடல் கலந்த இன்பத்தை நமக்கு ஊட்டுகின்றன.

## 48. சில ஒப்பிலக்கியக் கருத்துகள்:

பரணி போன்று போர்க்களம் பாடும் இலக்கிய மரபு சமஸ்கிருதத்தில் இல்லை என்பர் அறிஞர். எனினும், இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் போரைப் பற்றிய வருணனைகள் இடம் பெற்றுள்ளன. 'களவழி நாற்பது' என்ற நூலைப் போன்றோ, கலிங்கத்துப் பரணி போன்றோ தனி இலக்கிய மரபு உருவாக வில்லை. ஆங்கிலத்திலும் போர் இலக்கியம் தனிப்பட எழுதப்பட வில்லை என்றாலும் சில பொதுமைகள் அங்கும் இங்கும் காணப்படு கின்றன. இவற்றால் ஒருவரைச் சார்ந்தோ, பார்த்தோ பிறிதொருவர் அமைத்தார் என்பது கருத்தில்லை. கலைஞர் களின் நோக்கு போக்கும் உலகெங்கணும் ஒருசில வழிகளில் ஒத்திருப்பது இயல்பு. அதனைக் கண்டறிந்து துய்ப்பது இலக்கிய இன்பம் நல்குவது ஆகவே அத்தகு சில ஒப்புமைக் கூறுகள் இங்கே காட்டப் படுகின்றன.

'சுவர்க்க நீக்கம்' என்ற அரும்பெரும் இலக்கியத்தை எழுதிய மில்டன் கி. பி. 1608—1674 இல் வாழ்ந்தவன். அவன் எழுதிய 'லியூசிடாஸ்' (Lycidas) என்ற கவிதையில், பேய்களின் முதுகுப் புறத்தை வருணிக்கிறான். படகின் முதுகுப் புறம் போன்று இருந்தது பேய்களின் முதுகு என் பது அவன் வருணனை. அவனுக்கு முன்பிறந்த சயங்கொண் டான் எப்படி வருணிக்கிறான் பாருங்கள்!

> 'வற்றலாக உலர்ந்த முதுகுகள்
> மரக்கலத்தின் மறிபுறம் ஒப்பன' (139)

சயங்கொண்டான் வருணிக்கும் பேய்கள், பசி தாளாது ஓயாமல் குரைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றின் தோற்றமோ பயங்கரமாக உள்ளது. அவற்றின் காதுகளில் ஆந்தைகள் குடி இருக்கின்றன; கொப்பூழிலே உடும்புகளும்,

கொடும்பாம்புகளும் வாழ்க்கை நடாத்துகின்றன. இவற்றை மில்டன் படைத்துக்காட்டும் சின் (Sin) னுடன் ஒப்பிட்டு மகிழலாம். (Paradise lost. II. 650 889). சாத்தான் நரகத்தில் (Hell) இருந்து புது உலகத்திற்குப் பயணம் போகிருன். நரகத்தின் வாயிலில் பெரும் கதவுகள் வான் முட்டப் பொருத்தப் பட்டுள்ளன. கதவுகள் ஒவ்வொன்றும் ஒன்பது மடிப்புகளை உடையன. முதல் மூன்று மடிப்பு வெண்கலத்தாலும், அடுத்த மூன்று இருப்பாலும், பின் மூன்று மலைப்பாறையாலும் அமைக்கப்பட்ட கதவடுக்குகள். சாத்தான் இந்தக் கதவுகளைத் தாண்டியே புது உலகத்திற்குப் போயாக வேண்டும். கதவுகளைக் கோரத் தோற்றமுடைய பாவமும் (Sin), சாவும் (Death) காவல் காத்துக் கொண்டிருக்கின்றன. பாவத்தின் தோற்றம் பயங்கரமாக உள்ளது. இடுப்புவரை கவர்ச்சியான பெண் வடிவம்; இடுப்புக்கு மேலே குறிப்பிட்ட உருவமல்லா பல உருவங்களின் கோரக் கலப்பு; இடுப்பிலே ஓயாமல் குரைக்கின்ற வேட்டை நாய்.

A woman upto the waist
  and was beautiful too
About her middle round
A cry of hell-hounds
never ceasing barked (653-654)

பார்க்க குரூர வடிவம் உடைய பாவம் (Sin) சாத்தானின் மகள். பிற்காலத்தில் அவளே, சாத்தானைத் திருமணம் செய்து கொள்ளுகிருள். பாவமகளுக்குப் பக்கத்தில் சாவு நிற்கிருள். சாவுக்குத் தோற்றமில்லா ஒருவிதத் தோற்றம்.

If shape it might be called
  that shape has none
Distinguishable in member, joint or limb

Or substance might be called
    that shadow seemed
For each seemed either-black
    it stood at night. (666-670)

கண்ணுக்குப் புலப்படாத பாவத்திற்கும், சாவிற்கும் மில்டன் உருவம் கொடுத்து வருணித்த பாங்கு பற்றி ஆங்கிலத் திறனாய்வுலகம் பலபடப் பேசுகிறது. சயங்கொண்டான் படைத்த பேய்களைப் படிக்கிறவர்கள் பேய்களுக்கு எத்துணைக் கோர உருவம் கொடுத்து வடித்திருக்கிறான் என்பதைவிளங்கிக் கொள்ள வேண்டும்.

பேய்களின் உருவத் தோற்றம் ஒரு பக்கம் நிற்க. அவற்றின் முறையீடுகளும், உரையாடல்களும், சமையல் முறையும் விருந்து படைக்கும் அழகும் மிகச்சுவையானவை. சேக்ஸ்பியர் நாடகத்திலும் சில இடங்களில் பேய்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சிறப்பாக மாக்பெத் நாடகத்தில் பேய்கள் கூழ் சமைக்கும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. (Act four, scene I.) ஓர் இருண்ட குகையில் அவை கூழ் சமைத்து விருந்து கொண்டாடுகின்றன.

**witch 1:** Swelt 'red vemon sleeping got
Boil thou first i' th charmed pot

**All :** Double, double toil and trouble
Five burn, and cauldrou bubble.

**witch 2:** Fillet of a fenny snake
In the cauldrou boil and bake;
Eye of newt, and toe of frog!
Wool of bat, and tongue of dog
Adder's fork, and blind-worm's sting
Lizard's leg, and howlets wing
For a charm of powerful trouble
Like a hell-broth boil and bubble

**All :** Double, double toil and trouble
Five burn, and cauldrou bubble

**witch 3:** Scale of dragon, tooth of wolf
Witch's mummy, maw and gulf
Of the ranin'd salt-t sea-shark
Root of hemlock digg'd i'th dark

பேய்களின் கூழடுதலுடன், இக்காட்சி எத்துணை இயல்பாக ஒத்திருக்கிறது. இவ்வுரையாடலைத் தொடர்ந்து மாயக்காரிக்கும் மாக்பெத்திற்கும் இடையே நடக்கும் உரையாடல், பரணியில் வரும், தேவி, பேய் உரையாடலுடன் ஒத்திருப்பது படிக்கச் சுவையான பகுதியாகும்.

## 49. பரணியில் ஓசை நயம் :

இசையரங்கில் பாடப்பெறும் 'சங்கீதம்' வேறு, தமிழ்ப் பாட்டில் கூட்டப்படும் ஓசைநயம் வேறு. முன்னது பாடுவோனின் மெல்லிய இனிய குரலைப் பொறுத்துக் கேட்போரைக் கவருகிறது. பின்னது கவிஞனுடைய சொல் பின்னும் கலையைப் பொறுத்துப் படிப்போரைக் கவருகிறது. மெல்லிய குரல் இல்லாதவன் இசையரங்கில் ஏறமுடியாது. மெல்லிய குரல் இல்லாவிட்டாலும் சொல் பின்னும் ஆற்றல் உடையவன் கவியரங்கில் ஏறமுடியும். இன்பந்தரும் ஓசைகளைத் தன் பாடலில் வெளிப்படுத்த முடியும். கவிதைக்குரிய இவ்வொலியின் தனித்துவத்தைக் கருதியே பண்டை இலக்கண வாணர்கள் பாவிசை என்று கூறுது பாவோசை (செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை) என வகைப்படுத்தினர் போலும். ஓசை நயம் வேறு; இன்னிசை நயம் வேறு என்பதை அவ்வகுப்பு நமக்குப் புலப்படுத்தி நிற்கிறது. கவிதையின் ஓசை நயத்தோடு இன்னிசை நயம் கூடிவராது என்பது கருத்தன்று. கூடி

வந்தால் ஓவியம் உயிர் பெற்றது போல! அருணகிரியின் திருப்புகழ் இரண்டும் கலந்து அமைந்தது தான்.

கவிதை, பின்னப்படும் சொற்களால் மட்டும் சிறந்து விடுவதில்லை; அல்லது சொல்லப்படும் பொருளால் மட்டும் சிறந்து விடுவதில்லை; பொருளும் சொல்லும் இணைந்து செயல்படுவதுதான் கவிதையின் உயர்ந்த உத்தி. பொருட் சிறப்பு இல்லாது சொல்லாரவாரம் மட்டும் இருக்குமானல் அது அவ்வளவாகப் போற்றப் படுதலில்லை. பிற்கால யமகந்திரிபு அணிகள் சொல்லாரவாரத்தில் பிறந்ததனல் தான் கருவிலேயே உயிர் நீத்து விட்டன. கவிதையில் சொல் நயம் இல்லாமல் நுண்ணிய பொருள் நயம் இருக்கு மானல் அது போற்றப்படுவதுண்டு. சங்க இலக்கியங்களுள் ஏறத்தாழப் பெரும்பாலான சொல்லாரவாரத்தில் கட்டுப் படாதவையே என்றாலும், நுண்ணிய பொருள் நயத்தால் அவை இன்பந் தருகின்றன; இன்றும் போற்றப்படு கின்றன.

ஆண்டாண்டுக் காலமாக இசையுலகம், குறிப்பிட்ட கட்டுக்கோப்பிலேயே உலவி வருவதோடு நிற்பதில்லை. அடிப்படை இசைகளில் இருந்து மேலும்பல கிளைக்கின்றன; பலபுதிய உத்திகள் கையாளப்படுகின்றன. அது போன்று தான் கவிதா சந்நிதியில், கவிஞன் பழையதையே பாடிக் கொண்டிருப்பதில்லை. புதிய சொல்லமைதி கொண்ட பல புதிய பாவண்ணங்களைப் படைக்கிருன்; தன்சொல் பின்னும் கலைச்சிறப்பால் புதிய யாப்புக்களை உலவவிடுகிருன். தமிழ் யாப்பு, நால்வகைப்பா என்ற கட்டுக் கோப்பினின்று இவ் வாறுதான் விடுபட்டிருக்க வேண்டும். பாவினம் என்றும், ஒழிவு என்றும், புறநடை என்றும் வளர்ந்ததில் பிழை ஒன்றும் இல்லை. அத்தகு மாற்றங்கள் மொழியில் இயற்கை. அதுவும், எதற்கும் கட்டுப்படாத கவிஞர் உலகில் அது

தவிர்க்க முடியாதது. இந்தத் தான் தோன்றி வளர்ச்சியை நாம் தடுக்க முனைந்தால் கம்பனின் விருத்தத்தையும், சயங் கொண்டாரின் தாழிசையும், தாயுமானவரின் கண்ணியையும் வெறுத்தவர்கள் ஆவோம்.

கவிதை—எடை போடப்படுவது பொருளாலா? பொருள் சொல்லப்படும் முறையாலா? கையாளப்படும் சொல் அழகாலா? இலக்கிய உலகில் இது இன்றளவும் தீர்க்கப் படாதது. 'பெண்கள் இரவு முழுதும் தம் கணவரை எதிர் நோக்கினர்' என்பது கவிஞனின் பொருள். இப்படி 'மொட் டையாகச் சொல்வதில் என்ன இன்பம் இருக்கிறது? ஏதோ வானொலிச் செய்தி அறிக்கை' போல உள்ளது. அவ்வளவு தான். கதவு நாதாங்கித் தேயும்படியாகப் பெண்கள் கதவைத்திறந்தும் மூடியும் கணவரை எதிர் நோக்கினர் என்று சொல்லும் போது, 'கதவின் நாதாங்கித் தேய்கிறது' என்று பொருள் சொல்லப்படுமுறையில் (The way of expression) சற்று வேறுபடுத்தி இன்பம் ஊட்டப் படுகிறது. பொருளையும் சொல்லி சொல்வதையும் சுவையாகச் சொல்லி அதனையும் இன்னும் ஓசை நயம்படச் சொல்லும் போது கவிதை நம்மை அள்ளிக் கொள்கிறது.

வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகுங் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ

கவிஞன் ஒவ்வோர் அடிதோறும் மேலடியில் எழுப்பிய ஓசையே எழுப்பித் தான் நினைத்த பொருளையும் சொல்லி விட்டான். தான் நினைத்த முறையிலும் சொல்லிவிட்டான்; தான் நினைத்த வடிவிலும் சொல்லி விட்டான். பொருள், முறை, வடிவம் ஆகிய மூன்றும் பிரிக்க முடியாத பிணைப்புப் பொருள்களாக வரும்போது கவிதை வெற்றி பெறுகிறது.

மண்ணில் கலந்துள்ள தாதுவை எடுத்து, அதனைப்பிரித்தும் ஒளியுமிழும் பொன்னாக்கி அப்பொன்னையும் அழகிய அணியாகச் செய்து போட்டால் எப்படி இருக்கும்? அப்படித்தான் கவிஞன் உலகியலில் சொல்லெடுத்து, அதனை முறையாக ஒழுங்கு படுத்தி ஓசை நயம்படக் கூறும்போது, நகைக் கடைக் காரனாகி நமக்கு இன்பந்தருகிறான்.

இலக்கியக் கல்வி, பொருள் அறியும் அளவில் நின்று விடுகிறது. இது முழுமையான தாகாது; பொருளுக்கும் அப்பால், கவிஞன் பொருளுணர் முறையை நாம் உணர்ந்தாக வேண்டும். அதுவே சுவைஞனின் வேலை. ஓவியக் கண்காட்சியில் ஓவியம் மட்டும் பார்ப்பது வேறு; அத்துடன் அந்த ஓவியங்கள் மூலமாகக் கலைஞன் உணர்த்துவதை அறிய முயல்வதுவேறு. இரண்டாவது நெறியே இக்காலத்தில் திறனாய்வு எனப் போற்றப் படுகிறது. அக்கலைஞன் ஒரு பகுதியை ஆய்வதே ஈண்டு நிகழ்ந்துள்ளது.

## I சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லி ஓசை ஊட்டல் :

கவிதையில் – மணங்கவரும் வகைகளை வரையறுத்துக் காட்டிய தமிழ் இலக்கணவாணர்கள் கவிதை பற்றிப்பல் வேறு கோணங்களில் சிந்தனை செய்துள்ளார்கள். கவிதைக்கு ஊட்டப்பட வேண்டிய ஓசை நயத்தை அவர்கள் எண்ணாமல் விட்டுவிடவில்லை. அவர்கள் எண்ணியதன் விளைவுகள் தாம் எதுகை, மோனை, இயைபு, முரண், அளபெடைத் தொடைகள் என்பன.

எவ்வெவ் வழிகளில் கவிதைக்கு ஓசையூட்டலாம் என்பதை முப்பத்தைந்து தொடை நயப் பகுப்புக்கள் நமக்குணர்த்துகின்றன. அவற்றுள் இயைபு என்பது ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் வந்து சுவை ஊட்டுவதாகும்

'இறுதி இயைபாம்' என்பது காரிகை. சயங்கொண்டார் 'ஆலோ' என்ற ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் கூறிப் பாடலுக்கு நயம் ஊட்டுகிறார்.

அடிக்கழுத்தின் உடன்சிரத்தை அரிவர் ஆலோ
அரிந்தசிரம் அணங்கின்கை கொடுப்பர் ஆலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவும் ஆலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கும் ஆலோ.

படிப்போர் மனத்திடையே ஒரு விரைவுணர்ச்சியையும், நேரே காண்பது போன்ற நாடக உணர்வையும் 'ஆலோ என்ற சொல் ஊட்டி நிற்கிறது. இதுபோன்றே இந்திர சாலத்தில் 'பார்' என்ற சொல்லும், கடைதிறப்பில் 'திறமின்' என்ற சொல்லும் இயைபாக நின்று சுவை தருகின்றன.

## II. அடுக்குத் தொடர்களால் ஓசைநயம் ஊட்டல் :

'பாம்பு' என்று சொல்வதற்கும், 'பாம்பு, பாம்பு' என்று சொல்வதற்கும் வேறுபாடுண்டு. ஒருமுறை சொல்வதைக் காட்டிலும், இரட்டித்துச் சொல்லும்போது ஒரு விரைவும் பொருளில் ஒரு வலிவும், பொலிவும் தென்படுகின்றன இதனைக் கவிஞன் தன் கவி வளத்திற்காகப் பயன் படுத்திக் கொள்ளும்போது அச் சொற்கள் புதுத்தெம்புடனும் பொலிவுடனும் நிற்கின்றன.

வெடித்தகழை விசைத் தெறிந்த முத்தம் மண்மேல்
வீழ்ந்தன, அத்தரை புழுங்கி அழன்று மெய்ம்மேல்
பொடித்த வியர்ப்புள்ளிகளே போலும்! போலும்!
போலாவேல் கொப்புளங்கள் போலும் போலும்!
(3-19)

## III இரட்டைக் கிளவியால் ஓசைநயம் ஊட்டல் :

உணர்த்தும் கருத்துக்களுக்கேற்ப வல்லொலிகளும் மெல்லொலிகளும் கவிதையில் இரட்டுற வந்து காட்சிகளை

அப்படியே கொண்டுவந்து நிறுத்துகின்றன. குழந்தை பூனைக் குட்டியை—'மியாவ், மியாவ்' என்று நமக்குச் சொல் நலம்பட உணர்த்தும் போது பூனையின் இயற்கைத் தன்மையை உணர்கிறோம். பூனை என்பதைக் காட்டிலும் 'மியாவ், மியாவ்' என்பது உயிர்த்துடிப்புள்ளதொடராகவும் நமக்குப் படுகிறது. இதுபோன்று மனித மனங்களின், உணர்வு நரம்புகளில்-கவிஞன் இன்ப நாதம் பாடும் இடங்கள் பல உண்டு.

அன்னை காளிதேவியின் முன்னிலையில்-களபலிகள், பூசனைகள், ஆராதனைகள் நடக்கின்றன. அப்போது தோற்கருவிகளை அடித்து முழக்கப்படுகின்றன. எப்படி?

**'மொகு, மொகு' என்று ஒலிமிகும் தமருகங்கள் 4–18**

ஒன்று கவிஞன் அக்காட்சியை நம் காதுகளுக்கு ஊட்டுகிறான். இரண்டு 'சட, சட' (12–109) என்பன போன்றவை சொல்லளவில் பொருள் இல்லை என்றாலும் ஒலியளவில் பொருள் தருகின்றன.

### iv எதிரொலிச் சொற்களால் ஒலிநயம் ஊட்டல்:

சொற்களின் எதிரொலிகள் வேறு சொற்களாக அமைந்து இனமானப் பொருளை உணர்த்தல்-தமிழ்மொழிக்குரிய அமைப்பு. இது பெரும்பாலும் வழக்கில் நிகழ்வது. சோறு; கீறு, தண்ணி கிண்ணி என்றும் இவைபோல்வன பலவும் வழங்குகின்றன. இம்மாதிரி நெருங்கிய அமைப்புடைய சொற்களைக் கவிஞன் உரிமையோடு எடுத்துக் கொள்கிறான்.

**இந்த உரற்கண் இவ்வரிசி**
**எல்லாம் பெய்து, கொல் யானைத்**
**தந்த உலக்கைதனை ஓச்சி**
**சலுக்கு மொலுக்கு எனக் குற்றீரே** 13-24

இப்பாடலில் வரும் 'சலுக்கு மொலுக்கு' என்ற சொற்றொடர் ஒரு குறிப்பிட்ட ஒலிக்கூட்டத்தை நம் மனத்துக்குள் இழையோட்டுகிறது. இதுபோன்று 'திமில குமிலம்' (12-136) அலதி குலதி (12-139) போன்ற சொற்களும் பொருள் எதிரொலி செய்கின்றன.

## v தொடர் முடிவுகளால் ஓசைநயம் ஊட்டல்:

இடைவெளி இல்லாது நீளமாகச் செய்யப்பட்ட ஒரு பொன் சங்கிலி தரும் அழகுக்கும் மணி மணியாகப் பொன் மணிகள் கோர்க்கப்பட்டதுபோன்ற சங்கிலிதரும் அழகுக்கும் வேறுபாடுண்டு. முன்னதைக் காட்டிலும் பின்னது எடுப்பாக இருக்கும். அதுபோன்றுதான் நீண்ட சொற்றொடர்கள், சுவைஞனின் மனத்தினை அலுப்படையச் செய்வதோடு மயக்கத்தையும் உண்டாக்கி விடுவதுண்டு. சிறு தொடர்கள் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகளைப் பெருந் தொடர்களால் அந்த அளவுக்கு உண்டாக்க முடிவதில்லை. அதனாற்றான் படைக்கட்டளை வார்த்தைகள் (army commanding words) சுருக்கமாக உள்ளன. உணர்ச்சியைக் கிளரச் செய்யும் வலிமை பெருந்தொடர்களைவிடச் சிறு தொடர்களுக்குச் சற்று மிகுதி. பிள்ளைத் தமிழ் இலக்கிய வீழ்ச்சிக்கு நீண்ட தொடரமைப்பும் ஒரு காரணமாகக் கொள்ளலாம்.

கலிங்கத்துப் பரணியில் சிறுவாக்கிய முடிபுகளே பரந்து காணப்படுகின்றன. வாக்கியம் சிறிதாக இருந்தாலும் பொருள் புலப்பாடு சிறிதாக இருப்பதில்லை. கூட்டு வாக்கியத்தைக் காட்டிலும், (Compound Sentence) சிறு வாக்கியங்கள் (Simple Sentences) வரவேற்கப்படுவதன் காரணம் பொருள் புலப்பாடே.

'பரிசில் சுமந்தன கவிகள்;
பகடு சுமந்தன நிறைகள்;
அரசு சுமந்தன கழல்கள்;
அவனி சுமந்தன புயமும். (10-41)

vi இடத்திற்கேற்ப ஓசைநயம் உண்டாக்கும் சொல்லாட்சி :

'முருகின் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல் மடவீர்!
செம்பொன் கபாடம் திறமினோ' (2-30)

என்று வரும் கடைத்திறப்புப் பகுதியைப் படிக்கும்போது நம்முள்ளத்தில் உந்தப்படுவது ஓரின்ப உணர்ச்சியே. ஓர் ஆரவார உணர்ச்சியோ, அல்லது அச்ச உணர்ச்சியோ உண்டாகவில்லை. பாட்டு ஆற்றொழுக்காக ஓடுகிறது இங்கே. இங்கே பேசப்படும் பொருள் வேறு; சுவை வேறு; ஆதலால் பேசப்படும் முறையும் வேறாக இருக்கிறது. இதே அமைதி உணர்வைக் கீழ்வரும் கவிதையைப் படிக்கும்போது உண்டாகிறதா? இல்லை, ஏன்? வரும் பாடலின் பொருள் வேறு: சுவை வேறு.

பண்ணுக! வயக்களிறு பண்ணுக
வயப்புரவி! பண்ணுக! கணிப்பில் பல தேர்;
நண்ணுக! படைச் செருநர்! நண்ணுக
செருக்களம்! நமக்கிகல் கிடைத்த தெனவே.
(11-83)

இப்பாடலில் பண்ணுக, நண்ணுக என்ற சொற்கள் தனிவாக்கிய முடிவுகளாக நின்று நம்மைத் தட்டி எழுப்பு

கின்றன. தளபதியின் முன்னே கிளர்ந்தெழும் வீரர்களின் போருணர்ச்சி நம் உள்ளத்தில் உண்டாகிறது.

கடைத்திறப்பில் (2) தென்றலின் அமைதியையும், கூளி கூற்றில் (11) புயலின் ஆர்ப்பரிப்பையும் காணுகிறோம்.

## vii சொல்லும் முறை :

'விளக்கின் சுடர் காற்றில் அசைகிறது' என்று சொல்வதைக் காட்டினும், 'விளக்கின் சுடர் காற்றில் துடிதுடிக்கிறது' என்று சொல்வதில் ஓரின்பம் இருக்கிறது. காரணம்: துடிதுடித்தல் மனித வினை. மனித வினை அஃறிணைப் பொருளாகிய விளக்கிற்கு ஏற்றிச் சொல்லும்போது சுவை உண்டாகிறது. இதனை அறிஞர் இலக்கணை என்பர்.

கோயில் (4), தேவி (5), பேய் (6),-இவை மூன்றும் இம்முறையில்தான் வருணிக்கப்படுகின்றன. கூழ் அடுதல் முழுதும்-மனித வினைகளின் பிரதிபலனம். உலகியலில் ஒரு வீடு கட்டுவதற்குரிய மண், கல், சேறு, நீர், உத்தரம், ஓடு இவற்றை நினைவுட்கொண்டு கோயில் கவிஞனின் சொல் வண்ணத்தால் கட்டப்படுகிறது. அதுபோன்றே உலகியற் பெண்ணின் தோற்றம் அணிகலன் இவற்றை மனத்துட் கொண்டே தேவி படைக்கப்படுகிறாள். மனிதனின் தோற்றம், குணம், செயல்கள், பேய்கள் மீது ஏற்றப்பட்டு வருணிக்கப்படுகின்றன. இவையெல்லாம் நமக்குக் கவிஞனின் கற்பனை உலகம் என்பதை மறக்கடித்து ஓர் உண்மை உலகம் என்றே தோன்றச் செய்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் நம் தோற்றம், குணம், செயல்கள் அவற்றின் மீது ஏற்றிக் கூறப்பட்டமையே.

கவிஞன் வினைமுற்றுக்களைத் தொடர்ச்சியாகக் கூறியும், எச்சங்களை அடுக்கிக்கொண்டே போய் முடிவில் முற்றவைப்பதும், பெயர்களை அடுக்கிக்கொண்டே போய்

வினையால் முடித்து வைப்பதும் கவிதைகளின் சுவை நயத்தை மிகுவிக்கின்றன.

பேய்களைப் பாடும்போது மெலிவன, போல்வன, வாயின, வயிற்றின, தாளின, உடம்பின, குரைப்பன, கொடிற்றின, விழிப்பன, ஒப்பன, உந்திய, மூக்கின, செவியன, தாலிய, தலையின, உதட்டின, குழவிய, கொள்வன, என வினைமுற்றுக்களை (அல்லது முற்றெச்சங்களை)த் தொடர்ச்சியாக அடுக்கிக்கொண்டு செல்வது ஓர் ஒத்த ஓசை நயத்தை உண்டாக்குகின்றது. இராச பாரம்பரியத்தில், அழிந்ததும், கொண்டதும், விளைத்ததும், பரந்ததும், கவர்ந்ததும், வைத்ததும், பொறித்ததும், கவித்ததும் என எச்சங்களை அடுக்கி ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியைப் புலப்படுத்துகிறார்.

**உதிர்ந்த வன்னி ஒருங்கு நெல்லி உணங்கு தும்பை**
**உலர்ந்த வேல்**
**பிதிர்ந்த சுள்ளி சிதைந்த வெள்ளில் பிளந்த கள்ளி**
**பரந்தவே.** (3-3)

இப்பாட்டில் எச்சங்களையும், பெயர்களையும், அடுக்கிக் கொண்டே போய்ப் 'பரந்த' என்ற ஒரு வினையால் முடிக்கிறான். கேள்விக் குறிகளைப் போட்டுக் கொண்டேபோய் இறுதியில் 'பரந்த' என விடை கூறி முடித்தல் போல உள்ளது.

இம் முறைகளன்றியும், 'கிடைத்தபோல்-கிடக்க' என்றும், 'மலைத்த போல்-மலைக்க' என்றும், 'முனைத்த போல்-முனைக்க' என்றும், 'சிலைத்த போல்-சிலைக்க' என்றும், 'அடர்ப்பபோல்-அடர்க்க' (12-96, 6, 7) என்றும் இனிய எளிய புதிய அமைப்புக்களால் கவிதையின் நடையோட்டத்தை அதிகப்படுத்துகிறான். 'அட்பொழுது-இப்

பொழுது' என்றும் 'அப்படி-இப்படி' (8-33, 12-105, 154) என்றும் காட்டுக்களை எதிர்மறை நயத்தால் கவிஞன் விளையாடும் இடங்கள் பலப்பல.

## VIII ஒலிஒழுங்கு (Rhythm) :

பரணியின் ஓசை நய வெற்றிக்கு அடிப்படைக் காரணம் ஓர் ஒழுங்கான கட்டுப்பாடான திரும்பி வரல் (Repetition) அமைப்பே. ஒரு தாழிசை என்றால்- ஓர் அடியிலேயே முற்றும், எச்சமும் போட்டுக் குழம்பும் அமைப்பு-இவர் தாழிசைகளில் காண்பது அரிது. முற்றாகத் தொடங்கினால் முற்றாகவே அடுக்கிக்கொண்டு போய்க் கடைசியில் முடிப்பார்; எச்சமாக எடுத்தாலும் அப்படியே, பெயராக எடுத் தாலும் அப்படியே.

## IX மற்றொரு முறை :

ஒரே சொல்லைத் திருப்பி அப்படியே சொல்வதன்றி முதலடியில் கையாளப்பட்ட வாய்பாடுகள் பெரிதும் பிறழாமல் அடுத்த அடியிலும் வருகின்றன. இதனால் ஓசையில் இடையீடு ஏதும் ஏற்பட வாய்ப்பிருக்கவில்லை.

> **செக்கச் சிவந்த கழுநீரும், செகத்தில் இளைஞர் ஆருயிரும்**
> **ஒக்கச் செருகும் குழல் மடவீர்! உம்பொன் கபாடம்**
> **திறமினோ! (2-54)**
>
> **தேமா புளிமா புளிமாங்காய் புளிமா புளிமா கூவிளங்காய்**
> **தேமா புளிமா கருவிளங்காய் புளிமா புளிமா கருவிளங்**
> **(காய்)**

ஏறக்குறைய ஓர் ஒத்த வாய்பாடே பிறழாமல் அமைந்து தாழிசையின் ஓசைநயத்தைக் கெடுக்காமல் காப்பாற்றுகின்றன. இந்நூலில் ஐம்பத்து நான்கு சந்தப் பேதங்கள் இடம் பெற்றுள்ளன.

எதுகைக்காகவோ, மோனைக்காகவோ வாய்பாடு கட்டுக்கோப்புக்காகவோ கவிஞன் சொற்களைத் தேடி

அலையவில்லை. அல்லது எதுகைக்காகச் சொற்களைச் சிதைத்தும் வழங்கவில்லை. பாட்டின் புற அழகுகளுக்காகப் பொருளை மறைத்து விட்டு ஓடவும் இல்லை. ஏறக்குறைய ஒரு குலத்தின் வரலாற்றை எடுத்துக்கொண்டு- நமக்கு ஒரு வரலாற்று இலக்கியம் படிக்கிறோம் என்ற எண்ணமே ஏற்படாமல்-கவிஞன் ஒரு பாவியத்தை முடித்திருக்கிறான் என்றால் அது எளிய சாதனை அன்று; யாரும் எளிதில் செய்து முடிக்கக்கூடியதும் அன்று. உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் அறிவும், சொற்பெருக்கும், இயற்கையாகத் தாண்டிவிடும் கவிதைத் திறனும் உடையவன்தான் இத்தகு பாவியத்தின் கருத்தாவாக இலங்கமுடியும்.

## பரணி இலக்கியப் பட்டியல்

| எண் | நூல் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| 1. | கலிங்கத்துப்பரணி | சயங்கொண்டார் | 1112 |
| 2. | தக்கயாகப்பரணி | ஒட்டக்கூத்தர் | 1096 |
| 3. | இரணியவதைப்பரணி | — | 1210 |
| 4. | சூரன்வதைப்பரணி | — | — |
| 5. | அஞ்ஞவதைப்பரணி | சோதிப்பிரகாசர் | 1450 |
| 6. | அஞ்ஞவதைப்பரணி | தத்துவராயர் | 1450 |
| 7. | மோகவதைப்பரணி | சோதிப்பிரகாசர் | 1450 |
| 8. | மோகவதைப்பரணி | தத்துவராயர் | 1450 |
| 9. | பாசவதைப்பரணி | வைத்தியநாத தேசிகர் | 1650 |
| 10. | திருச்செந்தூர்ப்பரணி | சீனிப்புலவர் | 18 (நூற்) |
| 11. | சீனத்துப்பரணி | மு.பி. பாலசுப்பிரமணியம் | 1972 |
| 12. | வங்கத்துப்பரணி | அரங்கசீனிவாசன் | கழகவெளியீடு, 1972 |

## மறைந்துபோன பரணிநூற்கள்:

| | நூல் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்ப்பரணி | — | 1048 |
| 2. | கொப்பத்துப்பரணி | — | 1054 |
| 3. | கூடல் சங்கமத்துப்பரணி | — | 1064 |
| 4. | கலிங்கப்பரணி | ஒட்டக்கூத்தர் | 1096 |
| 5,6 | இரண்டுபரணிநூற்கள் | — | — |
| 7. | கலைசைக் சிதம்பரேசுரர் பரணி | தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் | 1800 (18 நூ) |
| 8. | கஞ்சவதைப்பரணி | — | — |
| 9. | பேராசிரியர்கூறும் பரணி | — | — |
| 10. | அடியார்க்கு நல்லார் கூறும் பரணி | — | — |

## கலிங்கத்துப்பரணி பற்றிய நூல்கள்: [கட்டுரைகள் அடைவு]


1. **அப்புவையங்கார், புதுவை. ரெ.**

*கூத்தர், 'தெய்வப்பரணி' என்றது எதனை? 'செந்தமிழ், தொகுதி 29, ப—353.*

2. **அருணாசலம், திருச்சிற்றம்பலம். மு.**

*சயங்கொண்டார், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம் பலம், மாயூரம் 1972.*

3. **அருணாசலம், (அறவாணன்) க. ப.**

*கவிதையில் ஓசைநயம், செந்தமிழ், தொகுதி, 62, பகுதி. I ப. 46-54, 1966.*

4. **அறிவொளி, தி. நா.**

*கலிங்கத்துப் பரணியில் ஓசைநயம், செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு, 33, பரல், 9, ப-425-431.*

5. **இராகவையங்கார், மு.**

*கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, தமிழ்ச்சங்க முத்திரா சாலை, மதுரை—1925. ப. 71, விலை ச. அணா*

6. **இராதா-ஓவியர்**

*கலிங்கத்துப் பரணிக் காட்சிகள்-கடைதிறப்பு, கலைக் கதிர் வெள்ளிவிழா மலர் 1974; 8 படங்கள்.*

7. **இராமநாத ஐயர்-ஏ.எஸ்.**

*கருணாகரத் தொண்டைமானும் ஸ்ரீ ஸூத்திர ரத்ந ஹாரமும்* All India Oriental conferne third session, Madras-1924. *மேற்கோள்: கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி மு. இராகவையங்கார் 1925—ப. 47,*

8. **இராமநாதன், சுப.**

பரணியும் சந்தமும், ஆய்வுக்கோவை, 1971 ப. 444-449. இ. ப. த. மன்றம்.

9. **இராஜம், எஸ்.**

கலிங்கத்துப் பரணி, 5, தம்புச்செட்டித் தெரு, சென்னை-1, 1960.

10. **இளவரசு, சோம. புலவர்.**

பரணி இலக்கியங்கள் (ப.200) மணிவாசகர் நூலகம், 1967.

11. **கந்தையா பிள்ளை, ந.சி.**

கலிங்கத்துப் பரணி வசனம் (மாணவர் பதிப்பு) சாவகச்சேரி இலங்காபி மாலை அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பெற்றது, ப. 86, விலை 75 சதம்.

12. **கம்பராமன்**

சயங்கொண்டான் கனிந்தளித்த பரணி, தமிழ் வட்டம் 2 வது ஆண்டுமலர் ப. 207-208 11-1-1954.

13. **கோபாலையர், அ. பண்டித.**

கலிங்கத்துப் பரணி செந்தமிழ். தொகுதி 21, பகுதி. 7 1923

14. **கோபாலையர் ச. பண்டித.**

கலிங்கத்துப் பரணிச் சுருக்கம்-குறிப்புரை, சென்னை ஆசிரியம் அச்சகம் பிரசுராலயம் புஸ்தகசாலை; எட்வர்டு எலியட் ரோடு, மயிலாப்பூர், 1924.

**15. பண்டாரத்தார், தி. வெ. ச**

*கலிங்கத்துப் பரணி, கலைக்களஞ்சியம். ப-332-334, தொகுதி-3-1956, சந்திரசேகரன். 4-பதிப்பு, செயங்கொண்டார் வழக்கம், 1955.*

**16. சடகோபராமானுஜாசாரியார், வை. மு**

*கலிங்கத்துப் பரணி, இராசபாரம்பரிய உரை* Quoted by *மு. ராகவையங்கார். கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, தமிழ்ச்சங்க முத்திரா சாலை, மதுரை-1925.*

**17. சித்ரலேகா**

*கலிங்கத்துப் பரணி ஓவியங்கள், தமிழ் வட்டம் 2-வது ஆண்டுமலர் ப-238-241, 11-4-1969.*

**18. சிவஞானம், ம. பொ.**

*கலிங்கத்துப் பரணி ஓர் ஆராய்ச்சி, செங்கோல் இதழ் 1974.*

**19. சுந்தராம்பாள், இரா.**

*கலிங்கத்துப் பரணி சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், மூன்றுவது மாநாடு, 13-3-60; ப-69-110, திருநெல்வேலி.*

**20. சுப்பராய முதலியார்**

*கடவுள் வாழ்த்து-களம்பாடியது, தாழிசை-563-புதுவை கல்வி வளர்ச்சிக்கூடம், 1840, இதன் விலை-12.*

**21, சுப்பிரமணியம், சி.**

*கற்பனைக்கோர் செயங்கொண்டார், ஆய்வுக்கோவை, ப. 211—25. இ. ப. த. மன்றம், 1973*

22. சுப்பிரமணியம், சி.

கலிங்கத்துப் பரணி—திறனாய்வு, எம். ஏ. தமிழ் ஆய்வுக்கட்டுரை, அச்சிடாதது. நாகர்கோயில், S. T. இந்துக்கல்லூரி, 1972.

23. சுப்புரெட்டியார், டாக்டர். B

பரணிப் பொழிவுகள், திருப்பதி வெங்கடேசுவரப் பல்கலைக்கழக வெளியீடு, 1970.

கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, பழநியப்பா பிரதர்ஸ் வெளியீடு, 1969.

24. சூரிய நாராயண சாஸ்திரியர், வி. கோ.

சயங்கொண்டான் அருளிச்செய்த கலிங்கத்துப் பரணி, தாமஸன் கம்பெனி. 1898. ப. 130. விலை. 8 அணா.

தமிழ்ப்புலவர் சரித்திரம், ஆறும் பதிப்பு, 1968.

25. செயராமன், ந. வீ

சிற்றிலக்கியச் செல்வங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1967.

26. ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ.

கலிங்கத்துப் பரணி, ப. 257-260, தமிழ் வட்டம் 11-4-1969.

27. நாகசாமி, இரா.

தக்கயாகப் பரணியும், தாராசுரக் கோயிலும், தினமணி சுடர், 7-4-74.

28. பழனிவேல் பிள்ளை, பெ.

கலிங்கத்துப் பரணி தெளிபொருள் விளக்கம், கழக வெளியீடு, பிராட்வே-சென்னை-1, 1965.

29. பிளாரான்சு, காதரைன்

Kalingatthu parani Grammar with Index. கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, எம். ஏ, ஆய்வு. 1968.

30. புலியூர்க்கேசிகன்

*கலிங்கத்துப் பரணி தெளிவுரை, அருணா பப்ளிகேஷன்ஸ் சென்னை-17, 1959.*

31. முத்துசிவன், ஆ.

*பரணித் திறனாய்வு: (2) மேற்கோள் பரணி இலக்கியங்கள், ப-48-51, 1967.*

32. வேங்கடசாமி நாட்டார், ந. மு.

*பரணிப் பெயராய்வு, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 11; பரல்—6.*

33. வையாபுரி பிள்ளை, எஸ்.

*கலிங்கத்துப் பரணியில் நகைச்சுவை, ப-35-57, இலக்கியவிளக்கம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5, 1965.*

Aroul, G., The Chapter on the opening of the portals in 'Kalingattu Barani' Maraimalaiadikal Library No. 100.

Parani in English, by V. Kanagasabhai Pillai, Indian Antiquary Vol. XIX, 1890.

Kamban and Jayankondan by S. Krishnaswamy Aiyangar, The Christian College Magazine, 1902-1903.

Meenakshisundaram, T.P. The Parani Poetry, Tamil Conference I.A.T.R. Proceedings Vol. II, P. 196; 1966.

Nagaswamy, R., Kalingattupparani, pp. 238-241 தமிழ் வட்டம் இரண்டாவது ஆண்டுமலர், 11-4-1966.

Sinnathambi Thillainathan, Court Literature of Cola Period, Madras, M. Litt., 1968-1969.

Subramania Aiyar, A. V., Kallngattupparani, A. Martial Tamil Classic (The Hindu).

Thirumalai Mutthusamy, A. Studies in Parani Literature Madras, M. Litt. 1962.

# பொருட்குறிப்பு அகரவரிசை

[எண்-பக்க எண்]


அகவலோசை, 101
அங்குலி, 69
அசுரர், 55
அசுவினித் தேவர், 21
அஞ்ஞானம், 36
அட்டம், 69
அட்டில், 70
அடியார்க்கு நல்லார், 84
அடுக்களை, 64. 69
அடுகளம் வேட்டல், 30
அடுக்குத் தொடர், 105
அத்தமனமலை, 59
அதரபானம், 24
அதரம், 24
அதிகை மாநகர், 59
அதிராசேந்திரன், 55
அபயன், 19, 44, 46
அபூவின் ஆதம், 86
அம்மங்கை தேவி, 55, 58
அம்மன்குடி, 18
அம்மனை, 74
அம்மை, 70
அமணர், 64
அமுதவட்டம், 69
அயன், 50
அரங்கநாதர், 55
அரங்கநாதன், 22
அரங்கம், 55
அருகக்கடவுள், 21
அருவர்-தமிழர், 69
அலக்கு, 69
அலகை, 60, 66
அலந்தலை, 69
அலதி குலதி, 69, 107
அலெக்சாண்டர், 9
அவதாரம், 30, 40, 41, 77
அவந்தி, 59
அவந்தியார், 78
அளகு, 70
அளத்தி, 52
அறுக்கை, 69
அனந்தபத்மன், 53, 55
அனந்தவர்மன், 20, 52
ஆகவமல்லன், 36, 55
ஆந்திரம், 41
ஆலங்குடி, 37, 52
ஆறும் விக்கிரமாதித்தன், 55
ஆனைப்பானை, 96
இக்குவாகு, 22, 50, 55, 58
இசையாயிரம், 25
இந்திரசாலம், 4,30, 40, 75
இந்திரன், 21, 56, 57
இமயமலை, 55, 59, 60, 77
இயக்கர், 57
இரட்டைக் கிளவி, 105
இரட்டைவாளி, 66
இரண்டாம் இராசேந்திரன், 36
இரண்டாம் விண்மீன், 33
இரண சூரன், 12
இரணியன், 36
இரணியன் வதைப் பரணி,45
இராக்தம், 30
இராசகேசரி, 50, 55

இராசபாரம்பரியம், 30, 39
40, 41, 77
இராசசுந்தரி, 53, 58
இராச மகேந்திரன், 50
இராசராசன், 9, 11,25,50, 55
இராசராசேந்திரன், 50
இராசாதித்தன், 50
இராசேந்திரசோழன், 11,
55, 61
இராசேந்திர தேவன், 55
இராசேந்திர மிருத்யுசித், 55
இராசேந்திரன், 9, 50
இராதாமங்கலம், 37
இராபர்ட் புரூக், 86
இராமாயணம், 22, 59, 98
இராமர், 21
இராமன். 91
இருநாழிமுலே. 35
இலக்கண விளக்கப்பாட்
டியல், 28
இலக்கண விளக்கம், 11
இலக்கணே, 109
இலங்கை, 9, 59, 91
இலப்புரை, 69
இலாடர், 78
இழந்த சொர்க்கம், 93
இன்னிசை, 101
ஈகை, 66, 73
ஈச்சோப்பி, 69
உகிர்கொள்ளி, 64
உடன்கட்டை, 63
உடும்பு, 98
உத்தமசோழன், 61
உத்தரலாடம், 12
உதகை, 59
உதயமலே, 59
உப்பு பார்த்தல், 65
உபரிசரன், 50, 55
உமாபதி, 21
உயிர் பலி, 92
உரிமை அரிவையர், 69
உவட்டல், 69
உவணம், 60, 65
உளப்பு, 69, 70
உறழ், 23
எங்கராயன், 58
எண்புறத்தினேயுற வீட்டல்,
30
எதிர்மறை நயம், 111
எதிரொலிச் சொற்கள், 106
எரிவிளக்கு, 56, 62
ஏகவடம், 66
ஏகாவலி, 66
ஏழிசைவல்லபி, 58
ஏனன் குடி, 18
ஐந்தாம்ஹென்றி, 85
ஐம்படைத்தாலி, 66
ஐயணர், 78
ஐவகைச்செவிலி, 62
ஒக்கலில்; 70
ஒக்கலே, 69
ஒட்டக்கூத்தர், 84
ஒட்டகம், 14, 65
ஒப்பிலக்கியம், 98
ஒருநாழிமுலே, 35
ஒலி ஒழுங்கு, 111
ஒறுவாய், 69
ஓடி, 69
ஓமத்தீ, 74, 92
ஓமை, 66, 73
ஒலுறுத்துவாள் 62
ஔரா, 12
ஔவை, 70
கங்கர், 78
கங்கை, 55, 59, 64
கச்சி, 59
கச்சிச்செப்பேடு, 25
கடம்பர், 78
கடமங்குடி, 18
கடலங்குடி, 18

கடவுள்வாழ்த்து, 30, 40
கடாரம், 9, 59
கடிகணம் உரைத்தல், 30
கடியலூர் உருத்திரங்
கண்ணனார், 58
கடுஞ்சேவகம், 69
கடும்பாலை, 30
கடைதிறப்பு, 30, 40, 42
கண்ணபிரான், 21, 22
கணபதி, 21
கணைக்கால் இரும்பொறை,
56
கதலி, 66
கதாசங்கிரகம், 39
கந்துகம், 74
கம்சன், 36
கம்பவருமன் கல்வெட்டு, 92
கம்பன், 103
கயிலை, 45
கராளர், 78
கரிகாலன், 50, 55, 56, 60
கருணாகரத் தொண்டை
மான் 20, 53, 58, 79
கருணாகரன், 46, 52, 81
கருவிக்கட்டு, 69
கரூர், 92
கலப்பைக்கொடி, 61
கலாபம், 61
கலிங்கநாடு, 77
கலிங்கப்போர், 10, 77
கலிங்கம், 59, 72, 73, 79
கலித்தொகை, 14
கவிந்தர், 78
கவேரன், 50
கழங்கு, 74
கழாய், 71
கள்ளி: 66, 73
களம் காட்டியது, 41
களம்பாடியது, 40, 41
களவஞ்சி, 27
களவழி நாற்பது, 59, 88, 98
களைக்கொட்டு, 70
கன்னடர், 78
காகுத்தன், 50, 55
காசிபன், 22, 50
காஞ்சி, 46, 66, 78
காடவர், 78
காடுகிழவோன், 11
காடுபாடியது, 40
காணிக்கை, 92
காரிகை, 105
காரியர், 78
காரை, 66, 73
காலனி ஆட்சி, 9
காலிங்கர், 72
காவி, 64
காவிரி, 55, 59
காவிரிப்பூம்பட்டினம், 61
காளம், 66
காளயம், 69
காளிக்குக்கூளிகூறியது, 40,
41
கிள்ளிவளவன், 50, 56
கீரன்குடி, 18
குச்சரர், 78
குசைத்தலை, 59
குடக்கர், 78
குடர்மாலை, 75
குடவாசல், 54
குடுமி, 59
குத்தர், 78
குத்தவர், 78
குதம்பை, 66
குதிர்வயிறு, 95
குந்தம், 66, 96
குந்தவை, 58
கும்பகோணம், 54
குரவைக்கூத்தாடி, 47
குருக்கர், 78
குலிங்கர், 78

குலோத்துங்கன், 50, 55
குலோத்துங்க சோழன், 77
குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், 84
குழல், 66
குழை, 66
குறவஞ்சி, 82
குறியோலான்ஸ், 85
குறுமோடி, 95
குன்றி, 60
கூகை, 66, 73
கூடல் சங்கமம், 36, 59
கூடல் சங்கமத்துப் பரணி, 28, 36
கூடலிழைத்தல், 53
கூத்திப்பேய், 96
கூத்து, 30, 32
கூப்பர், 85
கூபகர், 78
கூரெயிறீ, 95
கேசவன், 46
கேரளம், 34, 41
கைத்தாய், 62
கைதவர், 78
கொங்கணர், 78
கொங்கர், 78
கொச்சக ஒரு போகு, 29
கொட்டு, 70
கொடுங்காளிகோட்டம், 30
கொடுங்காளூர், 35
கொப்பத்துப்பரணி, 28, 36
கொப்பம், 59
கொல்லி, 59
கொற்றுலம், 69
கொற்றவை, 11, 21, 92
கோசலர், 78
கோட்டாறு, 36
கொப்பை 59
கோதமை, 60
கோதாவரி, 60
கோயில் பாடியது, 40, 41
கோவிந்தசந்தன், 12
கோழிக்கொடி, 61
கோல், 96
சக்கரக்கோட்டம், 51, 57, 59
சக்கரவர்த்தி நைனார், 19
சத்தமாதர்கள், 21
சதய விழா, 57
சதுரகராதி, 28
சந்தப்பேதங்கள், 111
சந்தப்பேர், 60
சந்திரன், 21
சமணப்பேய், 96
சமுத்திரசித்து, 50, 56
சயசிங்கன், 56
சயத்தம்பம், 81
சயிந்தர், 78
சரசுவதி, 16
சரசுவதிமகால், 37
சல்லவட்டம், 69
சவளம், 66
சாடி, 30
சாத்தான், 99
சாமந்தசேனன், 12
சாயாதேவி, 21
சாலை (காந்தளூர்) 59
சாவகர், 78
சாளீசுகன், 50
சிங்களம், 59
சிங்களர், 78
சித்தாந்தசாராவளி, 13
சித்திரன், 50, 56
சிதம்பரப்பாட்டியல், 28
சிதம்பரம், 60
சிபி, 50, 56
சிம்பலின், 85
சிருங்காரம், 97
சிலப்பதிகாரம், 47, 84
சிலம்பு, 66
சிவபெருமான், 46

சிவன், 21
சிறுகுடி, 18
சிறுசெப்பு, 30
சின், 96
சின்னம் 69
சீயணர், 78
சீனிவாசநல்லூர், 52
சுந்தரி, 66
சுரகுரு, 56, 75
சுராதிராசன், 56
சுவர்க்க நீக்கம், 98
சுரிகை, 66
சுளகால், 65
சூடகம், 66
சூரவர்க்கன், 56
சூரன், 36
சூராதிராசன், 50
சூரை, 66, 73
சூலிப்பேய், 96
சூறை, 63
செங்கணன், 50
செங்குட்டுவன் 9, 47
செண்டு, 66
செந்நாய், 65
செப்பலோசை, 101
செப்பு - பரணி, 31
சேக்ஸ்பியர், 89, 93, 110
சேகுணர், 78
சேதிபர், 78
சேரர், 56 57
சேவணர், 78
சைனர், 23
சொட்டு, 69
சொத்தை, 70
சோணட்டு. 69
சோழர்குலம், 77
சேரநாட்டார், 73
சோழன் தலைமுறை, 77
சோழன் செங்கண்ணன், 56
தக்கணலாடம், 12
தக்கயாகப்பரணி, 45
தஞ்சாவூர், 16
தட்சன், 36
தண்டபுத்தி, 12
தண்டு, 66
தண்ணுமை, 66
தமருகம், 66
தமிழ்நாவலர் சரிதை, 18, 25
தருமன், 56
தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் 36
தன்மபாலன், 12
தாம்பூலம், 65, 70
தாயுமானவர், 103
தாராவருஷன், 56
திகிரிமலை, 59
திமிலி, 59
தியாகவல்லி, 58
திரிசங்கு, 57
திரிலோசன சிவாச்சாரியார், 13
திரிலோசனன், 57, 67
திருச்சி, 52
திருத்தொண்டர், 45
திருநிறையூர், 54
திருப்பனந்தாள், 37
திருப்பாதிரிப்புலியூர், 36
திருப்பாவை, 46
திருமகள், 21
திருமந்திர ஓலை, 79
திருமந்திர ஓலையார், 78
திருமால், 21
திருவெம்பாவை, 46
திரைச்சீலை, 67
திலீபன், 57
திவாகர நிகண்டு, 34
தீ நிமித்தம், 77
தீபங்குடி, 17, 18
தீபங்குடிப்பத்து, 19

தீபனூர், 17
துங்கபத்திரை, 60
துரிஞ்சில், 66
துடி, 66
துணங்கை, 26
தும்பிலி, 57, 59
தும்பை, 73
துமிந்தர் 78
துருக்கர், 78
துலாம், 68
துள்ளலோசை, 78
துளும்பர், 101
தூங்கலோசை, 101
தூங்கெயில் எறிந்தவன், 50
57
தூசி, 69
தூண், 65
தெய்வநாயகம், 37
தெலுங்கர், 64, 70
தெற்றல், 69
தெறிப்பாட்டு, 35
தென்மதுராபுரி, 59
தென்னவர், 78
தென்னன்குடி, 18
தேவபாணி, 29, 33
தேவியைப்பாடியது, 40, 41
தேறு, 66
தொடை, 104
தொல்காப்பியம், 26, 88
தொல்காப்பியர், 88
தொன்னூல் விளக்கம், 28
தோற்கருவி, 106
நகை, 94
நச்சினார்க்கினியர், 26, 34
நரி, 65
நவநீதப்பாட்டியல், 28
நவிலை, 59
நாககன்னி, 56
நாச்சியார், 17, 54
நாடக ஆசிரியன், 83
நாடகக்காட்சி, 72
நாமகள், 21
நாரதர், 22
நாராயணன், 46
நான்முகன், 21
நிணச்சட்டை, 75
நிணமாலை, 95
நித்தகாரர், 69
நிமித்தம், 62
நீரா மகளிர், 45
நீலி, 95
நெடுஞ்செழியன், 56
நெல்லி, 73
நெல்லூர், 92
நெல்லை, 66
நெற்று, 70
நொடிபயிற்றுவாள். 62
பகடு, 65
பகீரதன், 92
பஞ்சபன், 50
பஞ்சவர், 57
பட்டினப்பாலை, 56, 59
படைக்கட்டளை, 107
பணிலம், 66,
பதிற்றுப்பத்து, 27
பம்மை, 60
பரண், 30
பராசதர், 22
பராந்தகன், 50
பரிபுரம், 66
பரிவிருத்தி, 69
பருந்துக்கொடி, 61
பல்லவநாடு, 59
பல்லவர், 58, 78
பலிபீடம், 74
பவளவடம், 66
பவனபதம், 69
பள்ளு, 82
பன்றிக்கொடி, 61
பன்னிருபாட்டியல், 10, 27, 41

பனை, 66
பாகுவலயம், 66
பாசவதைப்பரணி, 30
பாடகம், 66
பாண்டவன், 50
பாண்டியர், 56, 57
பாணர், 64
பாணி, 33
பாம்புக்கொடி, 61
பாரதம், 22, 59
பாராவளை, 66
பாரிபோகம், 69
பாறை, 66, 73
பாலக்காடு, 41
பாலமரபினன், 11
பாலாறு, 60
பாலைக்கலி, 14
பாலுறவு, 35
பாலை, 41, 66, 73
பாலைவனம், 41, 73
பாவைநோன்பு, 46
பாவம், 99
பாவோசை, 101
பானை, 64
பிடக்கர், 78
பிரபந்தத்தீபிகை, 28
பிரபந்த மரபியல், 10, 28, 41
பிரிதுலாட்சன், 50, 57
பிரம்மன், 21
பிள்ளைத் தமிழ், 107
பிற்காலச் சோழர், 9
பீர்பூம், 12
புத்தப்பேய், 96
புத்தர், 23
புதுக்குடி, 18
புரவிப்படி, 69
புலிக்கொடி, 55
புறக்கிடல், 69
புறநானூறு, 27
புளகம், 69
புனிதம், 69
புன்கு, 66, 63
பூணூல், 64
பெண்ணை, 60
பெரியபுராணம், 49
பெருஞ்சேரலாதன், 56
பேய்களைப்பாடியது, 40
பேய்முறைப்பாடு, 40, 41
பேராசிரியர், 34
பேராறு, 60
பொய்கை, 56
பொய்கையார், 58, 88, 89
பொருநர், 26
பொருநை. 60
பொன்மாலை, 66
பொன்முகரி. 60
பொன்னுலாகிய தேங்காய், 24
போர் பாடியது, 40
பௌத்தர், 64
மகரக்குழை, 67
மகரதோரணம், 68
மகாபாரதம், 98
மகிபாலன், 11
மச்சர், 78
மதுரை, 59
மந்தரமலை, 59
மடைக்கலம், 33
மண்ணை, 59
மண்டை, 69
மணலூர், 59
மணிவடம், 67
மணியாங்குடி, 18
மத்திரர், 78
மதம், 95
மதுர சுந்தரி, 58
மயிந்தர், 78
மயில், 66
மயிலை, 59
மயிலைநாதர், 35

மரகதர், 78
மரந்தாதா, 50
மராடர், 78
மரீசி, 22, 50
மருத்துவக்குடி, 18, 19
மருத்யுசித்து, 50
மல்லிநாத ஜெயின் 19
மல்லை, 59
மலேச்சு, 78
மலை நாடு, 59
மழு, 66
மறி மாடி, 95
மனு, 50
மனுதர்மம், 22
மனுநீதி, 57
மனுநூல், 59
மாக் பத், 89, 100
மாசுணன், 60, 66
மாதவன், 16
மாந்தாதா, 57
மாமல்லபுரம், 92
மாயன், 46
மாயனை, 46
மால், 50
மான், 65
மானுவர், 78
மிதிலை, 12, 59
மிதுனபுரி, 12
மில்டன், 93, 98, 99
மிறைத்தல், 69
மீனக்கொடி, 61
முகுந்தன், 50, 57
முடத்தாமக் கண்ணியார், 58
முடிகொண்ட சோழர், 58
முண்டித்தல், 70
முத்துப்பொடி, 96
முதல் இராச இராசன், 57
முதல் இராசாதிராசன், 57
முதல் குலோத்துங்கன் 20, 36, 49, 54, 57
முதல்சோமேஸ்வரன், 58
முதல் பராந்தகன், 58
முதுபேய், 75
முந்நாழிமுலை, 35
முருகவேல், 21
முருகன், 21
முள்ளி, 66, 73
முர்சிபாத், 12
மேரு, 45, 59
மோகவதைப்பரணி, 45
யமகந்திரிபு, 102
யமுனை, 60
யாதவர், 78
யாழ், 66
யாளி, 60, 66
யாளிக்கொடி, 61
யானைக்கொடி, 61
யோகினிமாதர், 76
வங்கர், 78
வங்களர், 78
வங்காளம், 11
வங்காளர், 12
வச்சணந்தி, 27
வட்டணங்கள், 69
வடகலிங்கம், 52
வண்டலூர், 53
வண்டாழஞ்சேரி, 54
வண்டுவாஞ்சேரி, 54
வண்டை, 54
வண்டைநகர், 53, 59
வத்சமாநிலம், 51
வத்தவர், 78
வயிராகரம், 59,
வரதராசன், 58
வள்ளி, 66, 73
வள்ளைப்பாட்டு, 95, 47
வன்னசரம், 67
வாண கோவரையன், 58
வாதராசன், 50
வாமனன், 21

வானர மகளிர், 45
வானவர், 57
விகுட்சிவேந்தன், 58
விசயதரன், 79
விடவி, 69
விடுகம்பி, 67
விடைத்து, 69
விண்டு, 73
விண்ணில் வேஷம் உகைந்தவன், 50
விந்தமலை, 59
வியாசர், 22
விராடர், 78
வில்ப்ரட்ஓவன், 87
வில்லவர், 78
விழிஞம், 59
விற்கொடி, 61
வின்ஸ்டன்சர்ச்சில், 86
விஜயாதித்தன், 58
வீணை, 60, 66
விரமகள், 21
வீரமகேந்திரன், 50
வீரராசேந்திரன், 36, 55, 58
வீரை, 66, 73
வெண்பாப்பாட்டியல், 28
வெள்ளி, 73
வெள்ளிமலை, 59
வேங்கி, 58
வேதம், 16, 59
வேதியர், 63
வேளம், 69
வையர், 69
டிராயில், 89
லியூசிடாஸ், 98
ஜைனகெசட், 19
ஜைனப்பள்ளி, 19
ஜோதிடப்பேய், 77
ஷஸீன், 86
ஸ்ரீகாஞ்சி, 25
ஹண்ட், 86
ஹோமர் 85


## பரணியால் அறியப் பெறும் அரசர்கள்

[58-ஆம் பக்கம் பார்க்க]

தென்னவர், வில்லவர், கூபகர், சாபகர், சேதிபர், யாதவர், கன்னடர், பல்லவர், கைதவர். காடவர், காரிபர், கோசலர், கங்கர், காரளர், கவிந்தர், துமிந்தர், கடம்பர், துளும்பர், வங்கர், இலாடர், மராடர், விராடர், மயிந்தர், சயிந்தர், சிங்களர், வங்களர், சேகுணர், சேவணர், செய்யவர், ஐயணர், கொங்கணர், கொங்கர், குலிங்கர், சவுந்தியர், குச்சரர், கச்சியர், வத்தவர், மத்திரர், மாளுவர், மாகதர், மச்சர், மிலேச்சர், குத்தர், குணத்தர், வடக்கர், துருக்கர், குருக்கர், வயந்தர்.

## திருமதி & திரு. அறவாணன்

## எழுதியவை & பதிப்பித்தவை.

| | | |
|---|---|---|
| கவிதை கிழக்கும் மேற்கும் | ரூ. 4 | 00 |
| நீ ஒரு பண்புத் தொகை | ரூ. 4 | 00 |
| தற்காலத் தமிழ் முன்னோடிகள் | ரூ. 8 | 00 |
| கல்வித் துறை உருப்படி | ரூ. 6 | 00 |
| தொல்காப்பியக் களஞ்சியம் | ரூ. 20 | 00 |
| தொல்காப்பிய ஒப்பியல் | ரூ. 10 | 00 |
| அவிநயம் | ரூ. 9 | 00 |
| ஐந்திரம் | ரூ. 2 | 00 |
| அமுத சாகரம் | ரூ. 4 | 00 |
| இந்திரகாளியம் | ரூ. 2 | 00 |
| சைனரின் தமிழிலக்கண நன்கொடை | ரூ. 25 | 00 |
| இலக்கிய ஒப்பாய்வு | ரூ. 10 | 00 |
| நாட்டுப்புற இலக்கியப் பார்வைகள் | ரூ. 6 | 00 |
| அவள் அவன் அது (கதைகள்) | ரூ. 3 | 00 |
| ஆராய்ச்சித் தமிழ்—ஒரு முன்னுரை | ரூ. 1 | 00 |
| புதிய கோலங்கள் | ரூ. 4 | 00 |
| Research Papers on Tamilology | ரூ. 5 | 00 |
| ஆய்வுக் கொத்து | ரூ. 5 | 00 |
| கட்டுரை எழுதுதல் எப்படி? | ரூ. 2 | 00 |
| பெண் மொழி | ரூ. 3 | 00 |
| புரட்சிப் பொறிகள் | ரூ. 3 | 00 |
| காலப் போக்கும் கல்லூரிப் போக்கும் | ரூ. 1 | 00 |